GOKULAM

கோகுலம்



திருவண்ணாமலை ஸ்பெஷல்

மாறுவேடப் போட்டி

ஆவின் பால் பண்ணைக்கு ஒரு விசிட்

ரூ.6/-

ஆகஸ்ட் 2003

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622 / 23 / 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-


Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.


குழந்தைகள் மனம் கவர்ந்த இதழ்


3


9


12


25


40


41


48


80

ஆகஸ்ட் 2003 மலர் : 21 இதழ் : 7

கோகுலம்


உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.


ஹா...ஹா...ஹா...!

''இந்த அட்ரஸ் எங்க இருக்குன்னு கொஞ்சம் சொல்லுங்களேன்!''
''உங்க கைல தான் இருக்கு!''
— எம். வினோத்



''நாங்க எப்ப சிரிச்சாலும் எங்கப்பா சாட்டையோட வருவாரு.''
''ஏன்?''
''சிரிப்பை அடக்கத்தான்!''
— வசந்தா காந்த்





''அவரை ஏன் நாய் துரத்துது?''
''அவர் பேரு இரும்'பொறை' அதான்!''
— டி.என். பாலகிருஷ்ணன்



அழ. வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டி முடிவு

இந்த ஆண்டும் சிறுகதைப் போட்டிக்கு நிறைய மாணவ, மாணவியர் கதைகளை அனுப்பியிருந்தனர். எழுத்தாளரும் பத்திரிகையாளருமான சாருகேசி அவர்கள் நடுவராக இருந்து பரிசுக் கதைகளைத் தேர்ந்தெடுத்தார்.

முதல் பரிசு: **உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்!**

மா. திருவாய்மொழி,
பன்னிரண்டாம் வகுப்பு,
நா.ம.அரசு மகளிர் மேல் நிலைப் பள்ளி, திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.

இரண்டாம் பரிசு: **வைரக்கல்லின் கர்வம்!**

எஸ். கவிதா,
பத்தாம் வகுப்பு, ஸ்ரீ ஜெயேந்திரர் வெள்ளி விழா பள்ளி, மகாராஜா நகர், திருநெல்வேலி.

மூன்றாம் பரிசு: **எல்லா மனிதனும் ஒண்ணுதான்!**

பா. சுவாமிநாதன்,
பன்னிரண்டாம் வகுப்பு, ஐ.சி.எஃப். வெள்ளி விழா பள்ளி, சென்னை.

போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.

மா.திருவாய்மொழி



உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்!

சுற்றுலாச் சென்று திரும்பிய அருண், தன் பையையும் தன் தங்கை தேன்மொழியின் பையையும் தூக்கி வீட்டிற்குள் எறிந்து விட்டு, வந்தான்.

வராந்தாவில் படுத்திருந்த நாய்க்குட்டி "வள்...வள்..."என்று செல்லமாகக் குரைத்துக் கொண்டு அருண் மேல் தாவியது. "மியாவ்..." என்று குரல் எழுப்பியபடி பூனைக்குட்டி ஓடி வந்தது.

"ஹலோ ஃபிரண்ட்ஸ், எப்படியிருக்கீங்க?" என்றவாறு நாயை இடது கையிலும் பூனையை வலது கையிலும் தூக்கிக் கொண்டான்.

"எங்கடா அவ?"

"அதோ பின்னாடி, ஆடி அசைஞ்சுக்கிட்டுப் புது விருந்தாளியோட வருது."

"புது விருந்தாளியா? யார்டா அது?" என்று அம்மா கேட்டுக் கொண்டிருக்கும்போதே, ஒரு குரங்குக் குட்டியை அணைத்தவாறு உள்ளே நுழைந்தாள் தேன்மொழி.

"அடிப் பாவி! இருக்கிற பிராணிகள் பத்தாதுன்னு இது வேறயா?"

"இப்ப ஏம்மா கத்துறே? இப்ப என்ன நடந்து போச்சு?" என்றாள் தேன்மொழி.

"என்னடி நடக்கலே? ஒரு பக்கம் பூனை, இன்னொரு பக்கம் நாய்.

அழ. வள்ளியப்பா நினைவு சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை

இப்ப குரங்கு. இது வீடுன்னு நெனச்சியா? இல்ல மிருகக் காட்சி சாலையின்னு நெனச்சியா?" என்று தாம் தூம் என்று குதித்தார் அம்மா.

தேன்மொழி குரலைத் தாழ்த்தி, "ப்ளீஸ்ம்மா.... பாவம்மா! கையொடிஞ்சு போன குரங்கும்மா. அந்தக் கோடி வீட்டுக் குமார் கல்லாலடிச்சுக் கையை ஒடிச்சுட்டாம்மா. அதான் தூக்கிட்டு வந்தேன்" என்று மிக அனுதாபத்தோடு கூறினாள்.

"என்னடி சொல்றே? குரங்குக் குட்டி கையை ஒடிச்சுப்புட்டானா? பாவிப்பய" என்றவாறு அருகில் வந்து குரங்குக் குட்டியைப் பார்த்தார் அம்மா.



"அம்மா, உன் செல்ல மகள் சும்மா தூக்கிட்டு வரலே. ஆஸ்பத்திரிக்குப் போயி... கட்டுப்போட்டு... ஊசிபோட்டு... வாழைப்பழத்துக்குள்ளே மாத்திரை வச்சுக் கொடுத்துத் தூக்கிட்டு வந்திருக்கா" என்றான் அருண்.

"அண்ணந்தாம்மா, தூக்கி வந்துச்சு. ஆஸ்பத்திரிக்குப் போனோம்" என்றாள் தேன்மொழி.

உங்க பாடு உங்க அப்பா பாடு. ஆள விடுங்க" என்றபடி உள்ளே போனார் அம்மா.

கண் விழித்த குரங்கு வேதனையால் முனகியதோடு, விடுவித்துக் கொள்ள முயன்றது.

அருண் ஒன்பதாம் வகுப்பும், தேன்மொழி எட்டாம் வகுப்பும் படித்து வருகிறார்கள். பள்ளியில் ஏற்பாடு செய்திருந்த பிரான்மலைச் சுற்றுலாவிற்குச் சென்று திரும்பியிருந்தார்கள்.

பலவித மரங்களும், செடி, கொடிகளும் அவற்றிற்கிடையே உலவி வரும் குரங்குகளும், பறவைகளும், அவற்றின் ஒலிகளும், ஏதோ புதிய உலகத்திற்குள் நுழைந்தது போன்ற பிரமிப்பை ஏற்படுத்தின.

அருண், தேன்மொழி, குமார் மூவரும் இயற்கைக் காட்சிகளை ரசித்துக் கொண்டு வந்தனர்.

முக்காலிக் கல்லுக்கு மாணவர்கள் வந்து சேர்ந்த போது மதியம் ஒரு மணி. மாணவர்கள் தாங்கள் வீட்டிலிருந்து கொண்டு வந்த மதிய உணவைச் சாப்பிடுவதற்காக ஆங்காங்கே மர நிழலில் அமர்ந்தனர்.

அருண், தேன்மொழி, குமார் மூவரும் ஓரிடத்தில் அமர்ந்தனர். குரங்குகள் இவர்களைச் சூழ்ந்து கொண்டிருந்தன. "சூ...சூ..." என்று விரட்டிக் கொண்டே மாண வர்கள் சாப்பிடத் தொடங்கினர்.

இந்த நேரத்தில்தான் அந்த எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது.

பேச்சுச் சுவாரஸ்யத்தில் இருந்த குமாரின் சாப்பாட்டுப் பாத்திரத்தை, ஒரு குட்டிக் குரங்கு தூக்கிக் கொண்டு ஓடியது. இதை எதிர் பார்க்காத குமார், பக்கத்தில் இருந்த கல்லை எடுத்து எறிய, அந்தக் கல் குரங்குக் குட்டியின் வலது கையைத் தாக்கி ஒடித்து விட்டது. "வீல்...வீல்..." என்று கத்திக் கொண்டு உருண்டு புரண்டு வலது கையைத் தூக்கிக் கொண்டு ஓட முடியாமல் ஓடியது. இதைப் பார்த்த குமார், "திருட்டுக் குரங்கே என்கிட்டயா உன் திருட்டு வேலையைக் காட்டுறே?"

என்று கைகொட்டிச் சிரித்தான்.

"அடப் படுபாவி! குட்டிக் குரங்கைக் கல்லால் அடிச்சதுமில்லாமல் கைகொட்டி வேற சிரிக்கிறியா?" என்றபடி அருண் எழுந்து ஓடினான். தேன்மொழி பின் தொடர்ந்தாள். பெரிய குரங்குகள் குட்டிக் குரங்கைச் சூழ்ந்து காச் மூச்சென்று கத்தின.

"டேய்...டேய்.. ஏண்டா அந்தச் சனியனைத் தூக்கிட்டு வர்றே? போட்டுட்டு வாடா" என்றான் குமார்.

அருணும், தேன் மொழியும் சுற்றுலா அழைத்து வந்த ஆசிரியரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு முக்காலிக் கல்லை விட்டுக் கீழிறங்கி ஓடினர்.

கால்நடை மருத்துவமனை இருக்குமிடத்தை அறிந்து டாக்டரிடம் சென்று நடந்ததைக் கூறினர்.

"கவலைப்படாதே தம்பி! குட்டிக் குரங்குதான். மட்டை வைத்துக் கட்டி மருந்து மாத்திரை கொடுத்தால் சீக்கிரம் குணமாகிவிடும்" என்றபடி சிகிச்சையைத் தொடங்கினார் டாக்டர். குரங்குக் குட்டியோ துள்ளிக் கொண்டு விடுபட முயன்றது. இதைக் கண்ட டாக்டர் மயக்க ஊசி போட்டு மயங்கச் செய்த பின் சிகிச்சையைத் தொடங்கினார்.

"தம்பி! காட்டுக் குரங்குங்கிறே, சிகிச்சை செய்து காட்டில் விட்டால், அங்கும் இங்கும் அலைஞ்சு சீக்கிரம் குணமாகாதேப்பா" என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பினார்.

"பாவம்! கால் குணமாகும் வரை நாமே



கோவை மாவட்டச் சிறப்பிதழ்

செப்டெம்பர் இதழ் கோவை மாவட்டச் சிறப்பிதழாக வெளிவர இருக்கிறது.

அடுத்தது தர்மபுரி மாவட்டச் சிறப்பிதழ்

தர்மபுரி மாவட்ட பள்ளி மாணவ, மாணவியர் இப்பொழுதே தங்களின் படைப்புகளை அனுப்ப ஆரம்பிக்கலாம். கதைகள், கவிதைகள், துணுக்குகள், ஜோக்ஸ், புதிர்கள், அனுபவங்களை எழுதி அனுப்பலாம். இது தவிர தர்மபுரி மாவட்டத்தின் சிறப்புகள், வரலாற்று அம்சங்களையும் எழுதலாம். கடைசித் தேதி: 15.8.2003. பிரசுரமானால் பரிசு உண்டு.

வளர்க்கலாம்!" என்றாள் தேன்மொழி.

"இது சரியான யோசனை தம்பி. குணமாகும் வரையில் நீங்க வளர்க்கலாம். அடிக்கடி ஆஸ்பத்திரில காட்டி மருந்து, மாத்திரை கொடுத்தா, சீக்கிரம் குணமாகிடும். அப்புறம் காட்டில் விட்டாலும் பரவாயில்லே" என்றார் டாக்டர்.

குரங்குக் குட்டியுடன் பேருந்து வண்டிக்கு வந்தபோது, எல்லா மாணவர்களும் வந்திருந்தார்கள்.

"அடே அருண்! ஏண்டா இந்தக் குரங்கைக் கட்டி அழறே. போட்டுட்டு வாடா" என்றான் குமார்.

ஒரு மாதம் சென்றது. மாருதி, "கிர்யா...கிர்யா..." என்று கத்தியபடி வேகமாக ஓடி வந்து அருணின் கையைப் பற்றி இழுத்தது.

"என்னடா மாருதி?" என்றபடி அருண் பின் தொடர, தேன்மொழியும் தொடர்ந்தாள். அங்கே குமார் கீழே விழுந்து, "அம்மா...அம்மா..." என்று முனகிக் கொண்டு கிடந்தான். தூரத்தில் மஞ்சு விரட்டுக் காளை ஒன்று சென்று கொண்டிருந்தது. "என்னடா குமார்? என்ன நடந்தது?" என்றபடி அருணும் தேன்மொழியும் குமாரைத் தூக்கினர்.

"எங்கோ மஞ்சு விரட்டுக்குச் சென்று வந்த காளை, தன் கொம்புகளால் தூக்கி எறிந்து விட்டது" என்றபடி எழுந்து நின்றபோது அவன் வலது கை ஒடிந்து தொங்கிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் அழத் தொடங்கினான் குமார்.

"அழாதேடா" என்ற அருண், அவனைக் கைத் தாங்கலாகப் பிடித்துக் கூட்டி வந்து, ஈரத் துணியால் ஒடிந்த கையைச் சுற்றிக் கட்டினான். பிறகு அப்பாவின் உதவியுடன் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். இவர்களுக்கு முன்னால் மாருதி மருத்துவமனையை நோக்கி ஓடியது.

அருண், தேன்மொழி, அப்பா மூவரும் மருத்துவமனைக்குள் நுழைந்தபோது, மாருதி வாசலில் அமர்ந்திருந்தது.

இதைப் பார்த்த குமார் விக்கி விக்கி அழுதான். "ஆஸ்பத்திரி வந்தாச்சுடா. அப்புறம் ஏன் அழறே?" என்றான் அருண்.

"அதுக்கில்லேடா... அன்னைக்கு இந்தக் குரங்குக்குட்டியின் கையை நான்தான் ஒடிச்சேன். ஆனா, அஞ்சறிவு உயிரா இருந்தாலும், என்னை மாடு தூக்கி எறிந்தவுடன் ஓடி வந்து உன்னைக் கூட்டி வந்ததோடு, இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறதைப் பார்க்கிறபோது, அதுக்கு இருக்கிற நேயம் கூட என்னிடம் இல்லையே என்பதை நினைத்துத்தான்டா அழறேன்" என்றான்.

"குமார், நாம் உயிர்களிடத்தில் அன்பு செலுத்தினால் அந்த உயிர்களும் நம் மீது அன்பு செலுத்தும். உன்னால் துன்பம் அடைந்த மாருதி அதை மறந்து உனக்கு உதவியிருக்கிறது என்றால், நாம் அதன் மீது காட்டும் அன்புதான். இதை நீ புரிந்து கொண்டால் சரி" என்றான் அருண்.

"புரிந்து கொண்டேன் நண்பா. இனி நான் எந்த உயிர்களுக்கும் துன்பம் செய்ய மாட்டேன். உன்னைப் போலவே பிற உயிர்கள் மீதும் அன்பு செலுத்துவேன்" என்றான்.

அருகில் அமர்ந்திருந்த மாருதி, "கொர்... கொர்... கிரிக்கா... கிரிக்கா" என்றது.



பிரார்த்தனைக்குக் கிடைத்த பலன்!

● உங்கள் அப்பாவிடம் மோட்டார் பைக், கார் ஏதாவது இருக்கிறதா? அப்படியென்றால் நிச்சயம் சிறுவர்களான உங்களுக்கு பைக், கார் ஓட்டத் தெரியாது என்றாலும் கூட, அதில் உட்கார்ந்து கொண்டு, ஓட்டுவது போல போட்டோ எடுத்துக் கொண்டு இருப்பீர்கள் இல்லையா?

அதுபோலத்தான் இந்தப்படமும். நாய்க்கு எங்காவது பியானோ வாசிக்கத் தெரியுமா? ஆனால் இந்த நாயைப் பாருங்கள். சூப்பராக பின்னங்கால்களில் எழுந்து நின்றபடி, முன்னங்கால்களைக் கைகளாக்கி, பியானோ மீது வைக்கப்பட்டிருக்கும் பேப்பரைப் பார்த்து பியானோ வாசிக்கிறது இந்த நாய்! இது எப்படி இருக்கு?

அடுத்து சில ஜோக்ஸ்...

● உடல் நலம் குறித்த ஒரு கருத்தரங்கம் நடந்தது. ஹார்ட் அட்டாக் பற்றிப் பேசிய டாக்டர், "பிரிட்டிஷ்காரர்களையும், அமெரிக்கர்களையும் விட, ஜப்பானியர்கள் குறைச்சலாகக் கொழுப்பு உணவுகளைச் சாப்பிடு கிறார்கள். ஜப்பானியர்களுக்குக் குறைவாகவே ஹார்ட் அட்டாக் வருகிறது. ஆனால், ஃபிரெஞ்சுக்காரர்கள், பிரிட்டிஷ்காரர்களையும் அமெரிக்கர்களையும் விட அதிகமாகக் கொழுப்பு உணவுகளைச் சாப்பிடு கிறார்கள். ஆனால் அவர்களுக்கு, ஹார்ட் அட்டாக் குறைவாகவே வரு கிறது. இதிலிருந்து என்ன புரிகிறது?" என்று அரங்கில் அமர்ந் திருந்தவர்களைப் பார்த்துக் கேட்டார்.

உடனே குறும்புக்கார ஆசாமி ஒருவர் எழுந்து சொன்ன பதில்:

"மனிதர்கள் எவ்வளவு கொழுப்பு உணவு வேண்டுமானாலும் சாப்பிடலாம். ஆனால் ஆங்கிலம் மட்டும் பேசக் கூடாது. பேசினால் ஹார்ட் அட்டாக்தான்!"

● மூன்று பையன்கள் தங்கள் அப்பாக்களின் திறமைகளைப் பற்றி விவாதித்தார்கள்.

முதல் பையன் சொன்னான்: "என் அப்பா பிரமாதமான கிரிக்கெட்டர். மணிக்கு நூறு மைல் வேகத்தில் பந்தை வீசிவிட்டு, விக்கெட் கீப்பர் இடத்துக்கு விரைந்து வந்து, பந்தை கேட்ச் பிடித்து விடுவார்.""

இரண்டாவது பையன் சொன்னான்: "என்னை நிற்க வைத்து குறிபார்த்து சுட்டுவிட்டு, புல்லட் என் மீது படுவதற்குள் வேகமாய் ஓடி வந்து தன் கையாலேயே புல்லெட்டை நிறுத்தி என்னைக் காப்பாற்றி



விடுவார்."

மூன்றாவது பையன்: "என் அப்பா அரசாங்க ஆபீசில் வேலை பார்க்கிறார். ஆறு மணிக்கு ஆபீஸ் விட்டால், மதியம் நாலு மணிக்கெல்லாம் அவர் வீட்டுக்கு வந்து விடுவார்!"

● ஒரு சர்ச்சில், பணம் வைக்கிற பெட்டி ஒன்றைப் புதிதாக வாங்கி இருந்தார்கள். அதற்கு வழக்கமான சாவிக்குப் பதிலாக, பூட்டில் இருக்கும் சுழலும் எண்களைத் திருப்பி, ஒரு குறிப்பிட்ட எண்ணைக் கொண்டு வந்தால் போதும், பூட்டு திறந்து கொண்டுவிடும்.

ஒரு நாள், பெட்டியைத் திறக்க வந்த பாதிரியாருக்கு, அந்தக் குறிப்பிட்ட எண் மறந்து போய், பூட்டைத் திறக்க சிரமப்பட்டார். சட்டென்று ஏதோ நினைவுக்கு வர நேரே சர்ச்சின் ஜீசஸ் சிலைக்கு அருகில் சென்று, சிலையின் பாதங்களைக் குனிந்து வணங்கி விட்டு வந்து, பூட்டின் எண்களைத் திருக, பூட்டு திறந்து கொண்டது.

பக்கத்தில் இருந்தவருக்கு ஒரே ஆச்சரியம்! "உங்களின் இரண்டு விநாடி பிரார்த்தனைக்கு கர்த்தர் உடனே செவி சாய்த்து விட்டாரே!" என்று ஆச்சரியமாய்ச் சொல்ல, பாதிரியார் சொன்னார், "நான் பிரார்த்தனை செய்யப் போகவில்லை. பூட்டைத் திறக்கும் சரியான எண்ணை, ஜீசஸ் சிலையின் பாதத்தில் எழுதி வைத்திருந்தேன். அதைப் பார்த்துவிட்டு வரத்தான் போனேன்!"

சில தகவல் சிப்ஸ் கொறிக்கலாமா?

● நோபல் பரிசு நூறு வருடங்களுக்கு முன் நிறுவப்பட்டது. ஆனால் கடந்த நூறு வருடங்களில், பத்தொன்பது வருடங்களில், யாருக்குமே நோபல் பரிசு வழங்கப் படவில்லை. அது மட்டுமில்லை. முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்களின் போது நோபல் பரிசு வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டது.

● ஆண்ட்ரூ ஜாக்ஸன் என்பவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தவர். அவரது கல்லறையில், அவர் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார் என்பதே குறிப்பிடப் படவில்லை.

● ஆஸ்திரேலியாவின் பரப்பில் 36% பாலைவனம்தான்.

● தேனீ பறக்கிறபோது, தன் இறக்கைகளிலிருந்து 'விர்ர்...' என்று ஒரு சத்தம் வருவதைக் கவனித்திருக்கிறீர்களா? தன் இறக்கைகளை விநாடிக்கு 250 தடவை அசைப்பதன் காரணமே இந்தச் சத்தம்.

● 11,11,11,111, பதினோரு கோடியே பதினோரு லட்சத்து பதினோராயிரத்து நூற்றுப் பதினொன்று என்கிற எண்ணை அதே எண்ணால் பெருக்கினால் என்ன விடை வரும் தெரியுமா?

12345678987654321

ஆச்சரியமாக இல்லை!

தொகுப்பு: எஸ். சந்திரமௌலி

அன்புள்ள ஜக்கு...



● மா. சிவகணேஷ்,
திருத்துறைப்பூண்டி

? டார்வின் பரிணாமக் கொள்கைப்படி இன்று உள்ள குரங்கு பல தலைமுறை கழித்து மனிதனாகுமா?

நல்ல கேள்வி சிவகணேஷ்! உங்கள் கேள்விக்குப் பதில் தெரியாது என்றுதான் சொல்ல முடியும். மனிதனும் குரங்கும் ஒரே மூதாதையர்களிடமிருந்து சுமார் 650 லட்சம் ஆண்டுகளுக்கு முன் தோன்றி சுமார் 500 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர்தான் இவற்றில் பிரிவுகள் உண்டாயின. இது பரிணாமக் கொள்கையின்படி அறியப்பட்ட உண்மை. பரிணாமத்தில் ஒரு சிறு மாற்றம் ஏற்பட, பல லட்சம் ஆண்டுகள் ஆகலாம். இந்த மாற்றத்திற்கு காலநிலை, சூழ்நிலை முக்கிய காரணிகளாக அமைகின்றன. மேலும் உயிரின் செல்களிலுள்ள ஜீன் தொகுப்பின் மாற்றமும் பண்புகள் மாற அடிப்படையாக அமைகின்றது.

நண்பன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்?

● என். ஆஷா, கோவை.

? பூக்கள் ஏன் கண் கவர் வண்ணங்களில் தோற்றமளிக்கின்றன?

தாவரங்கள் இனப் பெருக்கம் செய்ய மகரந்தச் சேர்க்கை அவசியம் என்பது உங்களுக்கே தெரியும். பூக்களில் மகரந்தத் தூள் இருக்கிறது. மலர் விட்டு மலர் தாவும் தேனீக்கள், வண்ணத்துப் பூச்சிகள் மற்றும் பல வண்டினங்களும், ஒரு தாவரத்திலிருந்து மற்றொரு தாவரத்திற்கு மகரந்தத்தை எடுத்துச் செல்ல உதவுகின்றன. இப்படி மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதற்குப் பூச்சி, வண்டினங்களைக் கவர்ந்து இழுக்க வேண்டிய தேவை தாவரங்களுக்கு ஏற்படுகிறது. எனவே பூச்சி, வண்டுகளைக் கவரவே பூக்கள் கண் கவர் வண்ணங்





மாறுவேடப் போட்டி

மாறுவேடம் போடுவது என்றால் உங்களுக்கு எல்லாம் ரொம்ப சந்தோஷமாக இருக்கும் இல்லையா! காந்தி, தெரசா, வீரப்பன், மைக்கேல் ஜாக்ஸன், பாரதியார், இந்திராகாந்தி, யாசர் அராஃபத் என நீங்கள் யார் மாதிரி வேண்டுமானாலும் மாறுவேடம் போடலாம். மாறுவேடம் போட்டு வண்ணப் புகைப்படங்களாக எடுத்து கோகுலத்துக்கு அனுப்பி வையுங்கள்.

மிகச் சிறந்த, முதல் பரிசு பெறும் புகைப்படம் கோகுலம் அட்டையில் வெளிவரும். மற்ற படங்கள் இதழில் வெளியாகும்.

முதல் பரிசு	: ரூ. 200/-
இரண்டாம் பரிசு	: ரூ. 150/-
மூன்றாம் பரிசு	: ரூ. 100/-

தேர்ந்தெடுக்கப்படும் மற்ற புகைப் படங்கள் ஆறுதல் பரிசாக ரூ. **50/-** பெறும்.

புகைப்படங்கள் வந்து சேர வேண்டிய கடைசித் தேதி **6.8.2003.**

புகைப்படங்களை உடனே அனுப்புங்கள். பரிசுகளை வெல்லுங்கள்!

களில் காட்சியளிக்கின்றன.

● **ப.காளிதாசன், நீர்விளங்குளம்.**

? நண்பன் என்றால் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும்?

என்னைப் பொறுத்தவரை உறவு முறைகளில் மிகவும் முக்கியமானது நட்பு. நண்பன் என்பவன் நிறை குறைகளோடு நம்மை நேசிப்பவனாகவும், எதையும் எதிர் பார்க்காமல் அன்பு கொள்பவனாகவும் இருக்க வேண்டும். சந்தோஷம், துக்கம் போன்றவற்றில் பங்கு கொள்பவனாகவும், நம் முன்னேற்றத்தில் அக்கறை உள்ளவனாகவும் இருக்க வேண்டும். நான் உங்கள் நண்பன் தானே காளிதாசன்?

● **ஆர். தாரிணி, நாமக்கல்.**

? எனக்கு அடிக்கடி சளி பிடிக்கும். அப்போது வாசனையை நுகர முடியாது. இது ஏன் ஜக்கு?

காற்றில் கலந்துள்ள மணம் நாசித் துளைக்குள் வரும்போது, நுகர்ச்சி செல்களின் மேலுள்ள உணர்விழைகள் செயல்பட்டு, நுகர்ச்சி நரம்பின் மூலம் தகவல் மூளையின் நுகர்ச்சிக் கதுப்பிற்கு அறிவிக்கப் படுகிறது. இந்த ஒருங்கிணைந்த செயல்பாட்டால் நாம் மணத்தை நுகர முடிகிறது.

சளி பிடித்திருக்கும்போது மூக்கில் உள்ள நுகர்ச்சி செல்களின் மேலுள்ள சிலேட்டுமப் படலத்தின் மீது சளி படிந் திருப்பதால் காற்றில் கலந்துள்ள மணம் நுகர்ச்சி செல்களின் உணர்விழைகளைப் பாதிப்பதில்லை. இதனால் நாம் மணத்தை நுகரமுடிவதில்லை.

● **டி. கண்மணி, சேலம்.**

? எனக்குக் கையில் நகம் வளர்க்க ஆசை. ஆனால் அடிக்கடி உடைந்து விடுகிறது. உடையாமல் இருக்க ஏதாவது தகவல் சொல்லு ஜக்கு.

நகம் வளர்க்கிறதைவிட வெட்டி விடுவதே நல்லது. நகம் வளர்த்தால் அழுக்கு சேரக்கூடிய வாய்ப்பு அதிகம். நாம் சாப்பிடும்போது உணவுடன் அழுக்கும் சேர்ந்து வயிற்றுக்குள் போய், நோய் உண்டாக்கக் கூடும். நகம் தவறுதலாக கண்ணிலோ, உடலிலோ படலாம். இதுவும் ஆபத்துதானே! எங்கள் பள்ளியில் நகம் வளர்க்கக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவு போட்டிருக் கிறார்கள். உங்கள் பள்ளியில் எப்படி கண்மணி?

● **ரா. ராம்குமார், வெற்றியாலங்குளம்.**

? கருணை இதயம் இருந்தால் கடவுளை எந்த வடிவில் காணலாம்?

கருணையுள்ள இதயம் மதங்களையும், கடவுள்களையும் கடந்து தூய்மையான அன்பாக வெளிப்படுவது. அதை உணர மட்டுமே முடியும். அதற்கு உருவமில்லை. கருணை இதயம் என்பதே கடவுளின் வடிவம்தான்.

கதையும் புதிரும்



மனதில் உறுதி வேண்டும்!

மாறன் ஓவியம் வரைவதில் கெட்டிக்காரன். அவனுடைய பக்கத்து வீட்டுக்காரன் நகுல். அவனும் ஓவியம் நன்றாக வரைவான். இருவரும் ஒரே வகுப்பில் தான் படிக்கின்றனர். வகுப்பின் கரும்பலகையில், பள்ளி விழாக்களில் இருவரும் தங்கள் கைவண்ணத்தைக் காட்டி அனைவரின் பாராட்டையும் பெறுவர்.

ஆரம்பத்தில் இருவரும் நெருங்கிய நண்பர்களாகத்தான் இருந்தனர். இருவரையும் பல போட்டிகளுக்கு வெளியில் அனுப்ப ஆரம்பித்ததும் தான் பிரச்னை வந்தது. இருவரும் முதல், இரண்டாம் பரிசுகளை மாறி, மாறி வாங்கினர். அதன் பிறகு மாறன், தான் கலந்து கொண்ட போட்டிகளில் எல்லாம் முதலாவதாக வர ஆரம்பித்தான். அவனுக்குப் பள்ளியில் நல்ல பெயர் கிடைத்தது.

இரண்டாம் இடத்தில் இருந்த நகுலுக்கும் மாறனைப் போன்று பெயரும் புகழும் கிடைத்தன.

முதல் இடத்தில் இருந்தாலும் மாறன் தனக்கு முழுமையான பெருமை கிடைக்க வில்லை என்று நினைத்தான். 'நகுல் இல்லா விட்டால் தான் தான் இப்பள்ளியில் சிறந்த ஓவியன். தான் சிறிது பிசு செய்தால், உடனே நகுல் அந்த வேலையை முடித்து நல்ல பெயர் வாங்கி விடுகிறான்' என்று எண்ணினான்.

ஒரு பெரிய நிறுவனம் மாவட்ட அளவில் ஓவியப் போட்டியை நடத்த இருந்தது. அதில் முதல் பரிசு வாங்குபவர் மாநில அளவிலும், இந்திய அளவிலும் கலந்து கொள்ள முடியும்.

மாறனும் நகுலும் ஒரு வாரத்திற்கு முன்பே வேலையை ஆரம்பித்து விட்டனர். நாளை போட்டி. அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் இரண்டு பேரின் படங்களையும் 'பிரமாதம்' என்றனர்.

மாறனும் நகுலின் ஓவியத்தைப் பார்த்தான். உண்மையிலேயே அது பிரமாதமாக வந்திருந் தது.

'இவ்வளவு நல்லா பண்ணிட்டானே! இந்தத் தடவை முதல் பரிசைக் கோட்டை விட்டுடுவேன் போலிருக்கு. அவன் என் இடத்தைப் பிடித்து விட்டால்..? கூடாது' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் மாறன்.

உடனே அவன் புத்தி குறுக்கு வழியில் யோசித்தது. அருகில் இருந்த பிரஷ் நனைத்த தண்ணீரை எடுத்து ஓவியத்தின் மீது கொட்டினான். யாரும் தன்னைப் பார்க்க வில்லை என்று உறுதி செய்து கொண்டு தன் வீட்டுக்கு ஓடிச் சென்றான்.

சாப்பிட்டு வந்த நகுல் தன் ஓவியத்தைக் கண்டு அதிர்ந்தான். அவனுக்கு அழுகையே வந்து விட்டது. அவன் அம்மா சமாதானம் செய்து வேறு ஓர் ஓவியத்தை வரையச் சொன்னார். இரவு முழுவதும் விழித்து காலையில் ஓவியத்தை முடித்தான்.

முதல் ஓவியத்தின் அளவுக்கு இரண்டாவது ஓவியம் அவனுக்குத் திருப்தி தரவில்லை.

அன்று மாலை முடிவு தெரிந்தது. முதல் பரிசு மாறனுக்குத்தான் என்று அனைவரும் நினைத்துக் கொண்டிருக்கும் போது, நகுலுக் குப் பரிசு என அறிவித்தனர். நகுல் மாநிலப் போட்டிக்குத் தேர்வு செய்யப்பட்டான்.

அவனுடைய மன உறுதி அவனை முன்பை விடக் கடுமையாக உழைக்கச் செய்து பரிசு வாங்கிக் கொடுத்தது.

இதை உணர்த்தும் குறளைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்!

சிதைவிடத் ——— ——— ———
பட்டுப்பா ——— களிறு.

— தம்பிப்பயல்

ஆவின் பால் பண்ணைக்கு ஒரு விசிட்

நாம் தினந்தோறும் பயன்படுத்தும் மிக முக்கிய உணவுப் பொருள் பால். பால், தயிர், மோர், வெண்ணெய், நெய், பாலாடைக் கட்டி, யோகர்ட் எனப் பாலை பல விதங்களில் பயன் படுத்துகிறோம். இத்தகைய பாலை எப்படி சேகரித்து, பதப்படுத்தி, பாக்கெட்டுகளில் போட்டு நம்மிடம் கொண்டு வந்து சேர்க்கிறார்கள் என்ற கேள்வி விக்னேஷுக்கும், பவித்ராவுக்கும் எழுந்தது. உடனே ஆவின் பால் பண்ணைக்குத் தொடர்பு கொண்டோம். பால் பண்ணையை விசிட் செய்ய அனுமதி கிடைத்தது.

சோளிங்கநல்லூர் பால் பண்ணையை அடைந்ததும் துணை மேலாளர் ரவீந்திர நாத்தும், சுந்தர கிருஷ்ணனும் அன்புடன் வரவேற்று ஆவின் ஐஸ்கிரீம் வழங்கினார்கள்.



• பாக்டீரியா சோதனை...

"பால் உங்களுக்கு எங்கிருந்து கிடைக்குது அங்கிள்?"_ பவித்ரா.

"கூட்டுறவுத் துறை மூலம் கிராமங்களில் இருந்து மாவட்டத்துக்குப் பால் கொண்டு



அதைச் சுவைத்துக் கொண்டிருக்கும் போதே "பாலில் என்னென்ன இருக்கு?" என்றார் ரவீந்திரநாத்.

"தண்ணீரும், புரோட்டீனும்" என்று சொல்லி இருவரும் சபாஷ் வாங்கினர்.

"பாலில் 87% தண்ணீரும் 13% கொழுப்பு மற்றும் புரோட்டீன்கள் உள்ளன. பாலில் இருந்து எதையும் எடுக்கவும் கூடாது. எதையும் சேர்க்கவும் கூடாது. இப்படி இருந்தால்தான் அது உண்மையான பால்" என்றார்.

வரப்படுகிறது. அங்கு தர நிர்ணய சோதனை செய்த பின் அங்கிருந்து பால் லாரிகளில் பால் எடுத்து வரப்படுகிறது. பால் லாரிகளை ஒரு பெரிய தெர்மோ ஃப்ளாஸ்க் என்று சொல்லலாம்."

"இங்கு கொண்டு வந்ததும் உடனே பாக்கெட்டில் அடைத்து அனுப்பி விடுவீர்களா?" என்றான் விக்னேஷ்.

"இங்கே கொண்டு வந்ததும் ஏகப்பட்ட வேலைகள் இருக்கு. லாரியில் வந்த பாலில் பாக்டீரியா கிருமிகள் இருக்கும். அதைச் சுத்தப்படுத்தி பதப்படுத்துவதற்குத்தான் இந்த ஃபாக்டரி இருபத்தி நான்கு மணி நேரமும்

செயல்படுது" என்றவர், ஃபாக்டரிக்குள் அழைத்துச் சென்றார்.

ஃபாக்டரியின் வாசலில் மிகப் பெரிய ஆறு டேங்குகள் நின்றன. இதில் ஒவ்வொன்றிலும் ஒரு லட்சம் லிட்டர் பால் நிரப்பலாம்.

"இந்த டேங்குகளை நாங்கள் சைலோன்னு (Silo) சொல்வோம்" என்றவர்



• பாஸ்ச்சரைசிங்...

அடுத்து தாநிர்ணய சோதனைச் சாலைக்கு அழைத்துச் சென்றார். வெளியூரிலிருந்து வரும் பாலை OT என்ற organoleptical சோதனைக்கு உட்படுத்து கிறார்கள். பாலின் வாசனை, கொதிக்க வைக்கும் போது உறைதல், அமிலச் சோதனை எல்லாம் செய்யப்பட்டு பாலின் தரம் சரி பார்க் கப்படுகிறது. அதன் பின் பால்மானி (lactometer)யிலும் பரிசோதிக்கப்படுகிறது. தரம் குறைந்தால் பாலைத் திருப்பி அனுப்பி விடுவோம்."

"இது தவிர மில்க்கோ ஸ்கேன் என்ற சின்னஞ்சிறு கருவியிலும் பால் பரிசோதனை செய்யப்படுகிறது. இந்தக் கருவி பாலில் உள்ள

• கண்ட்ரோல் ரூம்...



கொழுப்பு, புரதம் மற்றும் லேக்டோஸின் அளவை துல்லியமாகக் கணக்கிட்டு பிரிண்ட் அவுட் தந்து விடுகிறது."

அதில் 3.6 மி.லி. பாலை எடுத்து 14 விநாடிகளில் சோதனை செய்து காட்டினார்கள். மில்க்கோ ஸ்கேனின் விலை 24 லட்சம் ரூபாய் என்றதும் இருவருக்கும் மயக்கமே வந்து விட்டது!

அடுத்தது பாலை பாஸ்ச்சரைசிங் செய்யும் பகுதிக்கு அழைத்துச் சென்றனர்.

"78°C வெப்பநிலையில் 15 விநாடி நேரம் பால் சூடாக்கப்படுகிறது. இதற்காகப் பால் செல்லும் பகுதியைச் சுற்றி




• ட்ரே சுத்தம் செய்யப்படுகிறது

ஒரு நீராவி பிளேட் பொருத்தப்பட்டிருக்கிறது. அந்த நீராவியின் வெப்பத்தால் பாலின் வெப்பநிலை அதிகரிக்கிறது. அப்போது பாக்டீரியா கிருமிகள் அழிந்து போகின்றன" என்றவுடன், "அங்கிள் இந்த முறையைக் கண்டுபிடித்தவர் லூயி பாஸ்ச்சர் தானே" என்றாள் பவித்ரா.

"ஆமாம்" என்றவர் இன்னொரு இயந்திரத் தைக் காட்டினார். "சூடான பால் இந்த பிளேட்டின் மூலம் 4°Cவெப்ப நிலைக்குக் குளிர்விக்கப்படுகிறது."

அதற்கு அடுத்தது பால் ஹோமொஜி னைஸிங் ஆகும் இடம். "எந்தப் பிசிறும் இல்லாமல் பாலை ஒரே சீரான பொருளாக மாற்றுவதைத் தான் ஹோமொஜினைஸிங்ன்னு சொல்றோம்" என்றவர் அடுத்து பேக்கிங் செக்ஷனுக்கு அழைத்துச் சென்றார்.

அங்கே ஆறு மெஷின்களில் பால் பாக்கெட்



• சைலோக்கள்...



• மில்க்கோ ஸ்கேன்

உறைகள் மாட்டப்பட்டிருந்தன. செட் செய்த அளவுகளுக்கு ஏற்ப பால் பாக்கெட்டுகளில் விழுந்து, ஒட்டப்படுகிறது. பால் பாக்கெட்டுகள் சரிபார்க்கப்பட்டு 5°C வெப்ப நிலை உள்ள குளிர் அறையில் வைக்கப்படுகின்றன. கொண்டு வரப்படும் பால் 24 மணி நேரத்துக்குள் பால் வண்டிகள் மூலம் பொது மக்களைச் சென்று அடைகிறது.

திடீரென்று விக்னேஷ்க்கு ஒரு சந்தேகம். "அங்கிள், இங்கே இவ்வளவு வேலைகள் நடக்குதே, பேக்கிங் செக்ஷன் தவிர மற்ற இடங்களில் ஆட்களைக் காணோமே" என்றான்.

"இவ்வளவு பெரிய ஃபாக்டரியில் மொத்தம் 150 ஆட்கள் தான் வேலை செய்கிறோம். இது முழுக்க முழுக்க கம்ப்யூட்டரால் இயக்கப்படுகிறது. தென்கிழக்கு ஆசியாவில் கணினி முறையில் இயங்கும் முதல் பால் பண்ணை இதுதான்" என்றவர் இறுதியாக கண்ட்ரோல் ரூமுக்கு அழைத்துச் சென்றார்.

அங்கு ஒட்டு மொத்த பால் பண்ணையின் செயல்பாட்டை ஒருவர் கண்ட்ரோல் செய்து கொண்டிருந்தார். இந்த புரோகிராமிங் லாஜிக் கண்ட்ரோலர் மூலமாக பால் வருவது, பிராசஸ் செய்வது, சுத்தம் செய்வது என அனைத்தையும் கண்காணிக்கலாம். எங்கு தவறு நடந்தாலும் திரையில் அலாரம் அடிக்கும்.

ஃபாக்டரியிலிருந்து வெளியே வந்ததும் ஆவின் குல்ஃபி வழங்கப்பட்டது. பவித்ராவும் விக்னேஷும் ஆர்வத்துடன் சுவைத்தனர்.

"சென்னையில் இந்த ஒரு பண்ணை மட்டும்தானா?"– பவித்ரா.

"சென்னையில் மொத்தம் மூன்று பண்ணைகள் இருக்கு. மாதவரம், அம்பத்தூர், சோளிங்கநல்லூர். இந்தப் பண்ணை 1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 25 கோடி ரூபாய் செலவில், 35 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இது தேசிய பால்வள வாரியத்தின் மூலம் இயங்குகிறது" என்றார் ரவீந்திரநாத்.

ஆவின் பால் மொத்தம் 19 வகையான சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. ISO - 9000 சான்றிதழைப் பெற்ற ஒரே பால் நிறுவனம் இந்தியாவில் ஆவின் மட்டுமே.

நிலைப்படுத்திய பால், சமன்படுத்திய பால், நிறை கொழுப்பு பால், டீ மேட் என ஆவின் பல வகை பால்களை வழங்குகிறது.

பாலில் இருந்து வெண்ணெய், நெய், பாலாடைக் கட்டி, மோர், பால் பவுடர், யோகர்ட், நறுமணமூட்டப்பட்ட இனிப்பு பால், பால்கோவா, ஐஸ்கிரீம் போன்றவற்றையும் ஆவின் நிறுவனம் தயாரிக்கிறது.

கொழுப்பு குறைக்கப்பட்ட பாலிலும் கால்சியம் மற்றும் ஊட்டச் சத்துகள் குறையாது.

போலி பால் பாக்கெட் வருவதைத் தடுக்க பால் கவரை இரண்டாகக் கிழித்துப் போடுமாறு கூறுகின்றனர்.

தினமும் இரண்டு கப் பால் அருந்தினால் எலும்பு உறுதியாகும். வைட்டமின் டி இருப்பதால் உடலுக்கும் நல்லது.

ஆர்வமாக ஆவின் நிறுவனத்தைப் பார்வையிட விரும்பும் பொது மக்களுக்கு ஆவின் அனுமதித்து, விளக்குகிறது. பார்வையாளர்கள் அன்புடன் நட்ட மரங்கள், செடிகள் பச்சைப் பசேலென காட்சி தருகின்றன.


அனைவருக்கும் நன்றி கூறிவிட்டு விக்னேஷும் பவித்ராவும் கிளம்பினர். ஆவினைப் பற்றி பேசிக் கொண்டே வீடு வந்து சேர்ந்தனர்.

அட்டையில் : விக்னேஷ், பவித்ரா


அட்டை மற்றும் படங்கள் : ஸ்ரீஹரி

எமனைச் சந்தித்த வீராச்சாமி!

கதை:
சு. சௌம்யாயனி,
புனித அலாய்சியஸ் மேல்நிலைப் பள்ளி,
தூத்துக்குடி.
படம்: பிள்ளை






தாய் மண்ணே
வணக்கம்!
1930 -உப்பு சத்தியாக்கிரகம்

என்.மாதவன்



அனுபவ அரைக்காசும் அரைகுறைப் பாயசமும்!

"ராஜாதிராஜ ராஜகுல மார்த்தாண்ட ராஜாவுக்கு வணக்கம், வணக்கம், வணக்கம்" என்றபடி நுழைந்தான் சேவகன்.

"என்ன?" என்றவாறு மன்னர் பார்க்க, "மகாராஜா தங்களைக் காண அடுத்த நாட்டுப் புலவர் 'அரைக்காசு அருணாசலம்' வந்துள் ளார்."

"என்ன, 'அரைக்காசுப் புலவரா!' சீப்பாக இருக்கிறதே. பத்துப் பதினைந்து பாடல்கள் பாடச் சொல்லலாமா? வரச் சொல்" என்று சொல்லிவிட்டு "சரி, என்ன விஷயம் கேட்டியா?" என்றார் மெல்லிய குரலில்.

"வேறு என்ன, அவர்கள் நாட்டில் ஒரே பஞ்சமாம். அதனால் தங்களைப் பாடி, பரிசு பெறவே வந்துள்ளார்" என்று சொல்லிவிட்டுப் பறந்தான் சேவகன்.

அரைக்காசார் உரத்த குரலில் பாடியவாறே வந்தார்.

"பாலோடு நூலும்
நூலோடு நூடுல்ஸும் பெருகும்
மன்னவா வாழி வாழி, தென்னவா வாழி வாழி" என்றார்.

"போதும் உமது தேசத்தின் பஞ்சப்பாட்டு, உங்கள் நாட்டில் பஞ்சமென்பதால், எங்கள் நாட்டிற்குத் துரத்தி விட்டாரா தங்கள் மன்னர்" என்று கூறிவிட்டு,

"சரி, என்னைப் புகழ்ந்து செந்தமிழில் பாடல்கள் இயற்றி வந் துள்ளீரா?" என்றார் மன்னர்.

"பாடலில்லாமல் பாணன் அருணாசலன் வருவானா கேளும்... கேளும்" என்று கூறிவிட்டுப் பாடத் துவங்கினார்:

"இல்லை இல்லை எதுவுமில்லை
உந்தன் நாட்டிற்கெல்லையே
இல்லை இல்லை எதுவுமில்லை

பஞ்சம் பசியுமில்லையே''

பாடலைக் கேட்டதும் மன்னர் பரவசப்பட்டார். ''யாரங்கே? பொற்கிழியைக் கொண்டு வா'' என்றார்.

இதற்குள் அவையின் 'பாயசப் புலவர் பார்த்த சாரதி' ஏதோ காதைக் கடித்தார். உடனே ''யாரது அங்கே? இந்த 'அரைக்காசு அருணாசலப் புலவனைப் பிடித்து சிறையில் அடையுங்கள்'' என்றார் மன்னர்.

''மன்னா, நான் என்ன தவறாகப் பாடி விட்டேன்? என்னை எதற்காகச் சிறையில் அடைக்கச் சொல்கிறீர்?'' பதறினார்.

''வத்தலும் தொத்தலுமாயிருந்து கொண்டு எனது நாட்டையா கிண்டலடித்துப் பாடுகிறாய்? உனது பாட்டின் உட்பொருள் எனக்கு விளங்காதா என்ன? எனது அவைப்புலவர் கூறிவிட்டார். மறுவிசாரணை வரை இவரைச் சிறையில் அடையுங்கள்.''



அரைக்காசு அருணாசலப் புலவர் பரிதாபமாகச் சிறையில் வாடிக் கொண்டிருந்தார். 'எனது நாட்டிலேயே கேழ்வரகு அடையும் சேணித் தண்ணீருமாவது கிடைத்தது. என்னைக் கொண்டு வந்து சிறையில் அடைத்து விட்டார்களே!' என்று மனம் வருந்தினார்.

இதனிடையே அரசவைக் கவிஞர் பண்டித சிகாமணி 'பாயசப் புலவர்' வந்தார். அவரைப் பார்த்ததும் அரைக்காசாரின் முகம் ஆயிரம் வாட்ஸ் பல்பாய் மலர்ந்தது.

''இதுதான் தமிழ்ப்பற்று. தமிழைச் சிறையிலடைத்தால் தமிழ்ப் புலவர் கூட்டம் வாளாயிருப்பார்களா என்ன? வாழ்க பாயசப்புலவர், வளர்க பாயசப் புலவர்'' என்று உணர்ச்சி வசப்பட்டார் அரைக்காசார்.

இதனைக் கேட்ட பாயசப் புலவர். ''கம்முனு கிட.. குரல் குடுத்து மாட்ட வைச்சுடாதே'. ஏற்கெனவே 'ஆறடி' கீறேன். இதுக்கு மேல எதுக்கு வளர்றது?'' என்று திருவாய் மலர்ந்தார்.

''என்ன கம்முனு கிடவா! என்ன உங்கள் பேச்சில் சென்னை வாடை அடிக்கிறதே?''


''நாங்கள்லாம் எவ்வளவு பெரிய ஆளுங்களா கீறோம். நீ பாட்டுக்கு வந்து ஏதேதோ பாட்டுப் பாடறே. என்ன தெகிரியம்பா உனக்கு? எங்களையே காலி பண்ணிடுவே போல இருக்குதே'' பொறாமையில் பொரிந்து தள்ளினார் பாயசப் புலவர்.

''எனக்கு ஒண்ணும் அப்படியெல்லாம் ஆசை கெடையாது. பரிசும் வேணாம் பாராட்டும் வேணாம். என்னை ஜெயில்லேயிருந்து கழட்டி உட்ருப்பா. மன்னிக்கணும். என்னை விடுவிச்சுடுப்பா. நாட்டுப் பக்கமா ஒடிறேன்'' கெஞ்சினார் அரைக்காசார்.

''சரி, உன்னைப் பார்த்தால் விவரமானவனா கீற. அடுத்த வாரம் ராஜாவுக்கு 'அறுபது வயசு' ஆவப் போவுது. அதுக்கு அழகா ஒரு பாட்டு எழுதிக் கொடு. நீ எழுதினதா சொன்னால் கொன்னுப்புடுவேன். எப்படியாவது ராஜாகிட்ட சொல்லி விட்டுடச் சொல்றேன்'' பாயசப்புலவர் பேரம் பேசினார்.

''சரி, எழுதிக் கொடுக்கிறேன். ஒன்று கேட்டால் கோபித்துக் கொள்ள

• நமது நாக்கில் 3000 சுவை நரம்புகள் உள்ளன.



மாட்டீரே? அது என்ன உமது பெயர் 'பாயசப் புலவர்' என்று வைத்துள்ளார்கள். விருப்பமிருந்தால் விளக்குங்கள். கோபம் வேண்டாம்'' வழிந்தார் 'அரைக்காசார்'.

''அது ஒண்ணுமில்ல, என் பேரு 'பார்த்தசாரதி புலவன்' தான். நான் பாட்டுப் பாடும் போது எப்பனாச்சிம் தண்ணீ (உமிழ் நீர்) வடியும். அதைப் பார்த்துட்டு உன்னை மாதிரி பக்கத்து நாட்டு ஜால்ராப் புலவன் ஒருத்தன் அதைப் பாயசமா பாவிச்சு 'பாயசப் புலவர்'னு பேரு வைச்சுட்டான். அம்புட்டுத் தான், வேற ஒண்ணுமில்ல'' சொல்லிவிட்டுப் பறந்தார் பாயசப்புலவர்.

என்ன பாட்டு எழுதுவது என்று தயங்கிக் கொண்டிருந்தவருக்குத் தடாலென ஒரு யோசனை தோன்றியது.

வெற்றிகரமாக ஆறு நாட்கள் ஓடின. அரைக்காசார் சிறையிலேயே ஈயையும், கொசுவையும் புகழ்ந்து பாடிக் கொண்டிருந்தார். திட்டமிட்டபடியே ராஜாவின் அறுபதாம் ஆண்டு விழா தொடங்கியது. முதற்கட்டமாகப் பண்டித மாமணி பாயசப் புலவர் பாடலைப் பாடுமாறு பணிக்கப்பட்டார்.

உடனே, ஏதோ நினைவிலிருந்தவர் சுதாரித்துக் கொண்டு, கக்கத்தில் வைத்திருந்த கவிதையை எடுத்து உதவியாளர் ஒருவரைப் பாடச் சொன்னார்.

அவனும் 'அரைக்காசுப் புலவன்' எழுதிய பாடலைப் பாடினான்:

''ராஜா ராஜா நீ ராஜாயில்லை

மந்திரி மந்திரி நீ மந்திரியில்லை
ராணி ராணி நீ ராணியில்லை
கவிதை எழுதும் நானும் கவிஞனுமில்லை.''

''பாயசப் புலவா என்ன இது? நீ என்னை வெறுபேற்றுகிறாய்'' டென்ஷனானார் மகாராஜா.

''மன்னிக்கணும் மகாராஜா! தோ இந்த ஜெயில்லகீறானே அவன்தான் எழுதித் தந்தான். அவனை இட்டாரச் சொல்லுங்கோ. அவனுக்குதான் வெவரம் தெரியும்.'' சரணடைந்தார் பாயசப் புலவர்.

சகல மரியாதையுடன் 'அரைக்காசார்' வரவழைக்கப்பட்டார். ''மன்னா, இது போன்ற விவகாரமான பாடலை எழுதியதற்காக மன்னிக்க வேண்டுகிறேன். இந்தப் பாடலின் பொருளைக் கூறும் முன்னால் எனது முந்தைய பாடலின் பொருளைக் கூற விரும்புகிறேன்.''

டென்ஷனாயிருந்த மன்னர் ''கூறும், கூறும், விரைவாய்க் கூறும்'' என்றார்.

''மன்னா, தங்கள் நாட்டிற் கெல்லையில்லை என்ற பொருளிலும், பசியும் பஞ்சமுமில்லையே என்ற பொருளிலும் இந்தப் பாடலை எழுதினேன்.''

''சரி, அது நடந்து முடிந்த கதை. இப்போது நீ எழுதி அனுப்பிய பாடலுக்குப் பொருளைக் கூறு'' என்றார்.

''ராஜா, நீர் மகாராஜா எனவும்
ராணி மகாராணி எனவும்
மந்திரி, மதியூக மந்திரி எனவும்
கவிஞன் நான் புலவன் என்ற பொருளிலுமே எழுதினேன்.''

ராஜாவின் முகம் பிரகாசமடைந்தது. அரைக்காசாரை அரசவைப் புலவராக நியமித்தார்.

பாயசப்புலவர் பார்த்தசாரதி மெல்ல ஜகாவாங்கி ''பண்டித சிகாமணி அரைக்காசார், வாழ்க வாழ்க! திறமையைக் காணும் மன்னர் வாழ்க, வாழ்க'' எனக் கூவிக் கொண்டு ஜால்ரா கோஷ்டியில் சங்கமித்தார்.

மனிதன் தன் மனசாட்சிக்குப் பயப்படுகிறானோ இல்லையோ



மற்றவற்றிற்குப் பயப்படும் சுபாவமுள்ளவன். எதன் மீதாவது மனிதனுக்கு ஏற்படும் பயத்தை ஃபோபியா (phobia) என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். இந்த ஃபோபியாவை நம்மிடம் இருந்து போக வைக்கப் பல வழிமுறைகள் உள்ளன. அவற்றை Cognitive behaviour therapy என்று அழைக்கிறார்கள். யோகப் பயிற்சி, தியானம் போன்றவை இவற்றுள் அடக்கம். கீழே குறிப்பிட்டுள்ள பெயர்கள் நமக்கு ஏற்படும் பயத்திற்கு உரிமையானவை. நீங்களும் இதைப் படித்துவிட்டு இத்தனை ஃபோபியாக்கள் உள்ளனவா என்று பயந்து விடாதீர்கள்!

உயரம் குறித்த பயம் – அக்ரோஃபோபியா (acrophobia), ஹிப்சோஃபோபியா (hypsophobia), க்ரிம்னோஃபோபியா (cremnophobia).



குதிரைகள் மீதான பயம் – ஹிப்போஃபோபியா (hippophobia).

நோய்கள் குறித்த பயம் – நோசோஃபோபியா (nosophobia)
பேதோஃபோபியா (pathophobia)



ஆ... பயம்!

– சு. ஸ்டாலின் சீனிவாசன்,
பதினோராம் வகுப்பு,
சி.எம். மேல் நிலைப் பள்ளி,
கீழரெங்கநாதபுரம்,
தூத்துக்குடி



பூச்சிகள் – என்டோமோ ஃபோபியா (entomophobia).

மின்னல் – ஆஸ்ட்ரோஃபோபியா (astraphobia) கிரௌநோஃபோபியா (keraunophobia)

எலிகள் – முசோஃபோபியா (Musophobia)

பெயர் / குறிப்பிட்ட வார்த்தை – ஒநோமேட்டோ ஃபோபியா (onomatophobia)

இரவு மீதான பயம் – நிக்டோஃபோபியா (nyctophobia)

ஒலி மற்றும் அதிக சத்தம் – ஃபோனோஃபோபியா (phonophobia)

வயோதிக பயம் – ஜிராஸ்கோஃபோபியா (gerascophobia)

ரயில் – சிடரோ டோரமோ ஃபோபியா (siderodomophobia)

பிரயாணம்– ஹோடோ ஃபோபியா (hodophobia).

வலி – அல்கோஃபோபியா (algophobia) ஒடிநோஃபோபியா (odynophobia)

கடல் – தலாஸ்கோஃபோபியா (thalascophobia)

சுறா மீன் – கலியோஃபோபியா (galeophobia)

உறக்கம் – ஹிப்நோஃபோபியா (hypnophobia)

பாம்பு – ஒஃபிடியோஃபோபியா (ophidiophobia)

பேச்சு, மேடைப் பேச்சு – லாலோஃபோபியா (lalophobia), க்ளோஸோஃபோபியா (glossophobia)

வேகம் – டாகோஃபோபியா (tacophobia)

இடி – கிரௌனோஃபோபியா, (keraunphobia), ப்ரோன்டோ ஃபோபியா (brontophobia),

ஏன் தண்டிக்க வேண்டும்?

கேரோ என்பவர் ஆங்கிலேயர் ஆட்சியில் போலீஸ் கமிஷனராக இருந்தவர். நேருவிற்கு மூன்று ஆண்டுகள் கடுங்காவல் ஜெயில் தண்டனை விதித்து அலாகாபாத் சிறையில் அடைக்கக் காரணமானவர்.

சுதந்திரம் பெற்று நேரு பிரதமராகப் பதவியேற்றதும், தனது ஆட்சிக் காலத்தில் மந்திரி சபையின் காரியதரிசியாக அவரை வைத்துக் கொண்டார் நேரு.

அதுபற்றி மற்றவர்கள் திகைப்புடன் கேட்டபோது, நேரு சொன்ன பதில் :

"கேரோ தன்னுடைய கடமையைத் தானே செய்தார்? இப்போது நான் சொல்கிறபடியும் அவர் நடக்கவில்லையா? அரசாங்கம் சொல்வதுபோல் அவர் செய்தார். அதற்காக நான் ஏன் அவரைத் தண்டிக்க வேண்டும்?" என்றார்.

பழையக் குடையுடன்...

மார்க் ட்வைன் ஒரு சமயம் லண்டனுக்குப் போயிருந்தார். அவரது வருகையைப் பற்றி லண்டன் பத்திரிகைகள் மிகப் பெரிய செய்தியாகப் போட்டிருந்தன.

அந்தச் செய்திக்குப் பக்கத்திலேயே லண்டனில் நடந்த ஒரு பெரிய கொள்ளைச் செய்தியையும் பிரசுரித்து, அவருடைய வருகைக்கும், லண்டனில் நடந்த கொள்ளைக்கும் சம்பந்தம் உள்ளது போல் குறும்புத்தனம் செய்திருந்தது ஒரு பத்திரிகை.


இச்செய்தியைக் கண்டு மார்க் ட்வைன் மனதிற்குள் சிரித்துக் கொண்டார்.

அன்று மாலை பத்திரிகையாளர்கள் சிலர் அவரைப் பேட்டி காண்பதற்கு வந்திருந்தனர்.

பேட்டி அளிக்க பத்திரிகையாளர்கள் மத்தியில் அமர்ந்த மார்க் ட்வைன் ஒரு பழைய கிழிந்த குடையை வைத்திருந்தார்.

ஒரு நிருபர், "என்ன? இவ்வளவு வசதியுள்ள தாங்கள் ஒரு பழைய கிழிந்த குடையை வைத்திருக்கிறீர்கள்?" என்றார்.

மார்க் ட்வைன், "என்ன செய்வது? நான் லண்டனுக்கல்லவா வந்திருக்கிறேன். இங்கே நல்ல பொருட்களையெல்லாம் வெளியில் கொண்டு வர முடியுமா?" என்றார்.


• மார்க் ட்வைன்

லண்டனைத் திருடர்கள் நிறைந்த ஊர் என்பது போன்ற உட்பொருளுடன் கூறியதைக் கேட்ட பத்திரிகை நிருபர்கள் அனைவரும் சிரித்தனர்.

- எஸ். சௌம்யாயனி,
பத்தாம் வகுப்பு, புனித அலாய்சியஸ்
ம.மே.நி.பள்ளி, தூத்துக்குடி

எளிமையானவர்

மொரார்ஜி தேசாய் ஆர்ப்பாட்டம் இல்லாதவர். ஆரவாரத்தை விரும்பாதவர். வீண் செலவுகளைத் தவிர்த்துச் சிக்கனமாக இருக்கக் கூடியவர்.


பாரதப் பிரதமர் பதவி வகித்தபோது அவர் தனக்கென்று ஒரு வேலையாள் வைத்துக் கொள்ளவில்லை. கடிதங்களுக்கு அவரே கைப்பட பதில் எழுதினார். அதுவும் சாதாரண அஞ்சல் அட்டையில்.

அட்டையின் முன் பக்கம் அவரது முகவரி அச்சிடப்பட்டிருக்கும். அந்த முகவரியில் கூட வெறும் 'மொரார்ஜி தேசாய்' என்று தான் இருக்கும். பதவியில் இருந்தபோது 'பிரதமர்' என்றோ, பதவியில் இல்லாதபோது 'முன்னாள் இந்தியப் பிரதமர்' என்றோ இருக்காது.

- ஆர்.ஆர்.பூபதி,
திண்டுக்கல்

விதி தெரியாதா?

மாவீரன் அலெக்சாண்டர்


• பெர்னாட் ஷா

உருளைக் கிழங்கை யார் சாப்பிடுவார்கள்?

சிறுவனாக இருந்த போது அரிஸ்டாட்டிலிடம் குருகுல வாசம் செய்து தத்துவம் படித்து வந்தார். குருகுலவாச விதிப்படி அரிஸ்டாட்டில் முன்னால் செல்ல, அலெக்சாண்டர் பின்னால் நடந்து வந்தார். குறுக்கே ஆறு வந்தது. 'செல்வதா, வேண்டாமா?' என்று சிந்தனை செய்து கொண்டிருந்தார் அரிஸ்டாட்டில்.

மாவீரன் அலெக்சாண்டரோ, விடு விடுவென முன்னால்சென்று ஆற்றில் இறங்கி, "குருவே நான் முன்னால் செல்கிறேன். என்னைப் பின் தொடர்ந்து வாருங்கள்" என நடக்க ஆரம்பித்தார். இருவரும் கரை சேர்ந்தனர்.

கோபமுற்ற அரிஸ்டாட்டில், "நீ மன்னன் மகன் என்ற மமதையைக் காட்டிவிட்டாயே. ஒரு குருவுக்குப் பின்னால்தான் ஒரு மாணாக்கன் செல்ல வேண்டும் என்ற விதி உனக்குத் தெரியாதா?" எனக் கேட்டார்.

அலெக்சாண்டர், "குருவே என்னை மன்னிக்கவும். ஆழம் தெரியாத இந்த ஆற்றில் நான் இறங்கி ஆற்றோடு போய்விட்டால், ஆயிரம் அலெக்சாண்டர்கள் உருவாகலாம். தாங்கள் ஆற்றோடு போய்விட்டால், ஒரு அரிஸ்டாட்டிலை உருவாக்க முடியாது" என்றார் பணிவுடன்.

- அ. கமர்தாஜ்,
மிட்டூர்

உருளைக் கிழங்கு...

உருளைக் கிழங்கு உலகிற்கு அறிமுகமான காலம். அதைச் சாப்பிடுவது என்பதைப் பெருமையாக நினைத்தனர்.

ஒருமுறை பெர்னாட் ஷாவின் நண்பர், அவரைக் காணச் சென்றார்.

பெர்னாட் ஷா அப்பொழுது ஒரு தட்டு நிறைய உருளைக் கிழங்கை அவித்து வைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

நண்பரைப் பார்த்து பெர்னாட் ஷா, "வாருங்கள்! உருளைக் கிழங்கு சாப்பிடுங்கள்" என்றார் பெருமையாக.


நண்பரோ அதை மறுத்து, "சேச்சே! இதைப் போய் யாராவது சாப்பிடுவார்களா? எனக்குப் பிடிக்காது. நான் இதைச் சாப்பிடறதே இல்லை!" என்றார்.

அப்போது பெர்னாட் ஷாவின் தட்டிலிருந்த ஒரு உருளைக் கிழங்கு தவறி தோட்டத்தில் போய்விழுந்தது.

தோட்டத்திலிருந்த கழுதை, அந்த உருளைக் கிழங்கை முகர்ந்து பார்த்து விட்டு, அதைச் சாப்பிடாமல் சென்றுவிட்டது.



• நேரு



• மொரார்ஜி தேசாய்

உடனே பெர்னாட் ஷாவின் நண்பர், "உருளைக் கிழங்கை கழுதை கூட சாப்பிடாது" என்றார்.

"ஆமாம்! ஆமாம்! கழுதைகள் எல்லாம் உருளைக் கிழங்கைச் சாப்பிடாது" என்றார் ஷா!

- வெ. இராதாகிருஷ்ணன்,
தஞ்சாவூர்


I. 1. பளபளவென்றிருக்கும் வைரம் அல்ல. வழவழவென்றிருக்கும் பவளம் அல்ல. உன்னை உனக்கே காட்டும் மன சாட்சி அல்ல — அது என்ன?

2. வட்டமாய் தோசை சுட்டு, வெளிர் நீலப் பாயை வைத்து, அண்ணாந்து பார்த்தால் அட, எத்தனை அழகு! — அது என்ன?

3. கண்களைச் சிமிட்டிச் சிரித்திருப் பான், காரிருள் போக்க வந்திடுவான் — அவன் யார்?

— மு. அச்சுதன்,
வேலூர்

II. 1. பூட்டில்லா பெட்டிக்குள் போட்டி



சொல்லுங்கள் விடை என்ன?

ருக்கும் வைரக்கல். வைரக்கல் ஒளியாலே வையகமே தெரியும் — அது என்ன?

2. இதயம் போல் துடிப்பிருக்கும், இரவு பகல் விழித்திருக்கும் — அது என்ன?

3. அடிமேல் அடிபட்டும் அசராத சின்னப் பையன். குறி வைத்த இடம் பார்த்து தப்பாமல் சேருவான் — அவன் யார்?

— த. மணிக்கலா,
திருவாரூர்.

III. 1. காகம் அழைக்க வேகமாய் வருவான். கூகை அழைக்க கூண்டிற்குள் புகுவான் — அவன் யார்?

2. பார்த்தவன் எடுக்கவில்லை. பார்க்காதவன் எடுத்தான். எடுத்தவன் தின்னவில்லை. எடுக்காதவன் தின்றான் — அவை என்ன?

3. அந்த ஸ்டேஷன்களில் மட்டும் இரயில் நிற்காது — அது எந்த ஸ்டேஷன்?

— ச. சௌந்தர்ய பவதாரிணி,
எட்டாம் வகுப்பு, சத்திரம் பாரதி மகளிர் உ.நி. பள்ளி, கடையம்,
திருநெல்வேலி

IV. 1. மிகப்பெரிய தோட்டத்திலே சின்ன சின்ன வெள்ளிப் பூக்கள் — அது என்ன?

2. கடிக்கத் தெரியாதவனுக்குப் பற்கள் பல - அது என்ன?

3. வெள்ளிக் கிணத்துக்குள் தங்க முத்து - அது என்ன?

— சண்முகசித்ரா,
சேனைத் தலைவர் உ.நி. பள்ளி,
விக்கிரமசிங்கபுரம்

V. 1. ஆள் இல்லாத வீட்டில் அழகிய தோரணம் கட்டினான் — அது என்ன?

2. கூலி சேதாரம் இல்லாத நகை — அது என்ன நகை?

3. தீயினால் அழியாதவன். சிறிது தள்ளினால் உடைந்து போவான் — அது என்ன?

4. உயிர் இல்லாதவன், சில நேரம் கடிப்பான் — அவன் யார்?

— எஸ். ஜெயந்தி,
சேனைத் தலைவர் உ.நி.பள்ளி,
விக்கிரமசிங்கபுரம்

விடைகள்:

I. 1. கண்ணாடி, 2. நிலா, 3. குழல் விளக்கு.
II. 1. கண், 2.கடிகாரம், 3.கடிதம்.
III. 1.கதிரவன், 2.கண், கை, வாய். 3.போலீஸ் ஸ்டேஷன்.
IV. 1.நட்சத்திரம், 2.சீப்பு, 3.முட்டை.
V. 1.சிலந்தி, 2.புன்னகை, 3.மண்பானை, 4. செருப்பு.


திருவண்ணாமலை
ஸ்பெஷல்


திருவண்ணாமலை ஸ்பெஷல்

பெயர்க் காரணம்

திருவண்ணாமலையின் மற்றொரு பெயர் அருணா சலம் ஆகும். இங்கு குடி கொண்டிருக்கும் இறைவன் பெயரும் அதுவே.

அருணாசலம் = அருணா + அசலம்.

அருணா - சிவப்பு, அசலம் - அசைக்க முடியாத மலை. அதாவது அசைக்க முடியாத சிவப்பு மலை என்று பொருள். பல தத்துவ ஞானி கள் வேறு பல விளக்கங் களும் தருகின்றனர். அதா வது;



அருணாசலம் = அருணா + ஆசலம்.

அருணா - சக்தி, ஆசலம் - சிவன், அதாவது சிவனும் சக்தியும் சேர்ந்து இருக்கின்ற மலை என்று பொருள்.

மற்ற கோவில்களில் இல்லாத சிறப்பு:

மற்ற கோவில்களில் இறைவனின் சிலையை பிரதிஷ்டை செய்ய அஷ்டபந்தனம் என்ற ஒரு பொருளை உபயோகிப் பார்கள். ஆனால் இந்தச் சிவாலயத்தில் சுவர்ணபந்தனம், அதாவது தங்கத்தை உபயோகித்துள்ளனர்.

திருவண்ணாமலையில் உள்ள திரு அண்ணா 'மலை'யின் உயரம் 2669 அடி அதாவது 800 மீட்டர் ஆகும். இந்த மலையின் சுற்றளவு 8½ மைல் அதாவது 14 கி.மீ. ஆகும். இந்த மலை பல்வேறு யுகங்களில் பல்வேறு விதமான மலையாகத் திகழ்ந்தது.

கிரதயுகம்	-	அக்னி மலை
திரேதா யுகம்	-	சுவர்ண மலை
துவாபரயுகம்	-	தாம்பிர மலை
கலி யுகம்	-	கல் மலை

ஆறுகள்:

செய்யாறு, தென்பெண்ணை, கமண்டல நாக நதி ஆகியவை திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஆறுகள். செங்கம் தாலுக்காவில் உள்ள சென்னகேசவ மலைப் பகுதியில் தென்பெண்ணை ஆற்றின் நடுவே சாத்தனூர் அணை கட்டப்பட்டுள்ளது.


பார்க்க வேண்டிய இடங்கள்:

சாத்தனூர் அணை, திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோவில், பூத நாராயணன் கோவில், படவேடு ரேணுகாம்பாள் கோவில், தென்னாங்கூர் பெருமாள் கோவில் மற்றும் பல கோவில்கள்.

மாவட்டத்தின் பிறப்பு:

1989ஆம் ஆண்டிற்கு முன் வரை திருவண்ணாமலை மாவட்டமும், வேலூர் மாவட் டமும் ஒன்றாக வட ஆர்க் காடு மாவட்டமாகச் செயல் புரிந்தது. 1989ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30ஆம் தேதி முதல் திருவண்ணாமலை மாவட் டம் தனியாகப் பிரிந்து திருவண் ணா மலை சம்புவராயர் மாவட் டமாக மாறியது. பின்னர் அது திருவண்ணாமலை மாவட்டம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட் டது.

– பி. அருணாசலம்,
பன்னிரண்டாம் வகுப்பு,
மவுண்ட் செயின்ட்
ஜோசப் மேல்நிலைப் பள்ளி,
திருவண்ணாமலை



ஆரணிக் கோட்டை

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில் கோட்டையும் பெரிய அகழியும் உண்டு. விஜய நகர அரசர்களால் கட்டப்பட்ட இக்கோட்டை 800 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.

நர்த்தன பிள்ளையார்

திருவண்ணாமலை மாவட்டம் திருவோத்தூரில் ஏழு கரங்களுடன் நர்த்தன பிள்ளையார் காட்சி தருகிறார். திருவண்ணாமலை மலைவலப் பாதையில் பிள்ளையார் உள்ளார். அந்தப் பிள்ளையாரின் அருகே இருந்து மலை உச்சியைப் பார்த்தால் ஐந்து முகடுகள் காட்சி தரும். அதற்குப் பஞ்சமுக தரிசனம் என்று பெயர்.


காமக்கூர்

திருவண்ணாமலை மாவட்டத்தில் மிகவும் புராதனமானது, காமக்கூர் சந்திரசேகரர் கோவில். இது, திருவண்ணாமலை கோவிலுக்கு நிகராகப் போற்றப் படுகிறது.



செய்யாறு

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ளது. இதன் புராணப் பெயர் திருவோத்தூர். இங்கு ஈசன் வேதங்களை ஓதியதால் அவ்வாறு அழைக்கப்பட்டது. இங்கு ஓடும் சேய் ஆறு முருகனால் உண்டானது. இங்குள்ள வேதபுரீஸ்வரர் கோவில் பிரசித்தி பெற்றது. திருஞானசம்பந்தர் இத்தல ஈசன் மீது 11 பாடல்கள் இயற்றி மனமுருகிப் பாடினார். உடனே அங்கிருந்த ஆண் பனை, பெண் பனையாக மாறி, குலை தள்ளியது.



விருது வழங்கிய ஆலயம்

திருவண்ணாமலையிலிருந்து திருக்கோவிலூர் செல்லும் பாதையில் காட்டுக் கோவில் எனப்படும் புனித அந்தோணியர் ஆலயம் உள்ளது. இதை விருது வழங்கினான் ஆலயம் என்கிறார்கள்.

விஜயநகர அரண்மனை

ஆரணியை அடுத்த சத்திய விஜயநகரம் கிராமத்தில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட அரண்மனை உள்ளது.

மேல்மலையனூர்

திருவண்ணாமலையிலிருந்து கிழக்கே 35 கி.மீ. தூரத்தில், சுற்றிலும் மலைகள் சூழ உள்ளது, மேல்மலையனூர். இங்கு அங்காள பரமேஸ்வரி கோவில் இருக்கிறது. அமாவாசை தோறும் பக்தர்கள் கூட்டம் அலை மோதும்.

வேட்ட வலம் சுயம்பு லிங்கம்

திருவண்ணாமலை திருத்தலத்திலிருந்து விழுப்புரம் சாலையில் 24 கி.மீ. தூரத்தில் உள்ளது வேட்டவலம். இவ்வூரின் வடக்கு எல்லையில் அகத்திய மாமுனிவர் வழிபட்ட அகத்தீஸ்வரர் ஆலயம் இருக்கிறது.

இக்கோவிலில் சுயம்புலிங்க வடிவான சிவபெருமான் மேற்கு நோக்கியுள்ளார். இக்கோவில் திருவண்ணாமலை

கோவில் கட்டுவதற்கு முன்பே கட்டப்பட்டது எனக் கல்வெட்டு கூறுகிறது.

தமிழ்நாட்டில் எந்த மலைக்கும் இல்லாத பெருமை திருவண்ணாமலைக்கு உண்டு. இங்கு இறைவன் தீப ஒளியாகக் காட்சி தருகிறார்.

திருவண்ணாமலையில் சிவபெருமான் அண்ணாமலையாராக உண்ணாமலை அம்மனுடன் கோவில் கொண்டு அருள்பாலிக்கிறார்.

திருத்தல வரலாறு

படைத்தல் கடவுளாகிய பிரம்மாவுக்கும் காத்தல் கடவுளாகிய திருமாலுக்கும் இடையே யார் பெரியவர்? என்ற போட்டி ஏற்பட்டது.

அவர்கள் முன் தோன்றினார் சிவபெருமான். 'உங்களில் யார் என் அடியையும் (பாதம்) முடியையும் காண்கிறீர்களோ, அவரே பெரியவர்' என்றார்.

திருவடியையும் மணி முடியையும் காண திருமால் வராக (பன்றி) அவதாரமும் பிரம்மா அன்னப் பறவையாகவும் உருமாறினர். ஆனால் இருவரும் தோல்வியைத் தழுவினார்கள்.

கடைசியில் திருமாலும் பிரம்மாவும் தங்களில் யாரும் பெரியவரல்ல என்பதை உணர்ந்தனர். சிவபெருமானே முழுமுதற் கடவுள் என பணிந்தனர்.

அவர்களுக்குக் காட்சி தந்த தீப ஒளியே அருணாசலம் ஆயிற்று. சிவலிங்கம் அருணாசலேஸ்வரர் ஆனார். அண்ணாமலையார் என்றும் அவரைச் சொல்கிறோம்.

அருணகிரி நாதருக்கும் அவரை ஆதரித்த பிரபுட தேவராய மன்னருக்கும் முருகப் பெருமான் காட்சி கொடுத்த திருத்தலம் இது. 'முத்தைத் தரு' என்ற முதல் சொல்லை முருகப் பெருமான் வழங்கி, திருப்புகழ் பாட அருணகிரி நாதருக்கு அருளாசி வழங்கிய தலமும் இதுவே.

தமிழ்நாட்டில் திருவரங்கத்துக்கு (238 அடி) அடுத்த உயரமான ராஜகோபுரம் இதுதான்.

மலை வலம்

(கிரி) மலைவலம் செல்லும் கோவில்களில் தமிழ் நாட்டில் சிறப்பிடம் பெற்றது, திருவண்ணாமலை. பௌர்ணமி நாளில் இரவில் மலைவலம் (16கி.மீ.) வந்து அண்ணாமலையாரை தரிசித்தால் ஊழ்வினை நீங்கும் என்பது நம்பிக்கை.


மகாதீபம்

திருவண்ணாமலையின் இன்னொரு சிறப்பு கார்த்திகை தீபம். இதைக் காணக், கண் கோடி வேண்டும். இங்கு கார்த்திகை தீப விழா, 13 நாட்கள் நடைபெறும். முதல் மூன்று நாள் விழா, சின்னக் கடை வீதி துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடக்கும். இங்கு ராகு காலத்தில் எலுமிச்சை விளக்கேற்றி, வழிபாடு செய்தால் துன்பம் விலகும். ராகு, கேது தோஷமும் நீங்கும்.

தீபம்

மகாதீபம் ஏற்ற 3 ஆயிரம் கிலோ பசு நெய்யும், திரிக்கு ஆயிரம் மீட்டர் காடாத் துணியும் பயன்படுத்தப்படுகிறது. இந்த மகாதீபம் தொடர்ந்து 11 நாட்கள் மலை மீது ஒளிவீசும்.

- வி. மீனாட்சி, ஆறாம் வகுப்பு,
காமராஜர் மெட்ரிக்குலேசன் பள்ளி,
டாடாபாத், கோவை



கண்

நமது கண் நிமிடத்திற்கு 4 - 6 முறை இமைக்கிறது. இவ்வாறு இமைப்பதன் மூலம் கண்ணின் பாப்பா மேலும் கீழும் சுழன்று உள்ளே சேரும் கண்ணீரால் உயவுத் தன்மையைப் பெறுகிறது. சாதாரணமாகத் தொலைக்காட்சி, சினிமா பார்க்கும் போது அது நிமிடத்திற்கு ஒருமுறை என கண் இமைப்பது குறைவாகிறது. எனவே தொலைக்காட்சி, சினிமா போன்றவற்றைப் பார்க்கும்போது அவ்வப்போது இடைவெளி அளித்து கண்களைக் காப்பது அவசியம்.

நமது கண்களில் தூசி விழும்போது நீர் பெருக்கெடுக்கிறது. அதே நேரத்தில் கண்களில் இரத்தம் ஓடுவதால் கண்கள் சிவப்பாகின்றன.

- வே. சுபஸ்ரீ,
பத்தாம் வகுப்பு,
அரசு மேல்நிலை பள்ளி,
நல்லூர்
திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள சில கோயில்கள்

* ஏரமலூர் - ஸ்ரீ முத்தாலம்மன் கோயில்
* நல்லூர் - ஸ்ரீ திரௌபதி அம்மன் கோயில்
* வந்தவாசி - ஸ்ரீ ஜலகண்டீஸ்வரர் கோயில்
* தெள்ளாறு - ஸ்ரீ ராமர் கோயில்
* மூடூர் - ஸ்ரீ முருகன் கோயில்
* மலையனூர் - ஸ்ரீ அங்காளம்மன் கோயில்

- ஆ. சந்தியா,
பத்தாம் வகுப்பு,
அரசு மேல் நிலை பள்ளி,
நல்லூர்

திருவண்ணாமலை சுமார் 350 கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டது. மலையின் மேற்பரப்பு மட்டும் சுமார் 260 கோடி வருடங்களுக்கு முற்பட்டது என்று புவியியல் வல்லுநர்களால் கணிக்கப்பட்டுள்ளது. இம்மலை மற்றும் மலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 300 குளங்கள் உள்ளன.

பார்வதி தேவி இங்கு தவம் செய்து சிவபெருமானின் இடது பாகத்தை அடைந்தாள்.



இந்த மலையே லிங்கவடிவமாகும்.

மலையைச் சுற்றியுள்ள செங்கம் சாலையின் இடது புறத்தில் 'வைரக் குன்று' இருக்கிறது. இங்கு சுவாமி விக்கிரகங்கள் செய்வதற்கு ஏற்ற கற்கள் கிடைக்கின்றன.

- ராதாகிருஷ்ணா,
தஞ்சாவூர்

பௌர்ணமி இல்லாத மாதம்

1866 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பௌர்ணமி ஏற்படவேயில்லை! அதற்குப் பதில் அந்த ஆண்டு ஜனவரியில் இரண்டு பௌர்ணமிகளும், மார்ச்சில் மீண்டும் இரண்டு பௌர்ணமிகளும் ஏற்பட்டன. இன்னும் 25 இலட்சம் ஆண்டுகள் கழித்து தான் மீண்டும் இது போல ஏற்படும் என்று வானவியலாளர்கள் கூறுகிறார்கள்.

- எஸ். அமீர் ஜான்,
இராமசமுத்திரம்,
திருவண்ணாமலை மாவட்டம்



மாங்காய்க்கு


என்ன தெரிகிறது?

நான் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் படிக்கும்போது எங்கள் தமிழாசிரியர் வெங்கடசாமி, மாணவர்களைப் பார்த்துக் கேள்விகள் கேட்டுக் கொண்டே யிருப்பார். "தாசில்தார் வீட்டுக் குதிரை இறந்தபோது அந்த ஊர் மக்கள் அனை வருமே வந்து தாசில்தாரிடம் துக்கம் விசாரித்துச் சென்றனர். கொஞ்ச நாட்களில் தாசில்தாரே இறந்து போனார். அப்போது துக்கம் விசாரிக்க அவ்வூர் மக்களில் ஒரு சிலர் மட்டுமே வந்தார்கள். இதில் இருந்து என்ன தெரிகிறது?" என்று என் அருகில் அமர்ந்திருந்த பாண்டுரங்கனைக் கேட்டார். அவன் கூறினான்: "அவ்வூர் மக்கள் பிராணி களின்மேல் மிகவும் அன்பும் பரிவும் உள்ள வர்கள் எனத் தெரிகிறது!"

- எஸ். பொன்னுசாமி,
உடுமலைப்பேட்டை

'வேக'த்தடை

'**போ**க்குவரத்து'



பற்றி பாடம் நடத்தினார் ஆசிரியர். அப்போது "வேகத்தடை என்றால் என்ன?" என்று கேட் டார். அதற்கு ஒரு மாணவி எழுந்து "உப்பு" என்று பதில் கூற, ஆசிரியர் உட்பட அனை வரும் அம்மாணவியைத் திகைப்புடன் நோக்கினோம். மேலும் அம்மாணவி, "உருளைக் கிழங்கு போன்ற பொருட்களை வேக வைக்கும்போது முதலிலேயே உப்பைப் போட்டுவிட்டால் எளிதில் வேகவே வேகாது. எனவே முதலிலேயே உப்பைப் போட்டால் உருளைக்கிழங்கு வேக, தடை போட்டதுபோல் ஆகிவிடும். எனவே உப்புதான் வேகத்தடை" என்றுகூற அனை



வரும் சிரித்துவிட்டோம். ஆசிரியரும் சிரித் துக் கொண்டே "நான் சொன்ன வேகத் தடை என்பது ஸ்பீட் ப்ரேக்" என்று சொல்ல அம்மாணவியும் புரிந்து கொண்டு சிரித்து விட்டாள்.

- அ.பேச்சியப்பன், ராஜபாளையம்



மயங்கிய வித்வான்!

மாங்காய்

பக்கத்து வீட்டுத் திருமண விழாவின் போது நாதஸ்வர கச்சேரி நடந்து கொண்டிருந்தது. நாதஸ்வர வித்வானின் அருகில் தம்பி மற்றும் பக்கத்துவீட்டுப் பொடிசுகள் எல்லாம் விளையாட, அவர் இவர்களை விரட்டி 'வெளியில போய் விளையாடுங்க' என்றிருக்கிறார். உடனே வெளியே சென்று விட்டனர். தம்பி சமையல்கட்டில் பச்சடிக்காக வெட்டி வைத்திருந்த மாங்காய்த் துண்டை எடுத்து கடித்துக் கொண்டே நாதஸ்வர வித்வான் முன்பு போய் உட்கார... நாதஸ்வர வித்வானுக்கு எச்சில் ஊறி நாதஸ்வரம் வழியாகவே வந்துவிட்டதை இப்போது நினைத்தாலும் சிரிப்புத் தாங்க முடியவில்லை!

- ப. காளிதாசன், நீர்விளங்குளம்

தேனீ - குளவி


தேனி நகரில் பணிபுரியும் எங்கள் அண்ணனுக்கு ஒரு தகவல் தெரிவிப்பதற்காக, டெலிபோனில் எண்களைத் தட்டிய அப்பா அவசரமாக ஆபரேட்டரிடம், "ஹலோ, தேனியா?" என்றார். அவரோ, சீரியஸான குரலில் "இல்லை சார், நான் குளவி" என்று பதிலளிக்கவும், அப்பா முதலில் குழம்பிவிட்டுப் பின் சுதாரித்து "இஞ்சினியர் இருக்கிறாரா?" எனக்கேட்டு அண்ணனுடன் பேசினார். நாங்கள் பின்னர் தேனீ - குளவி ஜோக்கை அண்ணனிடம் சொல்ல, ஒரே சிரிப்பலைதான்!

- ஆர். ஜோதி, மதுரை



தண்ணீர் - பால்

குழாயில் தண்ணீர் ஊற்றி விட்டு,



அடிபம்ப்பை அடிக்க, தண்ணீர் வந்தது.

இதைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த நவீனா, குடிப்பதற்காகக் கொடுத்திருந்த பால் தம்ளரைக் கொண்டு போய் அங்கு தண்ணீர் அடித்துக் கொண்டிருந்த பெண்ணிடம் தந்துவிட்டு,

"அத்தை இந்தாங்க, பால். இதை குழாயில ஊத்தி அடிங்க" என்றாள்.

"எதுக்குக் குட்டி பாலை ஊத்தச் சொல்றே?" எனக் கேட்டதற்கு,

"நீங்க குழாயில தண்ணீர் ஊற்றி அடிக்கிறீங்க, குடம் குடமா தண்ணீர் வருது. இப்ப இந்தப் பாலை ஊத்தி அடிச்சா குடத்துல பாலா கொட்டுமில்ல!" என்றாள் அவள்.

இவளது விளக்கத்தைக் கேட்டு அனைவரும் சிரித்தனர்.

- பா. முருகேசன், இராஜபாளையம்




• இறால்

நண்டுகளைப் போன்றே இறால்களும் கணுக்காலி தொகுதியில் ஓட்டு மீன் வகுப்பைச் சார்ந்த உயிரி. ஆங்கிலத்தில் பிரான் (Prawn).
கடல், கழிமுகங்கள், ஆறு.



• பசிபிக் இறால்

சின்னஞ்சிறு இறால்கள்





ஏரி, குளம் முதலிய இடங்களில் வாழும் சின்னஞ்சிறு பிராணி. இறால்களில் பல வகைகள் உண்டு. அவற்றில் பெரும்பாலானவை கடலில் வசிக்கின்றன. ஆழமில்லாத கரையோரக் கடலில் இறால்கள் ஏராளமாகக் கூட்டம் கூட்டமாக நீந்திச் செல்லக் கூடியவை. சில வகைகள் கரையை அடுத்த கடற்கீழ் மணற்பாங்கான இடத்திலும் காணப்படுகின்றன.

இறாலின் உடல் நீண்டும் இரு பக்கங்களும் சற்று ஒடுங்கியுமிருக்கும். இது பல வளையங்களாலானது. அதில்



தலை, மார்பு, வயிறு என்னும் மூன்று பாகங்கள் உண்டு. உடம்பு முழுவதும் கைட்டின் என்னும் கொம்புப் பொருளாலான தோல் மூடியிருக்கும்.

• லாப்ஸ்டர்





• மண் லாப்ஸ்டர்



எஸ். சுஜாதா

இந்த ஓட்டில் நண்டின் ஓட்டில் இருப்பது போன்ற சுண்ணாம்புப் பொருட்கள் இருப்பதில்லை. கொம்பு ஒன்று முன்னுக்கு நீட்டிக் கொண்டிருக்கும். வயிற்றில் வளையங்கள் இருக்கும். ஒவ்வொரு வளையத்தையும் ஓடு மூடியிருக்கும். உடம்பு முழுவதும் இணையிணையான உறுப்புகள் வளையத்திற்கு ஒன்றாக அமைந்திருக்கின்றன. இந்த உறுப்புகள் உணர் கொம்புகளாகவும், தாடைகளாகவும் கால்களாகவும், நீந்தும் துடுப்புகளாகவும் பலவித வேலைகளைச் செய்கின்றன.

தலையில் இரண்டு கூட்டுக் கண்கள் உண்டு. அவை அசையக் கூடிய காம்புகளின் நுனியில் அமைந்துள்ளன. உணர் கொம்புகளில் 2 இணைகள் உண்டு. முதல் உணர் கொம்பு சிறியது. மார்பில் 8 இணை உறுப்புகள் காணப்படுகின்றன. முதல் மூன்று இணை உறுப்புகள் உணவைப் பற்றி, நசுக்கி முன்னுக்கு வாய்ப் பக்கமாக அனுப்பும். அவை உணர் கருவிகளாகவும் செயல்படுகின்றன. அவற்றையடுத்து ஐந்து சின்னஞ்சிறிய நடைக்கால்கள் உள்ளன.

முதல் மூன்று கால்களின் முனையில் இடுக்கிகள் இருக்கும். இந்த இடுக்கிகள் எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்ளவும், எதிரிகளைத் தாக்கவும் உதவுகின்றன. கால்கள் தண்ணீரில் நீந்தவும், தரையின் மேல் முன்னுக்கு நகர்ந்து செல்லவும் பயன்படுகின்றன.







கோடை விடுமுறைப் போட்டி – II முடிவு

விடுமுறைப் போட்டியில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். இவர்களில் நிறையப் பேர் சரியான விடையை அளித்திருந்தனர். அவர்களில் பத்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ரூ. 20/- பரிசு பெற்றவர்கள்:

1. ஜி.முருகன், விக்கிரமசிங்கபுரம்.
2. வே. சுபஸ்ரீ, நல்லூர்.
3. ஜி. ராஜா, நெல்லிக்குப்பம்.
4. எஸ். சத்யகாந்த், நீடாமங்கலம்.
5. ஆர். வினோத்குமார், காரைக்கால்.
6. மு. ரேவதி, மணல்மேடு.
7. அ. ஃபாய்கா, இராமநாதபுரம்.
8. ஆர். பவித்ரா, சென்னை.
9. சி. கண்ணன், மதுரை.
10. பி.எஸ்.அமர்நாத், கோவை.

சரியான விடை:
ருக்மணி தேவி, மொரார்ஜி தேசாய், சரோஜினி நாயுடு, ஆபிரகாம் லிங்கன், பரமஹம்சர் ஆகிய ஐவரும் பிப்ரவரி 29ந் தேதி பிறந்தவர்கள்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.
கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

வயிற்றில் 6 இணைத் துடுப்புகள் உள்ளன. அவை நீந்துவதற்குப் பயன்படுகின்றன. அவற்றில் கடைசி 2 துடுப்புகள் பெரியவை. வால் திரும்புவதற்கு உதவுகிறது.

இறால்கள் பெரும்பாலும் செத்துக் கிடக்கும் பொருள்களைத் தின்று அசுத்தத்தைப் போக்கும் பிராணிகள். அது தவிர உயிருள்ள சிறிய பிராணிகளையும் பிடித்துத் தின்னக் கூடியவை.

இவை செவுள்களின் வழியாக மூச்சு விடுகின்றன. நீரில் கரைந்துள்ள ஆக்ஸிஜனை உட்கொண்டு, உடம்பில் உண்டாகும் கார்பன் டை ஆக்ஸைடை வெளியிடுகின்றன. கடலிலுள்ள சாதாரண இறாலில் பக்கத்துக்கு 24 செவுள்கள் உள்ளன.

இறாலின் முதுகுப் பக்கத்தில் இதயம் இருக்கிறது. இறால் தான் இருக்கும் இடத்துக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக் கொள்ளக் கூடியது. மணலில் வாழும் இறால் மணல் நிறமாகக் காட்சியளிக்கிறது. சில இறால்கள் கோடுகள், புள்ளிகளுடனும் காணப்படுகின்றன. ஆழ்கடலில் இருக்கும் இறால்கள் ஆழ்ந்த சிவப்பு நிறத்துடன் காட்சியளிக்கின்றன.

இறால்களில் பல வகைகள் உள்ளன. அவை அளவுகளிலும், வண்ணங்களிலும் வேறுபடுகின்றன.

லாப்ஸ்டர் (Lobster) என்று அழைக்கப்படும் பிராணியும் இறால் வகையைச் சேர்ந்ததுதான். இதைச் சிங்கி நண்டு என்று அழைக்கிறார்கள். இது இறாலைப் போன்று இருந்தாலும் உருவத்தில் மிகப் பெரியது. ஒரு சிங்கி நண்டின் எடை 1½ முதல் 2 கிலோ வரை இருக்கும். இதன் விலையும் ரொம்ப ரொம்ப அதிகம். எனவே வெளிநாடுகளுக்குத்தான் இவை அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இப்போது இறால்கள் பண்ணைகளில் வளர்க்கப்படுகின்றன. உற்பத்தி நோக்கில் ரசாயனம் கலந்து வளர்க்கப்படும் இறால் கழிவுகளால் அந்தப் பகுதி மண் வளம் பாதிக்கப்படுகிறது. சில இடங்களில் இறால் கழிவுகள் கடலில் கலப்பதால் கடல் நீரும் மாசுபடுகிறது.

த.ஜானகி



குடிசையில் ஒரு சக்கரவர்த்தி!

வேதகிரி சிறந்த பண்டிதர். அவருக்குப் பிடித்தமான தெய்வீக நூல் பகவத் கீதை. ஊர் ஊராகச் சென்று சிறிய கதைகள் மூலமாகப் பகவத் கீதையைப் புரியும்படி விளக்குவார். கேட்பவர்கள் மனதை ஈர்க்கும்படி சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவர். எனவே சிறுவர் முதல் பெரியோர் வரை அவருடைய சொற்பொழிவை விரும்பிக் கேட்பார்கள்.

ஒரு முறை அவர் காஞ்சி நகருக்குச் சென்றார். அங்கு அவருடைய உபன்யாசத்தை ஆர்வத்துடன் நிறையப் பேர் கேட்கலாயினர். அதனால் இரண்டு மாதங்களுக்கு மேல் அங்கு தங்கினார். அவருக்குப் பணத்தோடு கிட்டத்தட்ட இருபது வேஷ்டி, துண்டுகள் கிடைத்தன. இன்னும் இரண்டு நாட்களில் அவ்வூரை விட்டுச் செல்வதாக இருந்தார்.

வேறு ஊருக்குச் செல்வதற்கு முன்னால் தனக்குக் கிடைத்த வேஷ்டி, துண்டுகளை ஏழைகளுக்குக் கொடுத்து விட்டுச் செல்ல விரும்பினார். தான் சிறுவனாக இருந்போது அன்றாடம் ஒரே ஆடையைத் துவைத்து, காய வைத்து அணிந்து கொண்டது ஞாபகத்திற்கு வந்தது.

பெரிய கடைக்குச் சென்று வேஷ்டி, துண்டுகளை விலைக்குப் போட்டுவிட்டு அதற்குப் பதிலாக சிறுவர்கள் அணிந்து கொள்ளும் டிராயர், சட்டைகளை வாங்கிக் கொண்டார். வேதகிரியாகவே போனால் எல்லோரும் தன்னை அடையாளம் கண்டுபிடித்து விடுவார்கள். தான் தானம் செய்வது யாருக்கும் தெரியக் கூடாது. ஏன் இடது கை செய்வது கூட வலது கைக்குத் தெரியக் கூடாது என்று



எண்ணினார். பெரிய பணக்காரர் போன்று மாறுவேடம் பூண்டு குதிரை வண்டியில் ஏறி அமர்ந்தார். வண்டிக்காரரிடம் ஏழைகள் குடி இருக்கும் பகுதிக்கு வண்டியை ஓட்டும்படி கூறினார்.

கொஞ்ச தூரம் சென்றதும் ஓர் ஆலமரம் கண்ணில் பட்டது. அந்த ஆல மரத்தடியில் ஏழெட்டுச் சிறுவர்கள் அரைகுறை உடையில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வண்டியை ஓரமாக நிறுத்தச் சொல்லி, வேதகிரி மட்டும் வண்டியிலிருந்து இறங்கி, சிறுவர்களை நோக்கிச் சென்றார்.

வேதகிரி சிறுவர்களின் அருகில் சென்றதும், அவர்கள் விளையாடுவதை விட்டுவிட்டு அவரையே வேடிக்கை பார்க்க ஆரம்பித்தனர். யாருக்கும் அவரை அடையாளம் தெரியவில்லை.

“சிறுவர்களே! இன்றைக்கு எனக்குப் பிறந்த நாள். இந்தாருங்கள்” என்று கூறிவிட்டு ஆளுக்கு ஒரு டிராயர், சட்டை என்று போட்டு வைத்திருந்த தனித்தனி பைகளை ஒவ்வொருவருக்கும் கொடுத்தார். கடைசியாக, பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் அவரிடம் பையைப்

பெற்றுக் கொண்டதும், "மிக்க நன்றி ஐயா" என்று கூறி அவரை வணங்கினான். களை பொருந்திய அவன் முகம் அவரை ஈர்த்தது.

"உன் பெயர் என்ன?"– அன்புடன் வின வினார்.

"சக்ரவர்த்தி" என்றான் பணிவோடு.

"இவன் இருப்பதோ குடிசை. இவனோ ஏழை. ஆனால் பெயரோ சக்ரவர்த்தி" என்று மனதிற்குள் எண்ணிய படி அவன் முதுகை அன்புடன் தட்டிக் கொடுத்தார்.



அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு குதிரை வண்டி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு அருகில் வந்தார். மறுபடியும் வண்டியில் ஏறிக் கொண்டு நகரின் வேறு பகுதியில் இருந்த குடிசைகள் உள்ள பகுதிக்கு வந்தார்.

இதே மாதிரி மூன்று நான்கு இடங்களில் ஏறி இறங்கி, தான் கொண்டு வந்திருந்த உடைகளை தானம் செய்து விட்டு, தான் சிறந்த முறையில் தானம் செய்து விட்டதாக மகிழ்ச்சியோடு வந்த வழியே திரும்பிக் கொண்டிருந்தார்.

பாதித் தூரம் சென்று கொண்டிருக்கும்போது ஒரு சிறுவன் தான் கொடுத்த மஞ்சள் பையோடு தன்னைக் கூட கவனிக்காமல், கடை வீதிப் பக்கம் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தார். உற்று நோக்கிய போது அவன் சக்ரவர்த்தி என்பதை அறிந்து கொண்டார்.

'கடை வீதிக்கு ஏன் போகிறான்? 'ஆமாம்...நான் கொடுத்த ஆடையை விற்கத்தான் போகிறான்' என்று முடிவு செய்தார்.

'எவ்வளவு ஆசை ஆசையாக இந்த ஏழைச் சிறுவனுக்குக் கொடுத்தேன். ஆனால்... இவனோ – தன் வீட்டிற்குத் தெரிந்தோ தெரியாமலோ விற்கப் போகிறான். அணிந்து கொள்ளக் கொடுத்தேனா?... அல்லது விற்று காசாக்கிக் கொள்ளக் கொடுத்தேனா!'

வேதகிரிக்குக் கோபம் கோபமாக வந்தது. வண்டிக்காரரிடம் வண்டியை ஓரமாக நிறுத்தச் சொன்னார். மெதுவாகக் கீழே இறங்கினார்.

இதற்குள் சக்ரவர்த்தி அவரைக் கடந்து சென்று விட்டான். அவர் சக்ரவர்த்தியைப் பின் தொடர்ந்தார்.

சக்ரவர்த்தி இவரைக் கவனிக்கவில்லை. இரண்டு கடைகளுக்கு இடையே இருந்த சந்தில் நுழைந்தான். வேதகிரி சந்தில் வந்து பார்த்தபோது, அவன் கண்களுக்குப் புலப்படவில்லை.

இந்தச் சந்து ஆற்றங்கரைப் பக்கம் செல்கிறது. எனவே, அவன் இந்த வழியாகத்தான் வரவேண்டும் என்று எண்ணியபடி அங்கேயே நின்று கொண்டிருந்தார்.

கால் மணி நேரத்தில் சக்ரவர்த்தி திரும்பி வந்தான். அவன் கையில் மஞ்சள் பை இல்லை. அவன் அருகில் வந்ததும் பெயரைச் சொல்லி அழைத்தார்.

தன்னை அழைத்தவரைப் பார்த்து அவன் முகத்தில் ஏற்பட்ட அதிர்ச்சி கலந்த திகைப்பை, வேதகிரி கவனிக்கத் தவறவில்லை.

"என்னங்க ஐயா?"– என்றான் தன்னைச் சமாளித்தபடி.

"என் பிறந்த நாள் பரிசுன்னு நான் அன்போடு கொடுத்த துணியை என்ன செய்தே?"

"வந்து... வந்து...."

● பனாமா நாட்டில் தான் அதிக அளவில் கப்பல்கள் உள்ளன.

"ஏன் தயங்கறே? யாருக்காவது விலைக்கு வித்துட்டியா? உங்க அம்மா அப்பாவுக்குத் தெரிஞ்சு வித்தியா? தெரியாம வித்தியா?" என்று வினவினார்.

"ஐயா! கோவிச்சுக்காதீங்க. நடந்தது எல்லாத்தையுமே சொல்லிடறேன். எங்க அம்மா, அப்பா சொல்றபடி தான் கேட்பேன். நாங்க ஏழைங்க தான். எங்கப்பா கூலி வேலைக்குப் போறவரு. எனக்கு ஒரு சிநேகிதன். அவன் பேரு ராக்கி. அவனும் வசதி இல்லாதவன் தான். நேத்து சாயந்திரம் அவனோட குடிசை தீ பத்திக்கிச்சு. தீ விபத்திலே அவனோட டிராயர் சட்டை எல்லாம் எரிஞ்சு போயிடுச்சு. அதனால நீங்க எனக்கு ஆடை கொடுத்ததும், நான் அதை ராக்கிக்குக் கொடுக்க ஆசைப்பட்டேன். வெளியே போயிருந்த எங்க அப்பா கொஞ்சம் நேரம் கழிச்சு தான் வந்தாரு. வந்ததும் அவர் கிட்டே எல்லாத்தையும் சொன்னேன். அவரும், 'சரி, ராக்கிக்குக் கொண்டு கொடு'ன்னு சொன்னாரு. இந்தச் சந்திலே இருக்கிற சொந்தக்காரங்க வீட்டிலே தற்சமயம் இருக்கான். அதனால அவன் கிட்டே கொடுத்துவிட்டு வரேன். நீங்க தப்பா நினைக்காதீங்க" என்றான்.

"நான் உனக்குக் கொடுத்த புது உடையை நீயே வைத்துக் கொண்டு, உன் பழைய உடையை அவனுக்குக் கொடுத்திருக்கலாம் இல்லையா?"

சற்றே தயங்கி நின்ற அவன் பணிவாக, "ஐயா! உங்களுக்கு வேதகிரி ஐயாவைத் தெரியுமா? அவர் ரொம்ப அறிவாளிங்க. அவர் நல்ல விஷயங்களை எல்லாம் என்ன அருமையா சொல்வாரு, தெரியுமா? 'எதை நீ விரும்புகிறாயோ அதையே மற்றவர்களுக்குக் கொடு'– அப்படின்னு பகவத் கீதையிலே கடவுள் சொல்லியிருக்கார்ன்னு வேதகிரி ஐயா சொல்லியிருக்காரு. அதனால தான் எனக்குப் பிடிச்சிருந்த, நீங்க வாங்கிக் கொடுத்திருந்த அந்தப் புதிய உடையை அவன்கிட்டே கொடுத்தேன். இப்ப மனசு ரொம்பச் சந்தோஷமா இருக்கு. நான் சொல்றேன்னு தயவு செஞ்சு தப்பா நினைக்காதீங்க. ஒரு நாளைக்கு அவரோட சொற்பொழிவை நீங்க கேட்டீங்கன்னா, உங்க மனசு கட்டாயம் மாறிடும். வரேங்க"– விடை பெற்றுக் கொண்டான்.

'எனக்குத்தான் உயர்ந்த மனசு. யாருக்கும் சொல்லாம தானம் செய்தேன். என்னை மாதிரி யாரும் அடக்கமாக இருக்க மாட்டார்கள் என்று என்னைப் பற்றி நானே கர்வப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது தான் எனக்கு உண்மை புரிகிறது. எனக்குத் தேவையானதை வைத்துக் கொண்டு, எனக்குப் பிடித்தமானதை வைத்துக் கொண்டு, மீதியைத்தான் தானம் செய்தேன். பகவத் கீதையில் கடவுள் என்ன சொல்லியிருக்கிறாரோ... அதன்படி நடந்து கொள்ளும்படி மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும் நான், கீதை காட்டிய பாதையில் நடக்கவில்லை. ஆனால்... அதிகம் படிக்காத சிறுவன் ஆண்டவனுக்குப் பிடித்த செயலைச் செய்திருக்கிறான்.

'சக்ரவர்த்தி... நீ... என்னை விட உயர்ந்துட்டே... குடிசையிலே வசித்தாலும் நீ சக்ரவர்த்தி சக்ரவர்த்திதான்.'

மனதிற்குள் எண்ணியபடி வண்டியை நோக்கிச் சென்றார் வேதகிரி.


● பினாங்கில் உள்ள சீனரால் கட்டப்பட்ட புத்தராலயத்தில் புத்தர் நின்ற கோலத்திலும், அமர்ந்த கோலத்திலும், படுத்த கோலத்திலும் காட்சியளிக்கிறார்.

- கோட்டைச்செல்வம்



● ரூபாய்க்கு 100 காசுகள் என்ற முறை 1957ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது.

குறுக்கெழுத்துப் புதிர்





இடமிருந்து வலம்:

1. அற்புத விளக்குக்குச் சொந்தக்காரன் (5)
4. மீன்கள் ______ மூலம் சுவாசிக்கின்றன (3)
7. வாத்தின் உறவு. மெல்லிய, நீண்ட கழுத்துடையது (4)
9. பகைவன் என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)
11. ஆற்றைக் கடக்க இது உதவும் (3)

வலமிருந்து இடம்:

2. மரங்களில் ஒடித்த மெல்லிய கிளை (3)
6. மூத்த சகோதரன் (4)
13. கல்வி தெய்வம் (5)

மேலிருந்து கீழ்:

1. சூரபத்மன் ஒரு ______ (5)
2. இரண்டு அடிகளைக் கொண்டது (3)
8. நம் நாட்டு சீதோஷ்ண நிலைக்கு ______ ஆடை ஏற்றது (4)
10. ஃபிரான்ஸின் தலைநகர் (3)

கீழிருந்து மேல்:


3. திருடு (3)
4. ராஜா, ராணி மலை உள்ள ஊர் (3)
5. முருகனின் இன்னொரு பெயர் (4)
11. மன்னர், அமைச்சர் என்பது ஒரு ______ (3)
12. கர்ணனின் தாய் (3)
13. உண்மை (5)

— எஸ். சஹானா,
அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
திருவண்ணாமலை

விடை: 56-ம் பக்கம்.


கோகுலம்

போஸ்டர்




விம்
சாம்





ரோஜர் ஃபெடரர்

பிள்டன்
பியன்கள்
2003









செரீனா வில்லியம்ஸ்

டாக்டர் கு. கணேசன்

● சாவித்ரி பிரபாகரன், திண்டுக்கல்

? 'டெலிமெடிசின்' என்றால் என்ன டாக்டர்?

! டெலிமெடிசின் என்பது மருத்துவத் துறையில் அண்மையில் நுழைந்துள்ள புதிதொரு தொழில்நுட்பம். இதன்படி உங்கள் ஊரில் இருந்து கொண்டே உலகின் எந்த மூலையில் உள்ள மருத்துவ நிபுணர்களுடனும் கலந்துரையாடி அவர்களின் அரிய ஆலோசனைகளைப் பெறமுடியும். முன்பெல்லாம் பண வசதி உள்ளவர்கள் நவீன சிகிச்சைகளைப் பெறுவதற்காக அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற வெளிநாடுகளுக்குச் செல்வதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். டெலிமெடிசின் வந்தபிறகு இம்மாதிரியான நீண்ட தூரப் பயணங்கள் தேவையில்லை என்றாகிவிட்டது. உங்களிடம் ஒரு கணினி, தொலைபேசி, வெப்காமிரா, ஸ்கேனர் ஆகியவை இருந்தால் போதும். நீங்களும் டெலிமெடிசின் வசதியைப் பெறலாம். அல்லது இந்த வசதி உள்ள இடத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். நோயாளி கணினியின் முன்னால் அமர்ந்துகொள்ள, அவரை

டெலிமெடிசின்



இங்குள்ள டாக்டர் ஒருவர் பரிசோதிப்பதை காமிரா மூலம் படமெடுத்து, இண்டர்நெட் வழியாக அனுப்பி, வெளிநாட்டிலுள்ள அல்லது உள்நாட்டிலுள்ள வேறு ஒரு மருத்துவ நிபுணருடன் நேருக்கு நேராகப் பேசலாம். அப்போது நோயாளியிடம் காணப்படும் அறிகுறிகள், உடல் தடயங்கள், பரிசோதனை முடிவுகள் போன்றவற்றை அந்த மருத்துவ நிபுணருடன் கலந்து பேசி, நோயாளிக்கு என்ன நோய், எப்படி சிகிச்சை தருவது, தடுப்பு என்ன போன்ற விவரங்களைத் தெரிந்து கொண்டு, உடனடியாக அந்த நோய்க்குரிய நவீன சிகிச்சையைத் தொடங்கிவிடலாம். இதனால் அந்த வெளிநாட்டு மருத்துவ நிபுணரைச் சந்திக்க ஆகும் பயணச் செலவு இல்லை. அவருக்காகக் காத்திருக்கும் நேரம் மிச்சம்.

● த. வரதராஜன், திருவாரூர்

? 'ஹெமான்ஜியோமா' என்றால் என்ன? இதற்கு என்ன சிகிச்சை உள்ளது? இதை முற்றிலும் குணமாக்க முடியுமா?


! 'ஹெமான்ஜியோமா' என்பது உடல் ரத்த நாளங்களில் உருவாகின்ற ஒரு வகைக் கட்டி. இது சாதாரணக் கட்டி தான். புற்று நோய்க்கட்டி இல்லை. அறுவை சிகிச்சை மூலம் இதனை முற்றிலும் குணப்படுத்த முடியும்.

● ஆ. ரவீந்திரன், சென்னை

? வலிப்பு ஏற்படுவது ஏன்?

! நம் மூளை நரம்பணுக்களில் ஒருவித மின்சக்தி இடைவிடாமல் வெளிப்படுகிறது. இதன்மூலம்தான் நம் உடலுறுப்புகள் அசைகின்றன. செயல்படுகின்றன. இந்த மின்சக்தியின் அளவு இயல்பாக இருந்தால் உடலின் இயக்கமும் சரியாகவே இருக்கும். மின்சக்தியின் அளவு அதிகரித்தாலோ, மின்சக்தி உண்டாவதில் தடை ஏற்பட்டாலோ நரம்பணுக்களில்

அதிர்வுகள் உண்டாகும். இந்த அதிர்வுகள் மூளையிலிருந்து கிளம்புகின்ற நரம்புகள் மூலம் உடலெங்கும் பரவும். இதனால் உடலுறுப்புகளில் கட்டுப்பாடில்லாத அசைவுகள் ஏற்படும். இந்த அசைவுகளைத்தான் வலிப்பு என்கிறோம். வலிப்பு வருவதற்குப் பல காரணங்கள் உள்ளன. பெற்றோருக்கு வலிப்பு இருக்குமானால் பரம்பரை வழியாக அவர்களின் குழந்தைகளுக்கும் வலிப்பு வரவாய்ப்புண்டு. மூளையில் ரத்த ஓட்டம் பாதிக்கும் போது, கிருமி பாதிப்பு ஏற்படும்போது, கட்டி உருவாகும்போது, தலையில் அடிபட்டு ரத்தம் உறையும்போது, குடிபோதை அதிகமாக இருக்கும்போது - இது போன்ற பாதிப்புகளால் வலிப்பு ஏற்படும். குழந்தைகளுக்குக் காய்ச்சல் அதிகமானால் வலிப்பு வரும். சர்க்கரை நோய் அதிகமானாலும் சரி, மிகவும் குறைந்தாலும் சரி, வலிப்பு வரலாம். மன நோய், சிறுநீரக நோய் போன்றவற்றாலும் வலிப்பு வருவதுண்டு. காரணமே இல்லாமலும் வலிப்பு ஏற்படலாம்.



● கா. வளர்மதி, சேலம்

? 'ஆண்டிபயாட்டிக்'

என்றால் என்ன?

மருந்துகளை அடிக்கடி சாப்பிட்டால் ஆபத்து என்கிறார்களே, உண்மையா டாக்டர்?

! உண்மைதான். நம் உடலில் நன்மை செய்யும் பாக்டீரியாக்கள் நிறைய உள்ளன. மருத்துவரின் பரிந்துரையின்றி, தாங்களாகவே மருந்துக்கடைகளில் 'ஆண்டிபயாட்டிக்' மருந்துகளை வாங்கி அடிக்கடி சாப்பிட்டால் இந்த மருந்துகள் நோய்க் கிருமிகளை மட்டுமின்றி நன்மை செய்யும் பாக்டீரியாக்களையும் அழித்துவிடும். இதனால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்துவிடும். குடல் புண், வாய்ப்புண் ஆகிய தொல்லைகள் உண்டாகும். உணவு செரிமானம் பாதிக்கப்படும்.

புதிர் இங்கே! விடை கீழே!

1. கால்சியம் சத்து எதில் அதிகம்?

அ. சர்க்கரை

ஆ. வெல்லம்

இ. முந்திரி

2. இரைப்பை நோய்களை நேரில் கண்டறிய உதவும் கருவி எது?

அ. எண்டோஸ்கோப்பி

ஆ. லேப்ராஸ்கோப்பி

இ. சிஸ்டாஸ்கோப்பி

3. குழந்தைக்கு முளைக்கும் பால் பற்கள் மொத்தம் எத்தனை?

அ. 12

ஆ. 20

இ. 30

4. குழந்தைகள் தூங்கும்போது பற்களை நறநறவென்று கடிப்பதற்குப் பெயர் என்ன?

அ. ஆட்டிசம்

ஆ. பீனிசம்

இ. ப்ருக்சிசம்

5. உடலில் காயம் ஆறுவதற்கு எது தேவை?

அ. வைட்டமின் டி

ஆ. வைட்டமின் ஏ

இ. வைட்டமின் சி

விடைகள் :

1. ஆ, 2. அ, 3. ஆ, 4. இ, 5. இ


விஞ்ஞானி கடத்தல்!
4
கதை, படம்: முத்து
மாமா, இங்கே தனியா ஒரு போர்டு இருக்கு.
ஃபயர் என்ற பட்டனை அழுத்திப் பார்க்கலாம்.
சீக்கிரம் மாமா.
பட்டனை அழுத்தியதும் முன்புறம் நான்கு குழாய்கள் நீண்டன.
!
குழாய்கள் நெருப்பைக் கக்கின.
யானை பயந்து ஓடியது.
நல்லவேளை தப்பித்தோம்!



இதற்கிடையே கடத்தல் காரர்களுடன் விஞ்ஞானி வந்து கொண்டிருந்தார்.
ஏய், என்ன இது?
காட்டுவாசிகள் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர்.
யார் நீங்கள்?
உங்களைப் பார்த்தால் நல்லவர்களாகத் தெரியவில்லை. எங்கள் தலைவரிடம் வாருங்கள்.
அங்கே –
நீங்கள் யார் என்பதை மாந்த்ரீகர் சொல்வார். நாளை பார்க்கலாம்.
அதே நேரம் –
மாமா, அங்கே பாருங்க.


மாமா, ஜீப்பை நிறுத்துங்க.
பாம்பை சுட்டு வீழ்த்தினாள் ஜானு.
மகனே, உனக்கு ஒண்ணும் ஆபத்தில் லையே. நண்பர்களே உங்களுக்கு நன்றி.
ஒரு உயிரைக் காப்பாற்றி விட்டீர்கள். எங்கள் தலைவர் மகிழ்வார். வாருங்கள்.
தலைவரிடம் சென்றனர்.
வாருங்கள், விஷயத்தைக் கேள்விப் பட்டேன்.
நீங்கள் என்ன உதவி கேட்டாலும் செய்யத் தயார்.


ஒரு முதியவரை கடத்திச் சென்று விட்டனர். தேடிக் கொண்டிருக்கிறோம்.
ஓ—அந்தச் சாத்தான்களா?
இங்குதான் இருக்கிறார்கள். நீங்கள் அவரைக் காணலாம். வாருங்கள்.
!?
ஆ... தாத்தா! உங்களுக்கு ஆபத்து இல்லையே!
ரகு, ஜானு எப்படி இருக் கீங்க?
இந்தச் சாத்தான்களைக் கட்டிப் போடுங்கள்.
நண்பர்களே, நாம் தூங்கலாம்.
ஆகாஷ், ஜானு, ரகு நாம் காலையில் பேசலாம்.
குட் நைட் தாத்தா.
ஒரு விபரீத விடியலுக்குக் காத்திருந்தது அந்த இரவு.
(தொடரும்)

தித்திக்கும் தேன்



தேனீக்கள் மலர்களில் சென்று அமர்ந்து அம்மலரிலுள்ள தேனைத் தங்களின் உறிஞ்சு குழல்களைக் கொண்டு உறிஞ்சிக் குடிக்கின்றன. இப்படி உறிஞ்சப்பட்ட தேன் தேனீக்களின் உடலிலுள்ள தேன் நீர்ப்பைக்குள் செல்கின்றது. இச்சுரப்பி தேனீக்கள் உறிஞ்சுமளவிற்கு விரிவடைகிறது. தேனீக்களின் வயிற்றுப் பகுதியில் இச்சுரப்பி அமைந்துள்ளது. இதனின்றும் தனி வழி ஒன்று வயிற்றுப் பகுதிக்குச் செல்கிறது.



தேன், இந்தத் தேன் நீர்ச் சுரப்பியில்தான் உருவாகத் தொடங்குகிறது. மலரிலிருந்து உறிஞ்சப்பட்ட மதுவில் இருக்கும் சர்க்கரை, இச்சுரப்பியில் இரசாயன மாற்றமடைகிறது. இந்த மாற்றத்திற்குப் பிறகு மதுவிலுள்ள அதிக அளவு நீர் ஆவியாக வெளியேற்றப்படுகிறது. இந்த மாற்றங்கள் தேன் கூட்டின் சூட்டினாலேயே நடைபெறுகின்றன. தேன் அடையாகக் கூட்டில் தங்குகிறது. தேன் அடையில் தேன் சேகரிக்கப்படுவது, தேனீக்களின் எதிர்கால உணவிற்காகப் பயன்படுகிறது.


● மலரிலுள்ள தேன், தேனீக்களுக்கு உணவாகிறது. உணவைச் சேகரித்து வைப்பது தேனீக்களின் வழக்கம். அப்படி சேகரிப்பட்ட உணவைத்தான் நாம் தேனாகப் பெறுகிறோம்.

● தேனீக்களின் தேன் கூட்டிலிருந்து மூன்று கிலோ தேன் எடுக்கலாம். மலர்களிலிருந்து தேன் எடுத்துவர தேனீக்கள் தினமும் சுமார் நான்கு மைல் தூரம் பறந்து செல்கின்றன. தேன் எடுக்கச் செல்லும் தேனீ, மணிக்கு ஒன்பது மைல் வேகத்தில் பறக்கிறது. அது தேனுடன் திரும்பி வரும்போது அதன் வேகம் மணிக்கு 6 மைலாகக் குறைந்து விடுகிறது.



● தேனீக்கள் ஒரு கிலோ தேனைச் சேகரிக்க எவ்வளவு நேரமாகும்? 6.68 லட்சம் பூக்களில் தேனெடுத்தால் ஒரு கிலோ எடை தேன் கிடைக்கும். ஒரு கிலோ தேன் சேகரிக்க தேனீ செல்லும் தூரம் பூமியை நான்கு முறை சுற்றி வருவதற்குச் சமமானது.






என். ஜரினா பானு

● ஒவ்வொரு தேன் கூட்டிலும் சுமார் ஆறு ஆண் ஈக்களும், ஒரு ராணி ஈயும், 25000 வேலைக்கார ஈக்களும் இருக்கும். தேன் கூட்டில் ஒரு தேனீக்கு நோய் வந்துவிட்டால் அது தானாகவே வெளியேறிவிடும். அதோடு இறந்தும் போய்விடும். அவ்வாறு போகவில்லையென்றால் சுகாதாரத்திற் காக மற்ற தேனீக்க ளெல்லாம் சேர்ந்து அதைக் கொன்று விடும்.

● கூட்டில் உள்ள ராணீத்தேனீ அதிக வெப்பத்தினால், பாதிக்கப்படாமல் இருப்பதற்காக மற்ற வேலைக்கார தேனீக்கள், எப் போதும் தங்கள் சிறகுகளைத் தொடர்ந்து அடித் துக் கொண்டே யிருக்கின்றன. இதனால் வெளியில் உள்ள வெப்ப நிலை யைக் காட்டிலும், கூட்டில் பத்து டிகிரி குறைவான வெப்ப நிலையே காணப் படும்.

● மலரிலிருந்து உறிஞ்சப்படும் மது என்பது 'நெக்டார்' என்னும் பொருளாகும். சில நேரங்களில் மலரில் நெக்டார் இல்லை யெனில், தேனீக்கள் செடி, கொடி மற்றும் பயிர்களிலுள்ள இனிப்பான திரவத்தையும் உறிஞ்சி, அதைத் தேன் சுரப்பியில் சேகரிக்கும். மலரிலுள்ள நெக்டாரின் தன்மைக்கேற்ப தேனின் நிறத்தில் மாறுபாடு காணப்படும்.

● தேனில் பல கூட்டுப் பொருள் கள் உள்ளன. சர்க்கரை, லெவொலஸ், டெஸ்ட்ரோஸ் ஆகியவை கலந்துள்ளன. இவை அல்லாமல் கேன்சுகர், மால்டஸ், டெஸ்ட்ரீன், தாதுக்கள் ஆகியவையும் அதிகமான அளவில் என்ஸைமும், பல வைட்டமின்களும், சிறிதளவு புரோட்டீன், ஆஸிட்ஸ் போன்ற பொருள்களும் உள்ளன.



1000/–ரூபாய் பரிசுப் போட்டி

நீங்கள் அதிகம் விரும்பும் இந்தப் போட்டியில் பங்கேற்பது மிகவும் சுலபம். நீங்கள் செய்ய வேண்டியது:

- சரியான விடைகளைக் கண்டு பிடித்து எழுத வேண்டும்.
- பெற்றோர் கையொப்பம் இருக்க வேண்டும்.
- முகவரி கூப்பனை ஒட்டி, உங்கள் முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ. 200/- பரிசாக வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. கடைசித் தேதி **20.8.2003**

இந்த மாதப் போட்டி
பொருத்துக :

1.	எகிப்து	— மாலை கண் நோய்
2.	எவரெஸ்ட்	— அஸ்ட்ரானமி
3.	நிக்டாலோபியா	— சான்ஃபிரான்சிஸ்கோ
4.	நட்சத்திரங்கள் பற்றிய படிப்பு	— டாஸ்மேனியா
5.	கலிபோஃர்னியா	— பச்சேந்திரிபால்
6.	ஆஸ்திரேலியா	— கெய்ரோ

7. அரங்கன் வயிற்றுக்குள் ஆயிரம் பொருட்கள். ஆயிரம் உயிர்கள் — அது என்ன?
8. மேலே உள்ள படத்தில் இருப்பது யார்?



ஆசிரியர்,
கோகுலம்
47 - NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 97

சந்திரன்



நேரம் வரும் காத்திரு!

7. துப்பறியும் வேலை தொடங்கியது...

அருண், மாதவன், பீட்டி மோகன் என மூவரும் அதிரடியாகப் பள்ளியிலிருந்து வெளியேற்றப்பட்டதில் மாணவர்களும், மற்ற ஆசிரியர்களும் அதிர்ச்சியில் இருந்தார்கள். ஹாஸ்டல் வார்டனாகப் புதிதாக வந்த சதாசிவம் வாத்தியார்தான் எல்லாவற்றுக்கும் காரணம் என எல்லாருக்கும் தோன்றியதால் அனைவருக்கும் அவர் மீது அதிருப்தி.

"அந்த ஆளை ஏதாவது பண்ணணும்டா. அவரு ஹாஸ்டலுக்கு வந்ததுலயிருந்து ஏதாவது ஒண்ணு பண்ணிட்டே இருக்காரு" என்றான் ஒருவன்.

"நம்மால என்னடா பண்ண முடியும்? நாம எல்லாரும் போய் கரஸ்பாண்டண்ட் கிட்ட சொன்னாக்கூட எதுவும் நடக்காது. வேணா, நம்மையும் ஸ்கூலை விட்டு அனுப்பிடுவாங்க!"

"அப்படியில்லைடா. கரஸ்பாண்டண்ட் கிட்ட அவர் சாட்சின்னு கொடுத்தது எல்லாம், எனக்காக... நான் கேட்டேன்னுதாண்டா அருண் பிரிண்ட் அவுட் எடுத்துட்டு வந்தான். பீட்டிகிட்ட அது சம்மந்தமா டவுட் கேட்டபோது அவர், 'இதுபத்தியெல்லாம் ஜென்ரல் நாலட்ஜ்ன்ற முறையில் தெரிஞ்சி வெச்சிக்கறது நல்லதுதான். ஆனாலும் இவ்வளவு டீடெய்லா இந்த வயசுல தேவையில்லையேப்பா'ன்னுதான் சொன்னாரு! அதோட இந்த மாதிரி ட்ரக்ஸ் எல்லாம் நம்ம மாதிரி ஆளுங்களுக்குச் சாதாரணமா கிடைக்காதாம். நம்ம வார்டன் கரஸ்பாண்டண்ட்கிட்ட என்ன சொல்லி எப்படி

கன்வின்ஸ் பண்ணாரோ... இந்த பிரிண்ட் அவுட்டைக் காட்டி, அதுக்கு பிஈடியும் உடந்தைன்னு அவர் மேலயும் நடவடிக்கை எடுக்க வைச்சிட்டாரு!

"இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?"

"பிஈடிதான் அருண் அப்பாகிட்ட சொல்லியிருக்கார்."

"மொத்தத்துல இதுக்கெல்லாம் நான்தான் காரணமோன்னு எனக்குக் கஷ்டமா இருக்கு. எங்க அப்பாகிட்டே போன்ல பேசியிருக்கேன். நாளைக்கு இங்க வரேன்னாரு! அவரோட போய், நான் பிரின்ஸிகிட்ட எல்லாத்தையும் சொல்லப் போறேன்."

"உங்க அப்பா வந்தா முதல்ல வைஸ்பிரின்ஸிகிட்ட பேசச் சொல்லுடா" என மாணவர்கள் விவாதம் தொடர்ந்தது.


கரீம் வீட்டில்...

"என்னங்க பண்ணாங்களாம்... எதுக்கு அவங்களை ஸ்கூலை விட்டு வெளியே அனுப்பினாங்க?" கரீம் அப்பாவிடம் அருண் விவகாரம் பற்றிக் கேட்டார் கரீமின் அம்மா.

"எல்லாரும் அந்தச் சதாசிவம் வாத்தியார்தான் காரணம்ன்னு சொல்றாங்க! இந்த வருஷம் சேம்பியன்ஷிப் வாங்கிடணும்ன்னு, இந்தப் பசங்களுக்குப் போய் டோப்பிங் ட்ரக்ஸ் கொடுக்க அந்த பிஈடி முயற்சி பண்றாரு! இதுக்காக இவ்வளவு ஏற்பாடு பாருங்கன்னு அருண்கிட்டயிருந்த பிரிண்ட் அவுட்டை எல்லாம் எடுத்துட்டுப் போய் கம்ப்ளைண்ட் பண்ணிட்டாராம் அந்த வாத்தியார்!"

"வாத்தியார் அனாவசியமா இப்படி பண்ணுவாரான்னு..."

"எனக்கு அவரு யோக்கியமான வாத்தியாரா தெரியலை. ஏன்... முன்னாடி, ராகவை ஸ்கூல்ல விட்டு அனுப்பினாங்க இல்லை... அப்பவே இந்த ஆளுதான் விளையாடியிருக்காரு. அவன் கிட்ட செல்ஃபோன் இருந்த விஷயம் இவருக்கு முன்னமே தெரிஞ்சுருக்கு. ஆனா நான் போய் அவர்கிட்ட பேசின



• இந்தியாவில் 7,200 ரயில் நிலையங்கள் உள்ளன.

போது, அதை எங்கிட்ட காட்டிக்கலை. எங்கிட்ட நல்லவரு மாதிரி நடிச்சி, பின்னாடி ராகவைத் திட்டமிட்டு மாட்டிவிட்டிருக் காருன்னு தோணுது. எப்படியாவது நல்ல பேரு எடுத்து புரொமோஷன் வாங்கறதுல குறியாயிருக்காருன்னு சொல்றாங்க. அவரு என்ன பண்றாருன்னு எப்படியாவது கண்டுபிடிக்கணும்ன்னு எல்லாரும் யோசிக் கறாங்களாம். அதுக்கு ஏதோ பண்றாங்க போல. ஆனா அது எப்படி ஒர்க் அவுட் ஆகும்ன்னு தெரியலை, பார்ப்போம்."

"எங்க கிளம்பறீங்க?"

"நான் வெளியிலே போறேன். வர லேட் டாகும். அருண் வீட்டுல இருந்து போன் வந்தா கிளம்பிட்டேன்னு சொல்லு. ராக வோட மாமாவும், அப்பாவும் வர்றங்க. கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. அதனால எனக்கு வெயிட் பண்ணாதே."

கரீமின் அப்பா கிளம்பினார்.

ட்ரிங்...ட்ரிங்...

பொற்கேணி டெபுடி வார்டன் அறையில் மணியடித்தது. குளித்துவிட்டுத் திரும்பிய சதாசிவம் வாத்தியார் தலை யைத் துவட்டியபடியே போனை எடுத்தார்.

"ஹலோ, பொற்கேணி ஹாஸ் டல்."

''யாருய்யா நீ. இந்த



விஷயம்லாம் போன்லதான் பேசுவாங்களா?"

"........................"

"யாருய்யா இது? முதல்ல போனை வைய்யா? இந்த போன்ல அதெல்லாம் பேச முடியாது. நேர்ல வரச் சொல்லுங்க. அதுவும் ஸ்கூலுக்கு வெளியிலே போய்தான்''– போனை வைத்தார் சதாசிவம்.

நிமிர்ந்தால் ஹாஸ்டல் மேனேஜர். அவரைக் கண்டதும் ஒரு நிமிடம் ஆடிப் போனார் சதாசிவம்.

''என்னய்யா.... என்ன வேணும்? ரூமுக்குள்ள வர்றதுன்னா கதவைத் தட்டி பர்மிஷன் கேட்டு வர்றதில்லையா? இப்படியா நேரா வருவாங்க?"

"சார்..." என்று இழுத்தார் மேனேஜர்.

"என்னய்யா சார்? போன்ல பேசிட்டுதானே இருக்கேன். நீ பாட்டுக்கு உள்ளே வந்தா? அறிவில்லே? என்ன வேணும் சொல்லு?"

மேனேஜர் இதை எதிர்பார்க்கவில்லை. வயதான அவரை சதாசிவம் ஒருமையில் திட்டியது அதிர்ச்சியாக இருந்தது.

"என்ன வேணும் சொல்லித் தொலை."

''வந்து... நீங்க நைட் வெளியிலே போயிருந்தபோது உங்களுக்கு போன் வந்தது. எங்கிருந்துன்னு கேட்டேன். நீ பேரை மட்டும் சொல்லுன்னு சொன்னாங்க. ஏதோ முகேஷ்ன்னு சொன்னாங்க. அதைச் சொல்லத்தான் வந்தேன்."

"என்னது முகேஷா? அவன் எதுக்கு இங்க பேசறான்? சரி நான் பார்த்துக்கறேன். வேற எதுவும் போன் வந்துதா?"

"ம்... நைட் பிரின்ஸியும் போன் பண்ணியிருந்தாரு. டூட்டி டைம்ஸ்ல எங்கய்யா காணாம்ன்னு கேட்டாரு."

"ம்... எனக்குத் தெரியும். அதெல்லாம் நீ கேக்கத் தேவையில்லை. உன் வேலை என்னவோ அதை மட்டும் பாரு தெரியுதா?"

தாம்பரம் பஸ் நிலையத்துக்கு அருகில் தனக்குச் சொல்லப்பட்ட அடையாளத்தைத் தேடினார் சதாசிவம். அவருடன் அவரது நண்பர் ஒருவரும் உடனிருந்தார்.

"என்னடா... என்ன விஷயமா உன்னை வரச் சொல்லியிருக்காங்க? ஏன் இப்படி ரகசியமா மீட் பண்றே?"

"ம்... வடக்கத்தி சேட் ஒருத்தர் அடுத்த வருஷம் பெருசா ஒரு ரெஸிடென்ஷியல் ஸ்கூல் திறக்கப் போறாராம். எங்க சொந்தக்காரர் ஒருத்தர் மூலமா என்னை காண்டாக்ட் பண்ணாங்க. இந்த ஸ்கூலைப் பத்தியும் அவங்களுக்கு நிறைய தகவல் வேணுமாம். அதை என்கிட்ட எதிர்பார்க்கறாங்கன்னு நினைக்கறேன். அதைப் பத்திப் பேசத்தான் இப்ப வந்திருக்கோம்."

''சரி...அதுல ரகசியமா பேச என்ன இருக்கு?"

''இந்த ஸ்கூல்ல படிக்கற பசங்க... அவங்க அப்பா, அம்மா பேக்ரவுண்ட்.... அவங்க வருமானம் லெவல்... பின்னணி, அட்ரஸ் எல்லாம் தேவைப்படுதாம். இது மாதிரி நிறைய ஸ்கூல்லயிருந்து தகவல் திரட்டி அதை வெச்சி புது ஸ்கூலை எப்படி புரொமோட் பண்ணறதுன்னுல்லாம் ப்ளான் பண்ணுவாங்க! இதனால குறைஞ்ச செலவுல சீக்கிரம் ஸ்கூல் ஒரு நல்ல நிலைமைக்கு வரும். ஸ்கூல் நடத்துறதுல என்ன காசுன்னு தெரியுமே! சாதா ஸ்கூலுக்கே அந்த வருமானம்னா, ரெஸிடென்ஷியல் ஸ்கூலுக்கு கேக்கவே வேணாம். அதனால



● பறவைகள் தரையில் இருக்கும் போது பாடாது. மரக்கிளைகளில், தான் பாதுகாப்பாக அமர்ந்திருக்கிறோம் என்று உணரும் போதுதான் பாடும்.

– ரா. வினோத்குமார்

தான் இந்த மாதிரி தகவல் கொடுத்தா, லம்ப்பா பணம் தரேன்னு சொல்லியிருக் காங்க! அது சம்மந்தமா பேசத்தான்..."

"அந்த அமௌண்ட்டைக் கொடுத்து கவர்மெண்ட் ஸ்கூல்ல போஸ்டிங் வாங்கி டலாம்ன்னு பார்க்கறியாக்கும். அதுக்கு 2 லட்சமோ, 3 லட்சமோ தேவைப் படும்ன்னு சொன்னியே! அவ்வளவு பணம் தருவாங்களா?"

"எவ்வளவு பணம் தருவாங் கன்னு எனக்கும் தெரியலே! ஆனா அவ்வளவு பணம் கிடைக் காதுன்னா அந்த ஸ்கூல்லேயே எனக்கு வைஸ்பிரின்ஸியா போஸ்டிங் வேணும்ன்னு கேட் பேன். ஒர்க் அவுட் ஆனா பார்க் கறது! இல்லாட்டி இதையே அப்படியே உல்டாவா ஆக்கிட வேண்டியதுதான். எங்க கரஸ் பாண்டண்ட் இப்ப எனக்குக் கொஞ் சம் நெருக்கமாயிருக்காரு. அவரு கிட்ட போய் சொல்லி போலீஸ் மூலம் இவங்களைப் பிடிச்சிக் கொடுத்து நல்ல பேரு வாங்கி பொற்கேணியிலேயே புரொமோஷன் வாங்கிடறேன் பாரு!"


"நீ ஜெக ஜாலக் கில்லாடிடாப்பா! கரஸ்பாண்டண்ட் உனக்கு நெருக் கம்னா அப்புறம் ஏன் இந்த வேலை யைச் செய்யறே? இப்பவே போய் அவர்கிட்ட கம்ப்ளைண்ட் பண்ண வேண்டியதுதானே! நல்ல பேரு கிடைக்கு மில்ல!"

"ஒருவேளை கிடைக்கற பணம் நல்ல அமௌண்ட்டுன்னா கவர்மெண்ட் ஸ்கூலுக்குப் போய் செட்டில் ஆயிடலாம். அங்க நம்மை யாரும் எதுவும் கேக்க முடி யாதுல்லே. என்னதான் இருந்தாலும் கவர் மெண்ட்டுக்கும், பிரைவேட்டுக்கும் வித்தி யாசமிருக்கே!"

சதாசிவம் வாத்தியாரும், நண்பரும் ஹோட்டல் அறைக்குள் நுழைந்தனர்.

பொற்கேணி பள்ளியின் பிரின்ஸ்பல் அறையில் —

"என்ன விஷயம் சொல்லுங்க வைஸ் பிரின்ஸி!"



"சார்.. சதா சிவம் பத்தி ஒரு தகவல்."

"என்ன தகவல்? அந்த ஆளு பத்தி எனக்கு இன்னும் முழு நம்பிக்கையில்லே. ஆனா சந் தர்ப்ப சாட்சிகள் அவருக்குச் சாதகமாதான் இருக்கு. முன் னாடி நம்ம ஸ்கூல்ல ஒர்க் பண்ணி, இப்ப புரொமோஷன்ல போயிட்டாரே ராகவன்... அதான் சார், அந்த ராகவ்வோட மாமா அவருகிட்ட நம்ம ஹாஸ்டல் மேனேஜர் புலம்பியிருக்காரு! சதாசிவம் அவரை ரொம்ப அவ மானப்படுத்தறாராம். ஆனா

அவர் வேலைக்குப் பிரச்னை ஆயிடப் போவுதுன்னு நம்மகிட்ட சொல்ல பயப்படுறாரு. நமக்கு அவர் மேல சந்தேகம் இருக்குன்னு தெரிஞ்சதால ராகவன் இந்தத் தகவலைச் சொன்னாரு. சதாசிவம் நடவடிக்கையைக் கொஞ்சம் கண்காணிக்கணும்னு தோணுது. எனக்குத் தோன்றதை உங்ககிட்ட சொல்லிட்டேன். இப்ப நீங்க எந்த முடிவு எடுத்தாலும் சரி!"

"ஆமாம். நான் ரெண்டு நாள் முன்னாடி நைட் போன் பண்ணேன். அப்ப சதாசிவம் ஹாஸ்டல்ல இல்லை. ரெண்டு மூணு முறை ட்ரை பண்ணேன். மேனேஜர்தான் பேசினாரு."

"அதுதான். அந்தத் தகவலைச் சொல்லத்தான் மேனேஜர் அவரு ரூமுக்குள்ள போனாராம். அதே மாதிரி கேட்டு இன்னும் போன் வருதாம். ஆனா அவர் இல்லைன்னா யாரு... எங்கிருந்துன்னு கூட சொல்லாம போனை கட் பண்றாங்களாம்."

"சரிங்க! ஆனா இதை வெச்சே அவர் மேல குறை சொல்றது சரியில்லையே!"

"நான் குறை சொல்லலே! அவரைக் கண்காணிக்கணும்னு தோணுது. அதோட நம்ம பிஈடி மோகன் பத்தியும் உங்களுக்குத் தெரியும். அவர் இப்படி செய்யலை! அதெல்லாம் நம்ம பையனுங்க அவங்களா நெட்லயிருந்து தேடி பிரிண்ட் எடுத்து படிக்க வைச்சிருந்த தகவல்ன்னுதான் தெரியுது. நேத்தி இதுக்காகத்தானே அந்தப் பையனும் அவன் அப்பாவும் வந்து பேசிட்டுப் போனாங்க! இன்னும் அந்தத் தகவல் சதாசிவத்துக்குத் தெரியாது. அது தெரிஞ்சா அந்தப் பையன் மேல பாய்வாருன்னு அவங்க அப்பா பயந்துகிட்டே தான் போனாரு. நான் பார்த்துக்கறேன்னு சொல்லி அனுப்பி வைச்சேன்."

இறுதியில், "சரி, பாருங்க, ஆனா ஒரு விஷயம். இப்ப இருக்க சூழல்ல, ஏதாவது எடக்கு மடக்கா நடந்ததுன்னா அது உங்களுக்கும் நல்லதில்லே. நம்ம ஸ்கூலுக்கும் நல்லதில்லே! அதோட எஸ்.பி. கரஸ்பாண்டண்ட்டுக்கும் வேண்டியவர்ன்றதை மனசுல வைச்சிக்குங்க!" என்றார் பிரின்ஸ்பல்.

"இல்லை சார்! நான் எஸ்.பி. கிட்ட இது சம்பந்தமா ஏற்கெனவே ஐடியா கேட்டேன். அவர்தான் நீங்க சொல்றது எல்லாம் சரிதான். அப்படியே பண்ணலாம். ஆனா பிரின்ஸ்பலுக்குத் தெரியாம இப்படி பண்ணக்கூடாது. அவர்கிட்ட மட்டுமாவது சொல்லி பர்மிஷன் வாங்கிடுங்கன்னு சொன்னாரு! நாம நினைக்கறபடி அவர் மாட்டிக்கிட்டா பிரச்னையில்லை. அவர் தப்பு பண்றவர் இல்லைன்னாலும் அது ப்ருவ் ஆகும். இதை நம்ம லெவல்லேயே வைச்சிக்கிடுவோம்ன்னாரு."


"சரி பார்ப்போம். அவரு ஒகேன்னா, ப்ரொசீட்."

"நீங்க சம்மதிக்கறீங்கன்னு அவர்கிட்ட போன் போட்டு சொல்லிடுங்க சார்! அப்பதான் நல்லாயிருக்கும்."


"சரி நான் பேசிடறேன்" என்று போனை எடுத்தார் பிரின்ஸ்பல்.

(அடுத்த இதழில் முடியும்)


குறுக்கெழுத்துப் புதிர் விடை




ஹெலிகாப்டர்கள்   பிரசாத்



1903ஆம் ஆண்டு டிசம்பர் 17ந் தேதி ஆர்வில் ரைட் சக்தி வாய்ந்த முதல் விமானத்தை உருவாக்கினார். அதன் விளைவாக நிறைய பேருக்கு அட்லாண்டிக் பகுதி மேல் வான் பயணம் செய்யும் எண்ணம் ஏற்பட்டது. விரைவிலேயே ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உள்ள வானூர்தியாளர்கள் பல்வேறு வகைகளில் விமானங்களை உருவாக்கினார்கள். ஆர்வில் ரைட்டின் முதல் விமானம் 120 அடி தூரம் மட்டுமே சென்றது. ஆனால் அடுத்த இருபது ஆண்டுகளில் நீண்ட தூரம் செல்லக் கூடியு, கடல்களைக் கடக்கக் கூடிய விமானங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் விமானத்தைத் இறக்குவதில் சில பிரச்னைகள் இருக்கத்தான் செய்தன.







லூயிஸ் பிளெரியாட் ஆங்கிலக் கால்வாயை 1909ஆம் ஆண்டு ஜூலை 25ல் கடந்தார்.

சார்லஸ் லிண்ட்பர்க் அட்லாண்டிக் பெருங்கடலை 1927, மே 20 - 21ந் தேதிகளில் கடந்தார்.

நிறையப் பேர் விமானத்தில் உள்ள பிரச்னையைத் தீர்க்க முயன்றார்கள். ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பால் கோனு என்பவரின் முயற்சி பெருமளவில் வெற்றியடையவில்லை. 1927ஆம் ஆண்டு ஜுவான் தே லா இயர்வாவின் முயற்சி ஓரளவு பலனைத் தந்தது. இவருடைய இயந்திரம் ஆட்டோகிரோ, இதில் சுழலும் விசிறி அமைக்கப்பட்டது.






1940ஆம் ஆண்டு முதல் ஹெலிகாப்டர் வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டது. ரஷ்யாவில் பிறந்த அமெரிக்கர் இகோர் சிக்ரோஸ்கி இதனை உருவாக்கி, ஓட்டினார். அதன் பிறகு தொழிற்சாலையை அமைத்து நிறைய ஹெலிகாப்டர்கள் செய்யப்பட்டன.


ஹெலிகாப்டர் பறப்பது எப்படி?

பிரதான சுழல் விசிறி இயங்கும் போது சக்தி உருவாகி இயந்திரத்தை மேலே தூக்குகிறது. (படம் 1). முன்னோக்கி ஹெலிகாப்டர் செல்லும் போது சுழல் விசிறி சற்று சாய்ந்து செல்கிறது. (படம் 2).

1




2




அந்தரத்தில் சுழல் விசிறி சுழலும் போது எடை சமன் செய்யப்படுகிறது (படம் 3).


4



3





பின்னோக்கிப் பறக்கும் போது சுழல் விசிறி பின்புறமாகச் சாய்கிறது (படம் 4).



ஹெலிகாப்டர்களுக்கு வால் பகுதியில் சிறிய சுழல் விசிறி உள்ளது. இது எதற்கென்றால் பெரிய சுழல் விசிறி சுழலும் போது எதிர் விளைவு ஏற்படும். அப்போது சிறிய சுழல் விசிறி அந்த எதிர் விளைவைத் தடுக்கும். இதனால் ஹெலிகாப்டர் பறக்க முடிகிறது. இல்லையென்றால் ஹெலிகாப்டரும் சுழல் விசிறியுடன் சேர்ந்து சுற்ற வேண்டியது வரும்.


இன்னும் இரண்டு வழிகளில் எதிர்விளைவைத் தடுக்கலாம். முதலாவது, இரண்டு பெரிய சுழல் விசிறிகளை முன்னும் பின்னுமாக அமைக்கலாம். இரண்டாவது, மேலும் கீழுமாக இரண்டு வசிறிகளை அமைத்து, எதிர் எதிர் திசைகளில் சுழல விடலாம். காமோவ் கா - 26 ஹெலிகாப்டர் இத்தகையது.






காமோவ் கா - 26


ஹெலிகாப்டர்கள் பல்வேறு விதங்களில் பயன்படுகின்றன. போக்குவரத்து சாதனங்களை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு விரைவாகவும், சுலபமாகவும் கொண்டு செல்கின்றன. இந்த ரஷ்ய மில் - 6 ஹெலிகாப்டர் 10 டன் எடையை ஏற்றிச் செல்லக்கூடியது.
மில் - 6
வானில் செல்லக் கூடிய டாக்ஸி போல் செயல்படுகிறது. மக்களை ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு அழைத்துச் செல்கிறது. இந்த சிகோர்ஸ்கி எஸ் - 26 ஹெலிகாப்டர் 26 பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடியது.
உயரமான மலை உச்சியை அடையவும், பெருங்கடல்களைக் கடக்கவும், தீப்பிடித்த கட்டடங்களில் இருந்து மக்களை மீட்கும் வேலைகளில் ஹெலிகாப்டர்கள் அரும் பணியாற்றுகின்றன.
மருந்துகளைத் தெளிப்பதற்குக் கூட ஹெலிகாப்டர்கள் பயன்படுகின்றன.


ராணுவத்துக்கும் ஹெலிகாப்டர்கள் உபயோகப்படுகின்றன.
எதிரிகளின் பண்டகள், ஏவுகணைகளை நிலை குலையச் செய்யவும் ஹெலிகாப்டர்கள் உதவுகின்றன.


ஆழ்கடல்களில் எதிரிகளின் நீர் மூழ்கிக் கப்பல்களைக் கண்டறியவும், தாக்கி அழிக்கவும் கூட ஹெலிகாப்டர்கள் பயன்படுகின்றன.




எதிரிகள் நாட்டின் எல்லைக் குள் நுழைந்து விடாமல் கண் காணிக்கவும் உதவுகின்றன.




ஹெலிகாப்டர்களால் நிறைய பயன்கள் இருந்தாலும் விமானத்தை ஒப்பிடும் போது ஒரே ஒரு முக்கியமான குறை இருக்கிறது. அது அதன் வேகம். எனவே ஹெலிகாப்டரின் நல்ல அம்சங்களையும், விமானத்தின் நல்ல அம்சங்களையும் சேர்த்து புது விதமான ஹெலிகாப்டர்கள் உருவாக்கப்பட்டன. இந்தப் புதிய ஹெலிகாப்டரில் விமானத்தைப் போல் இறக்கைகளும், ஹெலிகாப்டரில் உள்ள விசிறியும் இருக்கிறது. இதன் வால் பகுதி மேல் நோக்கி வளைந்திருக்கும். இது விமானத்தைப் போலவே பறந்து செல்லக் கூடியது.



பிரிட்டனின் ரோட்டோடைன் ஹெலிகாப்டரில் சுழல் விசிறியும் விமானத்தில் உள்ள எஞ்சினும் பொருத்தப்பட்டிருக்கிறது.





ஜெர்மனியின் டார்னியா டு - 31 ஜெட் விமானம். இது ஹெலிகாப்டரின் உயரமும், பக்க வாட்டில் விமானத்தின் எஞ்சின்களும் கொண்டது.

ஜானகி மணாளன்



பொற்காசுகள் அறுவடை

பாளையம் அரசர் முன் ஒருவனைக் கொண்டு போய் நிறுத்தினார்கள் காவலர்கள். அவன்மீது இருந்த பல்வேறு குற்றச்சாட்டுகளை, அரசனிடம் எடுத்துக் கூறி, அவனைத் தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

அரசர் பொறுமையுடன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டார். பிறகு, தனது அவையில் இருந்த முதலமைச்சர், சேனாதிபதி, நீதிபதி மற்றும் புரோகிதரை அழைத்து, அவர்களுடன் அக்குற்றச்சாட்டுகளைப் பற்றி கலந்து பேசினார். அவர்கள் கூறிய யோசனையை ஏற்று, அரசர் அவனுக்குத் தூக்குத் தண்டனை விதித்தார்.

ஆனால், அதைக் கேட்டு அவன் சற்றும் கலக்கம் அடையவில்லை. ஏனெனில், அவன் தான் குற்றமற்றவன் ஆயிற்றே! எனவே, தனது வழக்கமான கேலி - கிண்டல் பேச்சுகளுடன் சிரித்துக் கொண்டே தூக்கு மேடை ஏறத் தயாராகி விட்டான்.

தூக்குக் கயிற்றை மாட்டுவதற்கு முன்பு, அவனிடம் வந்த அரசர், "சரி... உன் கடைசி விருப்பம் என்ன..? சொல்.. நிறைவேற்றுகிறேன்..." என்றார்.

அதற்கு அவன், "அரசே! என் மனதில் நீண்ட நாளாக ஓர் ஆசை. நான் சாவதற்கு முன்பு ஒரு 'தடவை வயலில் பொற்காசுகளை விதைத்து, அப்பயிரை அறுவடை செய்து விட்டுச் சாக வேண்டும் என்று விரும்புகிறேன். அதை நிறைவேற்றி வையுங்கள். அது போதும்..." என்றான்.

அதைக் கேட்டு அரசருக்குச் சிரிப்புத்தான் வந்தது. "பொற்காசாவது, பூமியில் விளைவதாவது? எவராலும் அது முடியாத காரியம். நீ வேறு ஏதாவது கேள்..." என்றார் அரசர்.

''இல்லை அரசே! அது என்னால் முடியும்...'' என்ற அவன் ''வாய்ப்புக் கொடுத்துப் பாருங்கள். விளைவித்துக் காட்டுகிறேன். அதுவும் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள்...'' என்று சவால் விட்டான்.

அதற்கு மேலும் அரசரால் மறுப்புச் சொல்ல முடியவில்லை. எனவே, ''அப்படியா? சரி.. அதற்கு என்ன வேண்டும்? சொல் தருகிறேன்'' என்றார்.



உடனே அவன், ''ஒரு மரக்கால் பொற்காசு. அதை விதைக்க ஒரு வயல். இவை இரண்டும் போதும் எனக்கு'' என்றான்.

''சரி'' என்ற அரசர் அவை இரண்டுக்கும் ஏற்பாடு செய்தார். அவன் மரக்கால் பொற்காசுகளோடு வயலுக்குப் போனான். அரசரும் தனது மந்திரிப் பிரதானிகளோடு அவன் கூடவே போனார்.

அங்கு சென்றதும் அவன் சட்டென்று வயலில் இறங்கிப் பொற்காசுகளை விதைக்கத் தொடங்கவில்லை. வரப்பிலேயே சற்று நேரம் நின்று ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

பிறகு ஒரு தந்திரம் செய்தான். ஏதோ திடீரென்று நினைவுக்கு வந்தது போல் நடித்து, "அரசே! ஒரு விஷயத்தைச் சொல்ல மறந்து விட்டேனே'' என்றான்.

''எதுவாக இருந்தாலும் இப்போது சொல்லேன்'' என்றார் அரசர்.

''ஒன்றுமில்லை. பொற்காசுகளை யார் வேண்டுமானாலும் விதைத்து விட முடியாது. பிறந்தது முதல், எவர் ஒருவர் திருட்டு எதுவும் செய்யாதவரோ, அவர் கையால் விதைத்தால் மட்டும் தான் பொற்காசுகள் முளைவிட்டுக் கிளம்பும். மற்ற யார் விதைத்தாலும் வீண் தான், முளைவிடாது. நானோ திருட்டுக் குற்றத்துக்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளவன். என் கையால் விதைத்தால் அது முளைக்காது. எனவே, உங்களுடன் வந்துள்ள மந்திரிப் பிரதானிகளில் எவரை யாவது விதைக்கச் சொல்லுங்கள். அவர்கள் எல்லாம் உத்தமர்கள்... எதற்காகத் திருடியிருக்கப் போகிறார்கள்?'' என்றான்.

அரசன், உடனே தன் அருகில் நின்று கொண்டிருந்த முதலமைச்சரைத் திரும்பிப் பார்த்தார். அவரது பார்வை, 'நீங்கள் போய் விதையுங்கள்...' என்று உத்தரவிடுவது போல் இருந்தது.

உடனே முதலமைச்சர் நடுங்கிப் போய் விட்டார்.

அன்று காலையில்தான் அந்த முதல

மைச்சர் அரசாங்கக் கருவூல அதிகாரியிடம் தெரிவிக்காமல் ஐந்து பொற்காசுகளை எடுத்துத் தன் வீட்டு வேலைக்காரனுக்குச் சம்பளமாகக் கொடுத்து அனுப்பியிருந்தார். அதுவும் ஒரு திருட்டுத்தானே...? எனவே, தன் கையால் பொற்காசுகளை விதைத்தால் அது முளைக்காது என்பது அவருக்குப் புரிந்தது. எனவே, அவர் அரசரின் பார்வையை நேராகச் சந்திக்காமல் வேறு பக்கம் திரும்பிக் கொண்டுவிட்டார்.

அரசனுக்கு அவர் உத்தமர் அல்ல என்பது புரிந்துவிட்டது. எனவே, அடுத்தபடியாக அவர் தனது சேனாதிபதியைத் திரும்பிப் பார்த்தார்.

உடனே, சேனாதிபதிக்கும் தான் அவ்வப்போது செய்யும் திருட்டுகள் பற்றிய எண்ணம் எழுந்தது. அவர் அடிக்கடி அரசின் உபயோகமற்ற ஆயுதங்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று, அவற்றைப் பழைய பொருள் வாங்குபவனிடம் விற்றுக் காசாக்குவார். எனவே, தன் கை விதையலுக்கு அந்தப் பொற்காசுகள் முளைக்காது என்பது அவருக்குப் புரிந்தது. ஆகவே, அவரும் வேறு பக்கம் திரும்பிக் கொண்டுவிட்டார்.

அவரும் உத்தமர் இல்லை என்பதை அரசர் புரிந்து கொண்டார்.

பிறகு அரசர், தனது நீதிபதியைத் திரும்பிப் பார்த்தார். அவருக்கும் தான் செய்த சிறு சிறு திருட்டுகள் பற்றிய நினைவுகள் வரவே, அவரும் மெல்லப் பூனை போல் அங்கிருந்து நகர்ந்துவிட்டார். அதைக் கண்டுவிட்ட அரசர், எவர் தான் உத்தமர் என்று சிந்திக்கலானார்.

பிறகு, கடைசியாக, அரசர் தனது புரோகிதரிடம் "என்ன பண்டிதரே! நீங்கள் என்ன சொல்கிறீர்கள். பொற்காசுகளை விதைக்க நீங்கள் தயாரா?" என்றார்.

உடனே, தடுமாறிப் போன புரோகிதர், சமாளித்தவாறு, "அரசே! நான் விதைக்கத் தயார். ஆனால், அது முளைக்குமா என்பது சந்தேகம் தான். ஏனெனில்...." என்றவரிடம் இடைமறித்த அரசர் "ஏன், நீர் எதைத் திருடினீர்?" என்றார்.

"ஆம் அரசே! நான் சிறுவனாக இருந்த போது, பக்கத்து வீட்டுத் தோட்டத்தில் ஒரு தடவை மாங்காய் திருடித் தின்றதாக ஞாபகம். ஆகவேதான்..." என்று மழுப்பினார்.

எல்லாவற்றையும் கண்ட அரசருக்குத் தன் மேலேயே ஐயம் ஏற்பட்டது. 'நாமும் எப்போதாவது எதையாவது திருடியிருப்போமோ? அப்படியானால் இந்த உலகில் யார் தான் உத்தமன்?' அவரிடம் குழப்பம்.

அதைப் பயன்படுத்திக் கொண்ட அவன் கேலியுடன் உரக்கச் சிரிக்கலானான்.

உடனே அரசர், 'என்ன சிரிப்பு...?' என்பதைப்போல் அவனை முறைத்தார்.

அதற்கு அவன் மிகச் சாதுர்யமாக, "அரசே! திருடர்கள் பலர் கூடி என்னைப் போய்த் திருடன் என்று தூக்கில் இடுகிறீர்களே, இது நியாயமா?" என்றான்.



அரசருக்குப் பதில் சொல்லத் தோன்றவில்லை. மிகவும் அவமானமாக இருந்தது. உடனே, அவர் சட்டென்று, "உன் தூக்குத் தண்டனையை ரத்து செய்கிறேன். உனக்கு விடுதலை. நீ போகலாம்..." என்று உத்தரவிட்டார்.

அவன் செய்த தந்திரத்தால் தலை தப்பியது.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், படக்கதைகள் மட்டுமா? நகைச்சுவைக் கதைகள், புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா *(6 இதழ்கள்)* ரூபாய் *36/-* ஒரு வருட சந்தா *(12 இதழ்கள்)* ரூபாய் *72/-*. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



புதிர் பக்கம்

I. அந்த மாம்பழ வியாபாரியிடம் கூடை நிறைய பழங்கள் இருந்தன. அதில் மூன்றில் ஒரு பங்கை முதல் தெருவிலும், ஐந்தில் ஒரு பங்கை 2ம் தெருவிலும், ஆறில் ஒரு பங்கை 3ம் தெருவிலும், கால் பகுதியை 4வது தெருவிலும் விற்றார். அவ்வளவும் போக அவரது கூடையில் ஐந்து மாம் பழங்கள் மீதியிருந்தன. அப்படியானால் அவரது கூடையில் மொத்தம் எத்தனை பழங்கள் முதலில் இருந்தன என்று கூறுங்கள் பார்க்கலாம்.

— பிரசன்னா, கரூர்

II. 30 அடி கிணற்றில் வசிக்கும் தவளை ஒன்றிற்கு, வெளி உலகைக் காண வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. அது தாவித்தாவி வெளியே வர முயற்சித்தது. ஆனால் அது ஒவ்வொரு முறை 3 அடி தாவும் போதும் 2 அடி சறுக்கி கீழே வந்து விடுகிறது. அப்படியெனில் அது கிணற்றை விட்டு வெளியே வர எத்தனை முறை தாவ வேண்டியிருக்கும்?

— எம். வினோத்,
சங்கரன்கோவில்

III. மூன்று கார்கள் கிளம்பின. அவற்றில் முதல் காரில் ஆண்களும், நடு காரில் குழந்தைகளும், கடைசி காரில் பெண்களும் இருந்தார்கள். அவர்களில் குழந்தைகளே எண்ணிக்கையில் மிகுந்தவர்கள். மொத்தத்தில் ஆண்களும் பெண்களும் சரிபாதியென்றால், குழந்தைகள் மறுபாதி. மற்றொரு வகையில் பார்த்தால், ஆண்களும் குழந்தைகளும் சேர்ந்தால் 14 பேர். பெண்களும் குழந்தைகளும் சேர்ந்தால் 19 பேர். அப்படியெனில் ஒவ்வொரு காரிலும் எத்தனை பேர் இருந்தார்கள்?

— ஏ.எல். சாதிக், காரைக்கால்

IV. அப்பா பட்டணத்திலிருக்கும் வங்கியில் பத்தாயிரம் ரூபாய் பணம் எடுத்து வரச் சொல்லி நல்லுச் சாமியை அனுப்பினார். பணத்தை எடுத்துக்கொண்டு வரும் தருவாயில், யாருமே இல்லாத அந்தக் காட்டுப் பகுதி வழியாக வந்து கொண்டிருந்தபொழுது அவனுக்குத் திருட்டு பயம் உண்டாயிற்று. அவன் பணத்தை இழந்துவிட்டு சென்றானெனில் அப்பா அவனைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு தண்டனைக்குள்ளாக்குவார். அந்தப் பகுதியில் திருடன் இருப்பானெனில் நல்லுச்சாமி திருடனிடமிருந்து அந்தப் பணத்திற்குப் பாதகம் வராது எப்படி காப்பான்?

— எஸ். பிரபு, தேனி

V. வாசு தன் நண்பர்களிடம், "நின்று கொண்டிருக்கும் தந்திக் கம்பத்தைவிட என்னால் அதிக உயரம் தாண்ட முடியும்" என்று பெருமை பேசினான்.

"பத்து ரூபாய் பந்தயம்" என்றனர் நண்பர்கள்.

வாசு சொன்னபடியே தந்திக் கம்பத்தைவிட அதிக உயரம் தாண்டி வெற்றி பெற்றான். வேறு வழியில்லாத நண்பர்கள் பத்து ரூபாய் பரிசாகத் தந்தனர்.

வாசு, தந்திக் கம்பத்தைவிட எப்படி அதிக உயரம் தாண்டி இருக்க முடியும்?

— ஜரினா பானு,
திருபட்டினம்

விடைகள் அடுத்த பக்கம்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

இந்தப் போட்டியிலும் நிறையப் பேர் கலந்து கொண்டனர். அவர்களில் பாதிப் பேர் விடுகதையில் தவறு செய்து விட்டனர். சரியான விடைகளை அளித்தவர்களில் இருந்து 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக் குரியவர் களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சரியான விடை:

1. முதல் கவர்னர் ஜெனரல் — மௌண்ட்பேட்டன் பிரபு
2. கடற்பஞ்சு — பிராணி
3. மிக ஆழமான ஏரி — பைக்கால்
4. சுபத்ரா — அர்ஜுனன்
5. கேசரி — பாலகங்காதர திலகர்
6. தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் கேப்டன் — ஸ்மித்
7. ரயில்
8. குதுப்மினார்

பரிசு பெற்றவர்கள்:

1. டி. அக்ஷிதா வாசுகி, ஐந்தாம் வகுப்பு, செயிண்ட் ஜோசப் ஆங்கிலோ இண்டியன் பெண்கள் மேல் நிலைப் பள்ளி, திருச்சி.
2. எம்.கோமதி பாலா, பதினோராம் வகுப்பு, பா.தொ.ந.உ.க.மேல்நிலைப்பள்ளி, விக்கிரம சிங்கபுரம்.
3. மா. சாணக்கியன், எட்டாம் வகுப்பு, பண்ருட்டி.
4. சா. ஜனனி எஸ்தர், ஒன்பதாம் வகுப்பு, அ.மே.நி.பள்ளி, பொன்பரப்பி, பெரம்பலூர் மாவட்டம்.
5. ஜி. பாரதி, டி.எம். மேல்நிலைப் பள்ளி, நெல்லிக்குப்பம், கடலூர் மாவட்டம்.

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

புதிர் பக்கம் விடைகள்:

I. 120 பழங்கள்

முதல் தெருவில்	40	பழங்கள்
2ம் தெருவில்	25	பழங்கள்
3ம் தெருவில்	20	பழங்கள்
4ம் தெருவில்	30	பழங்கள்
மீதமிருந்தது	5	பழங்கள்
ஆக மொத்தம்	120	பழங்கள்


II. 28. (27 முறை தாவிய பிறகு அது கிணற்றின் அடியிலிருந்து 27 அடி உயரத்தில் இருக்கும். 28வது முறை தாவும் போது அது 30 அடி கிணற்றை விட்டு வெளியே வந்து விடுவதால் மேலும் வழுக்காது).



III. முதல் காரில் 3 ஆண்கள், நடு காரில் 11 குழந்தைகள், கடைசி காரில் 8 பெண்கள்.

IV. அந்தப் பகுதியில் திருடன் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை. எப்படி? அந்தப் பகுதிதான் யாருமே இல்லாத காட்டுப் பகுதியாயிற்றே. அப்படியிருக்கும் பொழுது திருடன் மட்டும் அங்கு எப்படி இருக்கக் கூடும்?

V. வாசு, சிறிது தூரம் தாண்டினான். பிறகு நண்பர்களிடம், "நான் தாண்டியதைவிட அதிக உயரம் இந்தத் தந்திக் கம்பத்தைக் தாண்டச் சொல்லுங்கள்" என்றான். தந்திக் கம்பத்தால் தாண்ட முடியாதே!



பாயசமா, சந்தனமா?

ரங்கன் அதிகம் படிக்கவில்லை! ஆனால் கர்வம் அதிகம். அதற்குக் காரணம் அவனிடம் மூதாதையர் சேர்த்த பெரும் செல்வம் இருந்தது. ஒரு நாள் அவனைக் காண உறவினர் ஒருவர் வந்தார். அவர் நிறையப் படித்த புலவர்.

தோட்டத்தில் நிறைய நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்று மட்டும் குஷன் வைத்து, உயரமாக, கம்பீரமாக இருந்தது. அதில் ரங்கன் அமர்ந்து கொண்டான். மற்றொரு நாற்காலியைப் புலவருக்குக் காட்டினான். இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசினர். புலவர் விடை பெற்றார்.

ரங்கன், "ஐயா! தங்களுக்கு உயரமான, அழகான ஆசனம் போட வில்லையே என்று வருத்தமில்லையே" என்று குத்தலாகக் கேட்டான்.

அவர் 'ஏன் இப்படி செய்தாய்?' என்று கேட்கவில்லையே என்ற வருத்தம். "சேச்சே! காக்கை, குரங்கெல்லாம் மரத்திலே உட்கார்ந் திருக்கிறது. அதற்காக வருத்தப்படுகிறோமா? சேவலுக்குள்ள அழகான கொண்டையும், மயிலைப் போல தோகையும் எனக்கில்லை. அதற்காக நான் ஒரு நாளும் வேதனைப்பட்டதில்லை. காகத்தைப் போல சளசள வென்று பேசாமல் குரங்கைப் போல் சேஷ்டை செய்யாமல் என்னைக் கடவுள் படைத்ததற்கு நன்றி கூறுபவன் நான்" என்று சொல்லிச் சென்றார்.

ரங்கன் முகத்தில் அசடு வழிந்தது.

'நான் ஸ்ரீ கிருஷ்ண வம்சம்' என்று பெருமையடித்துக் கொள் வான் ரங்கன். அவன் இருந்த ஊருக்குக் கதாகாலட்சேபம் பண்ண வந்தார் ஒரு பண்டிதர். அவர் மிகவும் குள்ளமாக இருந்தார். ஆனால் அற்புதமாகக் கதை சொன்னார். கதை முடிந்ததும் எல்லோரும் அவரைப் பாராட்டினர்.



ரங்கன் அவரிடம், ''நீங்கள் அகத்தியர் வம்சமோ?'' என்றான் கிண்டலாக.

பண்டிதர் புன்னகையுடன், ''இருக்கலாம்'' என்றார்.

''அகத்தியர் சமுத்திரத்தைக் குடித்தாராமே! நீங்கள் இந்த அண்டா நீரைக் குடித்துக் காண்பியுங்கள்'' என்றான் அவரை மட்டம் தட்ட.

''நீங்கள் கூட கிருஷ்ணர் வம்சம் என்றார்கள். நீங்கள் மலையைக் குடையாகப் பிடிக்க வேண்டாம்! இந்தப் பிரவசன மண்டபத்தை ஏழு நாள் வேண்டாம். ஏழு நிமிடம் தூக்கிப் பிடித்தால் போதும். அடுத்தாற் போல் நான் அண்டா தண்ணீரைக் குடிக்கிறேன்'' என்று பண்டிதர் கூறவும், ரங்கன் மயங்கி விழுந்தான்.

அதிலிருந்து அவனது கர்வம் அழிந்தது.

ரங்கனுக்கு வெல்லப் பாயசம் என்றால் உயிர். கல்யாணமானதும் இதை மனைவியிடம் கூறினான்.

மறுவீடு சென்றபோது அவள் அதைத் தன் பெற்றோரிடம் கூறினாள். அவர்களும் விருந்தில் வெல்லப் பாயசம் செய்திருந்தனர்.



சாப்பிடும்போது மாமியார் திருப்பித் திருப்பி உபசரிக்க, ரங்கன் பிகு பண்ணாமல் ஏந்தி ஏந்திக் குடித்தான்.

மாமனாரும், மைத்துனர்களும் இரு பக்கங்களிலும் அமர்ந்து "மாப்பிள்ளைக்கு இன்னும் கொஞ்சம் பாயசம் போடு" என வற்புறுத்தினர். ஆனாலும் ரங்கனுக்குத் திருப்தியில்லை.

சாப்பாடு முடிந்ததும் முன் அறையில் பட்டுப்பாய் விரித்து, சந்தனப் பேலா, தட்டில் தாம்பூலம், வாசனைப் பாக்கு எல்லாம் வைத்திருந்தனர். மாமனாரும், ஒரு மைத்துனனும் ரங்கனை அங்கு அழைத்து வந்து அமர்த்தினர். "தாம்பூலம் போடுங்க, மாப்பிள்ளை" என்று உபசரித்தார் மாமனார்.

ஒரு மைத்துனன் வயல் பக்கம் போயிருந்தான்.

"ஐயா, மாடு கன்னு போட்டிருக்கு" என்று பண்ணையாள் வந்து கூப்பிடவும், இன்னொரு மைத்துனன் அவனோடு போனான்.

"மாப்பிள்ளே! கொஞ்சம் உறங்குங்க. நானும் போனாதான் சரிப்படும்" என்று சொல்லிவிட்டு மாமனாரும் போய்விட்டார்.

"எதையும் வேண்டாமின்னு சொன்னா மாமியார் வீட்டைப் புறக்கணிக்கிற மாதிரி ஆயிடும்டா ரங்கா" என்ற அம்மாவின் வார்த்தைகள் அடிக்கடி ஞாபகம் வந்தன.

'சரியாகத்தான் நடந்து கொள்கிறோமா?' என்று ஆராய்ந்தவன் சந்தனப் பேலாவில் இருந்த சந்தனக் கரைசலைப் பார்த்தான். 'அட, நமக்குத் திருப்தியில்லை என்று புரிந்து கொண்டு இங்கே தனியாக வேறு வைத்திருக்கிறார்கள். இதைக் கவனிக்கவேயில்லையே' என்று மளமளவென்று குடித்தான்.

பிறகு வெற்றிலை போட்டுக் கொண்டான். அவனது மனைவி செண்பகம் அங்கு வந்தாள் -

"அட, பேலா காலியாயிருக்கே! இருங்க, எடுத்துட்டு வரேன்" என்று பேலாவைத் தூக்க, அவள் கையைப் பிடித்து நிறுத்திய ரங்கன், "செண்பகம், இப்பத்தான் குடிச்சு முடிச்சேன். போதும். சாப்பிடறப்போ ரொம்ப நல்லா இருந்துச்சு. அப்புறம் பால் விட்டாங்க போலே! இனிப்பு போதலே! கொஞ்சம் துவர்ப்பாகவும் இருந்தது. சீக்கிரம் காலி பண்ணிடச் சொல்லு" எனவும், "அட, ராமா" என்று செண்பகம் தலையில் கைவைத்துக் கொண்டாள்.

● மனித உடலில் சராசரியாக 5 லிட்டர் ரத்தம் இருக்கும்.
— ஆர். பி. ஜெயச்சந்திரன்

உங்களிடமிருந்து...

● "கோகுலம் 20ந் தேதியிலிருந்து 23ந் தேதிவரை வருகிறதா என்று ஒவ்வொரு நாளும் ஆவலுடன் எதிர்பார்ப்போம். கோகுலம் கைக்கு வந்து விட்டால், உடனே ஓவியப் போட்டி அறிவிப்பைத் தான் பார்ப்போம். கொடுத்திருக்கிற தலைப்புக்கு ஏற்றவாறு உடனே படங்களை வரைந்து அனுப்பி விடுவோம்" என்கிறார் காரமடையிலிருந்து அ.முரளி தினேஷ்.

● ஸ்ரீரங்கத்திலிருந்து எம்.எஸ்.கோபால கிருஷ்ணன் "ஜூலை இதழில் வெள்ளைப் புலிகளைப் பற்றிப் படித்தேன். ஒரிசா தலைநகரமான புவனேஷ்வருக்கு 15 கி.மீ. தூரத்தில் நந்தன்கானன் என்ற இடத்தில் அமைந்துள்ள உயிரியல் பூங்காவில் அதிக அளவில் வெள்ளைப் புலிகளைக் காணலாம்" என்கிறார்.

● "திருநெல்வேலி மாவட்ட ஸ்பெஷல் அருமை. நெட் பிட்ஸ் முழுவதும் சுவாரசியமாக இருந்தது. பானை நிறைய பதநீர் கவிதையும் படமும் கொள்ளை அழகு" என்கிறார் வயலூரிலிருந்து பா. அச்சுதன்.



● திசையன்விளையிலிருந்து ஆர்.ஜி.ஹரி, "மணம் வீசும் மலர்கள் படங்களும் செய்திகளும் மனதைக் கவர்ந்தன. துணுக்குகள், ஜோக்ஸ், புதிர்கள் என எங்களுக்குப் பிடித்த பகுதிகள் வருவது குறித்து மிகவும் சந்தோஷம்" என்கிறார்.

● "நெல்லை மாவட்டச் சிறப்பிதழ்கள் இரண்டுமே திருநெல்வேலி அல்வாவைப் போன்று தித்திப்பாக இருந்தன" என்கிறார் வேலாயுதபட்டணத்திலிருந்து சரண்யா தேவி.

● நெய்வேலியிலிருந்து என். கார்த்திகா "கோள் சொல்லி கோவிந்தனைப் படித்ததும் முதலில் எனக்குச் சிரிப்பு வந்தது. கோ. சொ. கோவிந்தன் போல் ஒவ்வொரு பள்ளியிலும் நிறையப் பேர் இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை" என்கிறார்.

● "வாண்டுமாமாவைப் பற்றி என் அப்பா நிறையச் சொல்லியிருக்கிறார். அவர் எழுதிய சில கதைகளையும் படித்திருக்கிறேன். கோகுலம் மூலம் அவரைப் பற்றி நிறைய தகவல்கள் தந்ததற்கு நன்றி" என்கிறார் புதுப் பேட்டையிலிருந்து கே. மாதவன்.

ஓவியப் போட்டி

மழை சீசன் ஆரம்பித்து விட்டது இல்லையா! இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு: **மழை.** மழையில் குடையைப் பிடித்தபடி மனிதர்கள் செல்லலாம்; மழை நீரில் காகிதக் கப்பல்கள் செய்து விடலாம்; தவளைகள், மரவட்டைகள் ஊர்ந்து போகலாம், அல்லது உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். படம் வண்ணத்தில் இருப்பது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை மறக்காமல் எழுதுங்கள்.

கடைசித் தேதி: 7.8.2003

செய்தித் துளிகள்

மதிப்பு மிக்க கௌரவம்

அண்டார்டிகா கண்டத்தில் உள்ள பனி மலைக்கு அண்ணா பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் மு. அனந்த கிருஷ்ணனின் மகன், ஸ்ரீதர் அனந்த கிருஷ்ணனின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அண்டார்டிகாவின் ரூபர்ட் கடற்கரைக்கு அருகில் உள்ளது இப்பனிமலை. அண்டார்டிகாவில் உள்ள பனித் தகடுகள், பனி ஆறுகளின் ஓட்டங்கள், அங்கு ஏற்படும் நில நடுக்கங்கள் பற்றிய ஆராய்ச்சியில் ஸ்ரீதர் அனந்த கிருஷ்ணன் ஆற்றிய பங்களிப்பைப் பெருமைப்படுத்தும் விதமாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இத்துறையில் கௌரவிக்கப்படும் முதல் தமிழர் இவர்.

செவ்வாய் கிரகத்தில் பனிக்கட்டிகள்!

செவ்வாய் கிரகத்தில் பெரும்பாலான பகுதிகளில் பனி உறைந்த நிலையில் இருப்பதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். செவ்வாய் கிரகத்தைப் பற்றிப் பல நாடுகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா குளோபல் சர்வேயர் மற்றும் ஒடிசி என்ற விண்கலங்களைச் செவ்வாய்க்கு அனுப்பியது. இந்த விண்கலங்கள் அனுப்பிய போட்டோக்களில் செவ்வாய் கிரகத்தின் மேல் பரப்பில், தண்ணீர் உறைந்த நிலையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உயிர் வாழ்வதற்கான பிராண வாயுவும், ஹைட்ரஜனும் இணைந்தால் தான் தண்ணீர் உருவாகும். எனவே இந்தக் கிரகத்தில் உயிர் வாழ சாத்தியக் கூறுகள் இருப்பதாக, அரிசோனா பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார். செவ்வாய் கிரகத்தில் வெப்பம் அதிகரித்தால் பனிப்பாறைகள் உருகி தண்ணீர் பயன்படுத்தக் கூடியதாகி விடும்.

கடல் உயிரினங்களுக்கு ஆபத்து!

கப்பலின் அடிப் பகுதியில் பூசப்படும் வர்ணங்களால் கடல் உயிரினங்கள் சிறிது சிறிதாக அழிந்து வருவது ஆராய்ச்சியில் தெரிய வந்துள்ளது. கப்பலின் அடிப் பகுதியில் டிரைடியூட்டலின் அடங்கிய பெயிண்ட்களைப் பயன்படுத்துவதால் அதில் உள்ள நச்சுத் தன்மை கடல் வாழ் உயிரினங்களைப் பாதிக்கிறது. இதனால் கடல் வாழ் உயிரினங்கள் சிறிது சிறிதாக அழிந்து வருகின்றன. மீன் இனங்களிலும் இத்தகைய நச்சுப் பொருள்கள் கலந்து உள்ளதால், அதை உட்கொள்ளும் மனிதனுக்கும் பாதிப்பு ஏற்படும் என தூத்துக்குடி கடல் வாழ் பிராணிகள் ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார்.



நீண்ட ஆயுள்?

சர்வதேச அளவில் நூறு வயதைத் தொட்டவர்கள் அதிக அளவில் வாழ்வது ஜப்பானில் உள்ள ஒகினோவா என்ற பகுதியில்தான். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடத்திய ஆய்வில் ஒரு லட்சம் பேரில் 39.5. சதவீதம் பேர் நூறு வயதைத் தொட்டவர்கள் என்பது தெரிய வந்தது. தற்போது இந்த சதவீதம் இளைஞர்களிடம் குறையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் டின்களில் அடைத்து விற்கப்படும் அமெரிக்க உணவுகள் தான் என்று கூறுகின்றனர்.

வண்ணத் தூரிகை முடிவு



முதல் பரிசு

எஸ். ஸ்ரீவித்யா,
எட்டாம் வகுப்பு,
நகர மேல் நிலைப் பள்ளி,
கும்பகோணம்.

ஆடு பாம்பே...

ஜூலை இதழில் 'பாம்பு' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். நிறைய பாம்புகள் சீறி வந்தன. அதில் பரிசு பெற்ற பாம்புகள் உங்கள் பார்வைக்கு...



இரண்டாம் பரிசு

எஸ். சுஷில்,
எட்டாம் வகுப்பு,
பி.ஆர். சித்தா நாயுடு நினைவு
மெட்ரிக்குலேஷன் பள்ளி, கோவை.



மூன்றாம் பரிசு

டி. இலக்கியா,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ வெங்கடாசலு மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, கோவை.



ஆறுதல் பரிசு

எஸ். பாரதி,
எட்டாம் வகுப்பு,
பி.எம்.ஜி. மெட்ரிக்குலேஷன் பள்ளி,
கோவை.



ஆறுதல் பரிசு

ஈ.ரலீன் ஜேகப்,
எட்டாம் வகுப்பு,
அனிதா குமரன் மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி,
தண்டுபத்து.

விம்பிள்டன் சாம்பியன்கள்!

பரபரப்பாக நடந்து முடிந்துள்ளது விம்பிள்டன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டிகள். இதில் மகளிர் ஒற்றையர் பிரிவில் அனைவரும் எதிர்பார்த்த செரீனா - வீனஸ் ஜோடி இறுதி ஆட்டத்தில் மோதியது. ஜூலை 5ந் தேதி நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் 4-6, 6-4, 6-2 என்ற செட் கணக்கில் வீனஸை, செரீனா வீழ்த்தினார். தர வரிசையில் முதல் இடத்தில் உள்ள செரீனா இரண்டாவது முறையாக விம்பிள்டன் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியிருக்கிறார்.

இரண்டு மணி நேரம் நடைபெற்ற ஆட்டத்தின் இறுதியில் தனது சகோதரியைத் தோற்கடித்தார் செரீனா. இதன் மூலம் செரீனாவுக்கு 4 கோடியே 22 லட்சம் ரூபாய் பரிசாக வழங்கப்பட்டது. கடந்த ஆண்டும் செரீனா வீனஸை 7-6(7-4), 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டம் ஜூலை 6ந் தேதி நடைபெற்றது. இதில் ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் ஃபெடரரும் ஆஸ்திரேலியாவின் மார்க் ஃபிலிப் போஸிஸூம் மோதினர்.


தரவரிசையில் நான்காவது இடத்தில் இருக்கும் ஃபெடரர் ஒரு மணி நேரம் 56 நிமிடங்களில் 7-6 (7-5), 6-2, 7-6 (7-3) என்ற செட் கணக்கில் மார்க் பிலிப் போஸிஸை வென்றார்.

கிராண்ட் ஸ்லாம் போட்டி ஒன்றில் பட்டம் வெல்லும் முதல் ஸ்விட்சர்லாந்து வீரர் ஃபெடரர். இவருக்குப் பரிசுத் தொகையாக 4.51கோடி கிடைத்துள்ளது.

1998ஆம் ஆண்டு விம்பிள்டன் ஜூனியர் பட்டத்தை வென்றார் ஃபெடரர். தற்போது சீனியர் பட்டத்தையும் வென்றுவிட்டார். ஜூனியர் மற்றும் சீனியர் பட்டங்களை வென்ற நான்காவது வீரர் ஃபெடரர்.



• செரீனா


• ஃபெடரர்


• பயஸ் மார்ட்டினா

40-41ஆம் பக்கங்களில் விம்பிள்டன் சாம்பியன்கள் போஸ்டர் உங்களுக்காக.

கலப்பு இரட்டையர் இறுதிப் போட்டியில் மார்ட்டினா நவரத்திலோவா - லியாண்டர் பயஸ் ஜோடி பட்டம் வென்றுள்ளது.


ஆசையும் கோபமும்!
கதை: ஆர். சாரதா, சென்னை.
படம்: மகேஸ்
ராஜவர்மனுக்கு முன் கோபம் அதிகம். ஒரு நாள் —
நான் உலகில் உள்ள அனைத்து ராஜ்யங்களையும் வெல்லனும்.
மன்னா, அது முடியாதது மட்டுமில்லை; தேவையில்லாததும் கூட.
என்னால் கண்டிப்பாக முடியும்.
நீங்கள் நம் ராஜகுருவிடம் ஆலோசனை கேளுங்கள் அரசே!
மன்னன் ராஜகுருவிடம் தன் எண்ணத்தை வெளிப்படுத்தினான்.
அரசே, நீங்கள் முன் கோபக்காரர். கோபம் வந்தால் நல்லது, கெட்டது தெரியாது. கோபத்தை அடக்கி விட்டுவாருங்கள். யோசனை சொல்கிறேன்.
சில நாட்களில் அரசன் மீண்டும் ராஜ குருவைச் சந்தித்தான்.
குருவே, என் கோபம் அடங்கி விட்டது. உங்கள் யோசனையைச் சொல்லுங்கள்.
நேரம் நகர்ந்தது. குரு அமைதியாக இருந்தார்.
பதிலளிக்காமல் என்னை அவமதித்த உங்களின் யோசனை எனக்கு வேண்டாம்.
உங்கள் கோபக் குணம் இன்னும் மாறவேயில்லை. கோபத்தை அடக்க முடியாத நீங்கள் உலகை வெல்வது எப்படி?
போரிடும் ஆசையை விட்டுவிட்டு உங்கள் நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்யுங்கள்.
புரிந்தது குருவே, வருகிறேன்.




• அழகப்பர்

கல்வி வள்ளல்

1947ம் வருடம். ஜூலை மாதம். அடிமைச் சங்கிலியிலிருந்து விடுபடப் போகும் உற்சாகத்தில் இருந்தது நாடு. சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் நிர்மாணத் திட்டங்கள் தலைவர்களால் கூட்டங்களில் பட்டியலிடப்பட்டன. "எல்லோருக்கும் கல்வி கற்க வசதி செய்து தர வேண்டும்; தரமான நல்ல கல்வி மட்டுமே, மக்களையும், நாட்டையும் உயர்த்தும்" என்று கல்வியாளர்கள் முழங்கினார்கள். அந்தக் கால கட்டத்தில் சென்னை கலாஷேத்ராவில் அன்னி பெசண்ட் அம்மையார் நினைவு நாள் விழா ஒன்று நடந்தது. முக்கியப் பேச்சாளர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்த டாக்டர் ஏ.எல். லட்சுமணசாமி முதலியார் மற்றும் தொழிலதிபர் அழகப்பர்.

அந்த நிகழ்ச்சிக்கு சிறிது நாட்கள் முன்பு ஒரு விபத்தில் சிக்கி, உடல் நலமில்லாமல் இருந்தார் அழகப்பர். எனவே விழாவுக்குப் போவதா, வேண்டாமா என்ற ஊசலாட்டம் அவருக்குள் இருந்தது. இறுதியில் "அன்னிபெசண்ட் விழாவாயிற்றே... துணை வேந்தர் அல்லவோ பேசுகிறார்" என்று கிளம்பி விட்டார் அழகப்பர். அந்தநாள் காரைக்குடி நகரத்தின் மேல் கடவுள் கருணை காட்டிய நல்ல நாளாக அமைந்து விட்டது தான் விசேஷம். அன்னிபெசண்ட் பற்றிப் பேசிய துணை வேந்தர், கல்வி வசதிகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை உருக்கமாக விளக்கிப் பேசினார். "எல்லாவற்றையும் சுதந்திர அரசாங்கமே செய்யும் என்று எதிர்பார்க்கக் கூடாது; வசதியுள்ளவர்கள், பின் தங்கிய மாவட்டங்களில் கல்லூரிகளைத் துவக்க முன் வர வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.



• காந்தியுடன்...



• நேருவுடன்...

துணை வேந்தரின் பேச்சில் இருந்த ஆதங்கமும், ஆர்வமும், அழகப்பரைத் தொற்றிக் கொண்டன. உடனே காரைக்குடியில் கலைக் கல்லூரி கட்ட ஒரு லட்ச ரூபாய் நன்கொடை தருவதாக அப்போதே சொன்னார் அழகப்பர். அடுத்த நாளிலிருந்தே காரைக்குடியில் கிடுகிடுவென்று கல்லூரிக்கான வேலைகள் துவங்கின. ஐந்தே வாரங்களில், 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பதினைந்தாம் தேதியன்று — காரைக்குடியில் 149 மாணவ, மாணவியருடன் கலைக் கல்லூரி துவங்கப் பட்டது. அது ஒரு பிள்ளையார் சுழிதான்.

அடுத்த பத்து வருடங்களில் பொறியியல் கல்லூரி, மகளிர் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஆதாரப் பள்ளி, ஆயத்தப் பள்ளி, உடற்பயிற்சிக் கல்லூரி, மாண்டிசொரி பள்ளி என்று அழகப்பரது முயற்சியால் காரைக்குடி 'கல்விக்குடி' ஆகிவிட்டது. இது மட்டுமா? விஞ்ஞானத்தில் ஆழ்ந்த பற்றுடைய அழகப்பர், காரைக்குடி வட்டாரத்தில் ஆய்வு நிலையம்

ஒன்றை அமைக்க விரும்பினார். அன்றைய பிரதமர் ஜவாஹர்லால் நேரு அழகப்பரின் நண்பர். இருவரும் இணைந்து திட்டம் போட காரைக்குடிக்கு வந்தது மத்திய மின் வேதியியல் ஆய்வுக் கழகம். இந்தக் கழகம் அமைவதற்கு 300 ஏக்கர் நிலத்தைக் கொடுத்தது மட்டுமல்லாமல், பதினைந்து லட்சம் நன்கொடையும் வழங்கினார் அழகப்பர். தமிழகத்தை முன்னேற்றியவர்களின் வரலாற்றில் அழகப்பரின் பெயர் நிரந்தரமாக இடம் பெற்றிருக்கிறது. தன் சொந்தப் பணத்தில் ஏராளமான கல்வி நிறுவனங்களை உருவாக்கிய அவரை 'வள்ளல் அழகப்பர்' என்று கொண்டாடினார்கள் மக்கள்.

காரைக்குடியில் இருந்து ஆறு கி.மீ. தொலைவில் இருக்கும் கோட்டையூர் என்ற கிராமத்தில் பிறந்தவர் அழகப்பர். உயர்நிலைப் பள்ளி வரை காரைக்குடியில் முடித்த அழகப்பருக்கு மேல் படிப்புப் படிக்க கொள்ளை ஆசை. ஆனால் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தில் லேவாதேவி தொழில் என்பது பரம்பரை பரம்பரையாக நடந்து வரும் ஒன்று. எனவே அழகப்பரின் தந்தையும், மகன் லேவாதேவி தொழிலில் ஈடுபட வேண்டுமென்று விரும்பினார். அழகப்பர் உடனே அவரது பெரியப்பாவின் உதவியை நாடினார். பெரியப்பா அழகப்பரின் தந்தையிடம் வாதாடி, அவரை சென்னை மாநிலக் கல்லூரியில் சேர்த்து படிக்க வைத்தார். மாநிலக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு முடித்தும் அழகப்பருக்குத் திருப்தியில்லை. லண்டனுக்குச் சென்று சட்டத் துறையில் பாரிஸ்டர் படிப்பை முடித்து, சென்னை திரும்பினார். சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பதிவு செய்தும் அழகப்பர் அந்தத் தொழிலில் ஆர்வம் காட்டவில்லை.

ஒரு தொழிலதிபராக உருவாக வேண்டும் என்ற எண்ணத்தில் கொச்சியில் நூற்பாலைகளைத் துவக்கினார். பங்கு மார்க்கெட் வியாபாரத்தில் சக்கைப் போடு போட்டார். மிக அதிக முதலீடும், சிக்கல் நிறைந்ததுமான விமானத் தொழிலிலும் குதித்தார் அழகப்பர். சென்னை – தில்லி விமான சர்வீஸ் நடத்தினார். சுமார் பத்து வருடக் காலத்தில் கோடிக் கணக்கில் சம்பாதித்தார் அழகப்பர். ஆனாலும் மனம் ஏனோ திருப்தியில்லாமலேயே இருந்தது. சமுதாயத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற உந்துதல் உறுத்திக் கொண்டே இருந்தது. அந்தச் சமயத்தில்தான் அன்னிபெசண்ட் நினைவு நாள் நிகழ்ச்சியில் டாக்டர் லட்சுமணசாமி முதலியாரின் பேச்சைக் கேட்டு, அழகப்பரின் கவனம் முழுவதும் காரைக்குடிப் பகுதியில் கல்வி முன்னேற்றத்தைக் கொண்டு வருவதில் திரும்பியது.

அழகப்பருக்குத் தெரியாத தேசியத் தலைவர்களே இல்லை என்று சொல்லலாம். ஒருமுறை அழகப்பருக்கு உடல் நலமில்லாமல் போக, அது சரியாக வேண்டுமென்பதற்காக காந்தி மூன்று நாள் உண்ணா விரதம் இருந்து பிரார்த்தனை செய்தாராம். இதிலிருந்து காந்தியடிகள் அழகப்பரிடம் எத்தனை பாசம் வைத்திருந்தார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். ராஜாஜிக்கும் அழகப்பருக்கும் இருந்த உறவு,



• ராதாகிருஷ்ணனுடன்...

தந்தை - மகன் போன்றது. தனது திட்டங்களை ராஜாஜியிடம் சொல்லி, அவரது ஆலோசனைகளைத் தவறாமல் பெறுவார் அழகப்பர்.

அழகப்பரின் கோபம் நீர்க்குமிழி போன்றது. திட்டமிட்டபடி காரியங்கள் நடக்கா

விட்டால் கோபம் வரும். அதற்குக் காரண மானவர்களைத் திட்டித் தீர்த்து விடுவார். அப்புறம் சிறிது நேரத்துக்குப் பிறகு அந்த நபரைக் கூப்பிட்டு, சமாதானப்படுத்தி, 'தான் ஏன் கோபப்பட்டேன்' என்று அவருக்கு விளக்குவார். நகைச்சுவை உணர்வும் அவருக்குண்டு. அவரது இறுதி நாட்களில் கிட்டத் தட்ட ஒரு வருடம் படுக்கையிலேயே இருந்தார். அப்போ தும் நகைச்சுவைக்குப் பஞ்சமில்லை.

எப்போதும் பய ணத்திலேயே இருப்பார் அழகப்பர். அவரே ஒரு நடமாடும் அலுவலகம். அவ்வளவு வசதியிருந் தும், வெளி நாட்டுக்குச் சென்றால் சாதாரண விடுதியில் தான் தங்குவார். 'ஏன் இப்படி?' என்று கேட் டால் "எனது செலாவணியை மிச்சப்படுத்தி, வெளிநாடுகளில் கிடைக்கும் விளையாட்டு பொம்மைகளை வாங்கிக் கொண்டு செல்வேன். எனது ஊரில் உள்ள மாண்டிசொரி பள்ளியில் உள்ள குழந்தை கள், இந்த வெளிநாட்டு பொம்மைகளை வைத்து விளையாடும் போது எனக்குக் கிடைக்கும் சந்தோஷமே தனி" என்பார் அழகப்பர். தனக்குத் தலைவர்கள், அதி காரிகள் ஆகியோரை நன்கு தெரிந்திருந் தாலும், தலைமைச் செயலகத்துக்குப் போனால் தனது கல்வி நிறுவனம் சம்பந்தப் பட்ட விஷயங்களுக்குக் கொஞ்சமும் கௌரவம் பார்க்காமல் குமாஸ்தாவை அணுகி, கோப்பை நகர்த்தி மேலே கொண்டு செல்வார் அழகப்பர். மகள் கல்யாணத்தையொட்டி சென்னை மற்றும் அண்ணாமலை பல்கலைக் கழகங்களுக்கு, ஐந்து லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத் தார் அழகப்பர். மகளிர் கல்லூரி உருவாக்க அனுமதி கிடைத்தவுடன், உடனடியா கக் கோட்டையூரில் இருந்த மாளிகை போன்ற தனது வீட்டை கல்லூரி துவங்கக் கொடுத்து விட்டார். சொந்த ஊரான கோட்டையூருக்கும் காரைக்குடிக்கும் இடையிலுள்ள ஆறு கி.மீ. தூரமும் இப்போது கல்வி நிலையங்களாகவே காட்சி தருகின்றன.



• ராஜாஜியுடன்...

அவரது இறுதி நாட்களை படுத்த படுக்கையாகவே கழிக்க நேர்ந்தது. அப்போதும் அவர் பேச்சு, மூச்சு எல்லாமே அவர் உருவாக்கிய கல்வி நிலையங்களைப் பற்றியதாகவே இருந்தது. தன்னைப் பார்க்க வரும் மத்திய அமைச்சர்கள், தலைவர்கள் ஆகியோர்களிடம், அவர் விடாமல் வற்புறுத்தியது, 'தான் உரு வாக்கிய கல்வி நிலையங்களை ஒருங்கி ணைத்து மத்திய பல்கலைக் கழகம் உரு வாக்க வேண்டும்' என்பதுதான் அவரது ஆசை. அவரது ஆயுட்காலத்தில் அந்த எண்ணம் நிறைவேறவில்லை. இருபத் தெட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் காரைக் குடியில் அவரது பெயராலேயே பல்கலைக் கழகத்தை உருவாக்கினார் அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆர். நீண்ட காலம் அழகப்பர் வாழ்ந்திருப்பாரேயானால், தமிழகம் மேலும் பல கல்வி நிலையங் களைக் கண்டிருக்கும்.

— ப்ரியன்



உருண்டு திரண்ட பானை!



குழைச்சு வச்ச களி மண்ணில்
குயவன் செய்த பானை.
உழைக்கும் கையின் ஆற்றலால்
உருண்டு திரண்ட பானை.

சுற்றும் வட்டச் சக்கரம்
சுழன்று முழுமை யாக்கும்.
தொட்டுத் தட்டிப் பார்க்கையில்
தாள ஓசை எழுப்பும்.

அடுக்க டுக்காய் வீட்டிலே
அடுக்கும்போது உயரும்.
அடுப்பில் சாதம் சமைத்திட
அனலைத் தாங்கும் பானை.



தொப்பை வயிறு போலவே
தோன்றும் பெரிய யானை.
செப்பில் செய்து சின்னதாய்
சிறுவர் கையில் இருக்கும்.

குழந்தை விளை யாட்டிலே
கன்னம் உப்ப வைத்து
அழகு மின்னும் பானையாய்
அதனைக் காட்டும் பிள்ளை.

சி. விநாயக மூர்த்தி

திக்கான ஆரோக்யாவின் ரகசியம்...

கறந்த பாலில் இருந்து துளி கூட வெண்ணெயைக் கடைந்து எடுக்காதது தான்.

டோன்ட் மற்றும் 7 ரூபாய் பாக்கெட் பால் ஏன் திக்காக இருப்பதில்லை ?

பொதுவாக, கறந்த பாலில் இருந்து 33%க்கும் மேல் வெண்ணெயை கடைந்தெடுத்து விடுகிறார்கள்.

இதனால்தான் அந்தப் பாலெல்லாம் திக்காக இருப்பதில்லை. அப்படி கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெயைத் தான், பால் பொருட்களாக தனியாக விற்பனை செய்கிறார்கள்.

ஆரோக்யா மில்க் ஏன் திக்காக இருக்கிறது ?

கறந்த பாலில் இருந்து துளி கூட வெண்ணெயை எடுக்காமல், அப்படியே வழங்குவதால்தான் ஆரோக்யா மில்க் திக்காக இருக்கிறது.

- ISO 9001 தரச் சான்றிதழ் பெற்ற டெய்ரிகளில், கடுமையான தரக் கட்டுப்பாட்டு சோதனைகளுக்குப் பின் விற்பனைக்கு வருகிறது ஆரோக்யா.
- 30 ஆண்டுகளாக அருண் ஐஸ்க்ரீம்ஸ் தயாரிக்கும், ரூ.330 கோடி ஹட்சன் நிறுவனம் வழங்குகிறது ஆரோக்யா.
- லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளிடமிருந்து தர அடிப்படையில் நேரடியாக கறவைப் பால் சேகரிப்பு.
- அமெரிக்க மற்றும் ஜெர்மன் டெக்னாலஜி மூலம் பாலின் தரம் மேம்படுத்தப்படுகிறது.
- இணையற்ற முறையில் ஹோமோஜெனைஸ் செய்யப்படுவதால் ஆரோக்யா திக்காக இருக்கிறது.
- மக்கள் சேவையில் 10 ஆண்டுகளாக, 13 லட்சத்துக்கும் மேற்பட்ட இல்லத்தரசிகள் நம்புவது ஆரோக்யா.
- MMPO எனும் மத்திய அரசாங்க உரிமம்.
- சுற்றுப்புற சூழலுக்கான HACCP சான்றிதழ்.





ஆரோக்யா

ஸ்டாண்டர்டைஸ்டு மில்க்

இந்த வார ஆரோக்யா மில்க் பாக்கெட் வாங்க தொடர்பு கொள்ளுங்கள் : 2815 0099

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 * Registered as a Newspaper in Srilanka